24 மணி நேரமும் உடனுக்குடன்
செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 28
விலை: 30

சுடர் 34 கதிர் 62 தை 14ஆம் நாள் திங்கட்கிழமை 28 ஜனவரி 2019 வள்ளுவர் ஆண்டு 2049

நான் ரெடி: நீங்கள் ரெடியா?

ரணிலைப் பார்த்துக் கேட்டாராம் கோத்தா

கொழும்பு, ஜன. 28
அரச தலைவர் தேர்தலில் களமிறங்க நான் தயாராகவே உள்ளேன். நீங்கள் தயாரா? இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை நேரில் பார்த்துக் கேட்டுள்ளார் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ச. >> 04

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி அடுத்த மாதம் ஆரம்பம்

3 ஆண்டுகளில் நிறைவு செய்ய எதிர்பார்ப்பு

கொழும்பு, ஜன. 28
இந்தியாவின் நிதியுதவியுடன் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தித் திட்டம் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தியாவின் 45.27 மில்லியன் டொலர் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தத் திட்டம் மூன்று ஆண்டுகளில் நிறைவடையும்.
கடற்படையின் வசமுள்ள காங்கேசன்துறை துறைமுகம், இந்தத் திட்டத்தின் மூலம், சரக்குகளைக் கையாளக் கூடிய துறைமுகமாக மாற்றப்படும். >> 04

பால்மா விலையை அதிகரியுங்கள் இல்லையேல் இறக்குமதி நிறுத்தம்

அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 28
பால்மா வகைகளின் விலையை அதிகரிக்காவிடின் அடுத்த மாதம் தொடக்கம் அதன் இறக்குமதியை இடைநிறுத்தப் போவதாக பால்மா இறக்குமதி நிறுவனங்கள் அரசுக்குத் தெரிவித்துள்ளன.
டொலரின் பெறுமதி அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களைக் குறிப்பிட்டு இறக்குமதியாகும் பால்மாவின் விலையை அதிகரிக்குமாறு இறக்குமதி மொத்த வியாபாரிகளால் அரசிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. நிறுவனங்களின் கோரிக்கையை நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை நிராகரித்தது.
இந்த நிலையிலேயே தற்போது நாட்டில் உள்ள பால்மா கையிருப்பை விற்பனை செய்வது என்றும் இறக்குமதியை இடைநிறுத்துவதாகவும் பால்மா >> 04

மைத்திரி - மகிந்த அரசியலுக்கு முடிவுகட்டுவேன்

சந்திரிகா சீற்றம்

கொழும்பு, ஜனவரி 28
ஆட்சியைப் பிடிக்கத் துடிக்கும் கொலைகார ராஜபக்ச கும்பலுடன் கைகோர்த்துள்ள மைத்திரி அணியின் அரசியலுக்கு முடிவுகட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உண்மையான உறுப்பினர்கள் தயாராகி விட்டார்கள். அவர்களுக்கு நான் உதவுவேன். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் சந்திரிகா தெரிவித்தார். >> 04

கொழும்பு – காங்கேசன்துறை 'உத்தர தேவி' சேவை நேற்றுமுதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 28
கொழும்பிலிருந்து நேற்றுக் காலை 6 மணிக்குப் புறப்பட்ட உத்தரதேவி தொடருந்து மதியம் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் தொடருந்து நிலையத்தை வந்தடைந்தது.
காங்கேசன்துறைக்கான உத்தரதேவி தொடருந்து சேவையை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்தில் நேற்றுக் காலை 6 மணிக்கு ஆரம்பித்து வைத்தார். ஆரம்ப நிகழ்வில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, இந்தியத் தூதுவர் தரன்ஜித்சிங் சந்து உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். >> 04

வாள்களுடன் இளைஞர்கள் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஜன. 28
யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு வாள்வெட்டுச் சம்பவங்களுடன் >> 04

தமிழர்கள் ஒருமித்த நாட்டுக்குள் தீர்வுகோர ஐ.தே.க. மீதான நம்பிக்கையே காரணம்

கட்சியின் தவிசாளர் கபீர் ஹாசிம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 28
எம்மை பிரிவினைவாதிகளாக சித்தரித்து ராஜபக்சவினர் ஆட்சி செய்யப் பார்க்கின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியின் மீதான நம்பிக்கையில்தான் தமிழர் தலைமைகள் ஒருமித்த நாட்டுக்குள் தீர்வு கேட்கின்றனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் அமைச்சருமான கபீர் ஹாசிம் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாம் ஆட்சிக்கு வந்தவுடன் தமிழர்களுக்கு எம்மீது நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. ஒருமித்த நாட்டுக்குள் அனைவரும் ஐக்கியமாக வாழ முடியும் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. போரை வெற்றி >> 04

ரிக்கெட் இல்லாதவர்களை பிடிக்கப்போகிறார்கள்

மைத்திரியின் நகைச்சுவை

கொழும்பு, ஜன. 28
இப்போது மருதானையில் இறங்கியவுடன் ரிக்கெட் இல்லையென எல்லோரையும் பிடிக்கப் போகின்றார்கள். நான் யாரையும் >> 04

பிரிகேடியர் பிரியந்தவுக்காக இலங்கை ராணுவம் களத்தில்

பிடியாணையை மீளப் பெறுமாறு பிரிட்டன் நீதிமன்றில் விரைவில் மனு

பக்கம் - 13

மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சமூர்த்தி அலுவலர் இடைநிறுத்தம்

பக்கம் - 09

ஞாயிற்றுக் கிழமைகளில்

தனியார் வகுப்புக்கள் நடத்துவதை தடைசெய்யும் சட்டவரைவு விரைவில்

நுவரெலியா, ஜன. 28

ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் வகுப்புக்கள் நடத்துவதைத் தடைசெய்யும் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கப்படும். இந்தச் சட்டவரைவை நிறைவேற்றுவதன் ஊடாக அறநெறிப் பாடசாலைகளில் பிள்ளைகளை அதிகளவில் கலந்து கொள்ளச் செய்யமுடியும். இவ்வாறு சிறப்புப் பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியா இந்து கலாசார பேரவையின் பொங்கல் விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நுவரெலியா ஹாவேலியா சிறி முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றக் கட்டிடத் தொகுதியில் அண்மையில் கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் நானும் அமைச்சர் மனோ கணேசனும் கலந்து கொண்டோம். எங்களைத் தவிர வேறு மதங்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற வகையில் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும்

கலந்து கொண்டார்கள்.

இந்தக் கூட்டமானது சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்றத்துக்கு மிக விரைவில் ஞாயிற்றுக்கிழமைகளில் சிறப்பு வகுப்புகளை நடாத்துவதைத் தடை செய்யும் வகையில் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் ஏகமனதாகத் தீர்மானித்தனர். அந்தந்த மதத்தை பிரதி பலிக்கின்ற வகையில் ஞாயிற்றுக் கிழமைகளில் சிறப்பு மதச் சார்பான வகுப்புகள் ஆலயங்களிலும் பள்ளிவாசல்களிலும் விகாரைகளிலும் கிறிஸ்தவ தேவாலயங்களிலும் நடைபெற்று வருகின்றன. இந்த வகுப்புகளுக்கு செல்லும் மாணவர்கள் எண்ணிக்கை குறைவானது. ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறுகின்ற தனியார் வகுப்புகளே இதற்குக் காரணம். கட்டாயமாக அறநெறி வகுப்புகளுக்கு மாணவர்கள் சென்று வரவேண்டியது காலத்தின் கட்டாயமாகும் - என்றார். (ஒ.5)

எங்கள் வழி தனி வழி

இப்படிச் சொல்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜன. 28

மக்கள்விடுதலைமுன்னணி சவாலான நிலைகளிலும் எவருடனும் கூட்டணியமைத்துக் கொள்ளாது தனித்தே அரசியலில் செல்வாக்குச் செலுத்தியது. இதுரையில் நாங்கள் ஊழல்வாதிகளுடனும், குற்றவாளிகளுடனும் கைகோர்த்ததில்லை. இவ்வாறு அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பொதுமக்கள் முன்னணி அமைக்கவுள்ள புதிய கூட்டணியில் மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து கொள்ளும் என்று, பொதுமக்கள் முன்னணி தெரிவித்துள்ளமை தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

'மக்கள் விடுதலை முன்னணியினரை கூட்டணிக்கு பொதுமக்கள் முன்னணியின் தலைமைத்துவம் உத்தியோகப்பூர்வமாக அழைத்தால் அதற்குத் தகுந்த பதிலை வழங்குவோம். பொதுமக்கள் முன்னணியினர் முதலில் தாங்கள் எந்தக் கட்சி உறுப்பினர்கள் என்பதை நாட்டு மக்களுக்கு முறையாக அறிவிக்க வேண்டும். அதன் பின்னரே பிற கட்சியினரை தங்களுடன் கூட்டணியமைத்துக் கொள்ளுமாறு அழைப்பு விடுக்க வேண்டும்' - என்றார். (ஒ.5)

சுயாதீன விசாரணைக்கு நான் எப்போதும் தயார்

வெல்கம அறிவிப்பு

கொழும்பு, ஜன. 28

போக்குவரத்து அமைச்சராக பொறுப்பிலிருந்த காலத்தில் இலங்கைப் போக்குவரத்து சபைப் பேருந்துகளை பெற்றுக் கொண்ட முறைமையில் முறைக்கேடுகள் இடம் பெற்றிருந்தால் கோப் குழுவினர் ஆதாரத்துடன் முன்வைக்க வேண்டும். சுயாதீனமான விசாரணைகள் இடம்பெறுமாயின் முழுமையான ஒத்துழைப்புக்கள் வழங்கவும் தயாராக இருக்கின்றேன். இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

2013ஆம் ஆண்டு மற்றும் 2014ஆம் ஆண்டு காலப் பகுதியில் போக்குவரத்து அமைச்சர் என்ற பொறுப்பில் இருந்த போது இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு பேருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டன. எவ்விதமான நிதி உதவியும் எந்தத் தரப்பிலிருந்தும் வழங்கப்படவில்லை. மாதாந்தக் கொடுப்பனவுகள் ஊடாகவே பேருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டன. அமைச்சரவை அனுமதியும் கிடைக்கப் பெற்றது. இந்தக் காலப் பகுதிகளில் 18 பேருந்துகள் இலவசமாகக் கிடைக்கப் பெற்றன என்பது உண்மைக்குப் புறம்பானது - என்றார். (ஒ.5)

ஜே.ஆர். வழியில் ரணில்

சாடுகிறது சு.க.

கொழும்பு, ஜன. 28

ஜே.ஆர்.ஜெயவர்தன எவ்வாறு தேர்தல்களை நடத்தாது காலத்தைக் கடத்தி தனது ஆட்சியைத் தக்க வைக்க நினைத்தாரோ அதேபோன்று ரணில் விக்கிரமசிங்கவும் மக்கள் உரிமையைப் பறித்து வருகின்றார் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தல்களைக் கோரி எதிர்க்கட்சிகள் அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்ற நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்பாடுகள் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

மாகாணசபைத் தேர்தலை நடத்தும் வரையில் அரசுக்கு அழுத்தம் கொடுப்பதோடு அரசை எதிர்த்து மக்கள் எதிர்ப்பு போராட்டங்களையும் பேரணிகளையும் முன்னெடுப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ.5)

அமைச்சரவையில் மாற்றம்வேண்டும்

ஐ.தே.க. பின்வரிசை எம்.பிக்கள் கோரிக்கை

கொழும்பு, ஜன. 28

எதிர்வரும் மார்ச் மாதம் சமர்பிக்கப்படவுள்ள வரவு - செலவு திட்டத்துக்கு முன்னர் அமைச்சரவையில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளனர்.

'அடுத்து வரக்கூடிய எந்தத் தேர்தலுக்கும் முகம்கொடுக்கும் சக்தி ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருக்கின்றது. கிராம மட்டத்தில் அதனை மேலும் அதிகரிப்பதற்கு தேசியப் பட்டியலில் தெரிவாகி அமைச்சுப் பதவி வகிப்பவர்களின் அர்ப்பணிப்பு அவசியமாகும்' என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹேசான் விதானகே குறிப்பிட்டார்.

இதனைக் கருத்தில் கொண்டு அமைச்சரவையையும் மாற்றியமைக்குமாறு தலைமை அமைச்சரிடம் கோரிக்கை விடுத்ததாக அவர் மேலும் தெரிவித்தார். (ஒ.5)

முன்னணியுடன் இணையாவிட்டால் சு.கவுக்கு எதிர்காலமே இல்லை

கொழும்பு, ஜன. 28

சுதந்திரக்கட்சியால் இன்றைய நிலையில் ஒருபோதும் தனித்துச் செயற்பட முடியாது. பொதுமக்கள் முன்னணியுடன் கூட்டணியமைக்காது தனித்துச் செயற்படுவது ஐக்கிய தேசிய கட்சிக்கு பலமாக அமையும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச ஆகியோரது கூட்டணி உருவாகக் கூடாது என்று இரண்டு தரப்பிலும் காணப்படுகின்ற வாதப் பிரதிவாதங்கள் தொடர்பில் கேள்வி எழுப்பியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

'பொதுமக்கள் முன்னணி சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணியமைத்தோ, தனித்தோ ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராகச் செயற்படத் தயாராகவே உள்ளது' என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஒ.5)

பொன்சேகாவுக்குப் போட்டியாக

முன்னாள் தளபதிகளுக்கும் பதவி வழங்கத் தீர்மானம்

கொழும்பு, ஜன. 28

முன்னாள் வான்படைத் தளபதி எயர் மார்சல் றொசான் குணதிலகவும், முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவும், பீல்ட் மார்சலாகப் பதவி உயர்த்தப்படவுள்ளதாக அரச தலைவர் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகளை இல்லாமல் ஒழிப்பதற்கு, ஆற்றிய பங்களிப்புக்காக இவர்களை பீல்ட் மார்சலாகப் பதவி உயர்த்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

படைத்துறைப் பதவிகளில் மிக உயரியதாக மதிக்கப்படும் பீல்ட் மார்சல் பதவியை வழங்கும் அதிகாரத்தை முப்படைகளினதும் தளபதியான அரச தலைவர் கொண்டிருக்கிறார். இறுதிப்போருக்குத் தலைமை தாங்கிய முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு பீல்ட் மார்சல் பதவியை வழங்கியிருந்தார்.

பாதுகாப்புச் செயலராக இருந்த கோத்தபாய ராஜபக்ச, இந்த உயர் பதவியை ஏற்க மறுத்திருந்தார். இலங்கையில் பீல்ட் மார்சல் பதவியை வகிக்கும் ஒரே தளபதி பொன்சேகா. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் பொன்சேகாவுக்கும் இடையில் அண்மைக்காலமாக முறுகல் நிலைமை காணப்படுகின்றது.

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான வழக்கில் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவும், விசாரணைகளை எதிர்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

மைத்திரியின் பரிந்துரைகளை அரசமைப்புப் பேரவை நிராகரிப்பு

தினேஷ் குணவர்தன குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 28

அரச தலைவரின் பரிந்துரைகளை நிராகரிக்கும் வகையில் அரசமைப்புப் பேரவை செயற்படுகிறது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அரசமைப்புப் பேரவையின் செயற்பாடு தொடர்பில் நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாதப் பிரதிவாதங்களின் போது கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்புப் பேரவையில் மூத்த பிரதிநிதித்துவம், திறமை என்பவற்றுக்கு மதிப்புக் கொடுப்பதில்லை. அரசியல் ரீதியான விருப்பு வெறுப்புக்கு மாத்திரமே மதிப்புக்கொடுக்கின்றனர். அரச தலைவரின் பரிந்துரைகளை நிராகரிக்கும் வகையில் அரசமைப்புப் பேரவை செயற்படுவது பொருத்தமான செயற்பாடாக அமையாது. அரசமைப்புக்கு அமைவான கொள்கைக்கு அது முரணானது. உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அரச தலைவர் மதிப்பளித்தார். எனினும், ஐக்கிய தேசியக் கட்சி தனது அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கு அரசமைப்புப் பேரவையில் தற்பொழுது பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது. அரசமைப்புப் பேரவை பின்பற்றும் கொள்கை ரீதியான நடவடிக்கை என்ன என்பது கூட இதுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை. ஒரு மாதம் ஒரு முடிவும், அடுத்த மாதம் மற்றுமொரு முடிவும் எடுக்கின்றனர் - என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்ததாவது:

அரசமைப்புப் பேரவையில் அரசியல் ரீதியான முடிவுகளே எடுக்கப்படுகின்றன. நீதித் துறை சுயாதீனமாகச் செயற்படுவதாயின், எப்.சி.ஐ.டி சட்டவிரோதமாக அமைக்கப்பட்டது எனக்கூறி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைகள் முடிந்தும் ஏன் இன்னமும் நீதிமன்றம் தீர்ப்பை வெளியிடாமல் உள்ளது? முதன்மை நீதியரசராக ஈவா வனசுந்தரவின் பெயரை அரச தலைவர் பரிந்துரைத்தபோது அரசமைப்புப் பேரவை அதனை நிராகரித்தது என்றார்.

இவற்றுக்குப் பதிலளித்த சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்ததாவது:

நீதியரசர் ஈவா வனசுந்தரவின் பெயரை அரச தலைவர் அரசமைப்பு பேரவைக்கு ஒருபோதும் அனுப்பி வைக்கவில்லை. அரசமைப்பு பேரவை இதுவரை எடுத்த முடிவுகள் யாவும் அரசமைப்புக்கு உட்பட்டு சட்டரீதியாவும் சுயாதீனமாகவும் எடுக்கப்பட்டவை. எவருடைய முகங்களைப் பார்த்தும் நாம் எந்த நியமனங்களையும் வழங்குவதில்லை - என்றார். (த-7)

இறைச்சி விற்பனை நிலையத்தில் தீ

வவுனியா, ஜன. 28

வவுனியா குருமன்காட்டில்அமைந்துள்ளஇறைச்சி விற்பனை நிலையம் நேற்று மதியம் திடீரென தீப்பற்றியெரிந்தது.

இறைச்சிவிற்பனைநிலையத்தின் மின்மானியில் ஏற்பட்ட மின்னொழுக்கால் தீ பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொதுமக்கள் உடனடியாகச்செயற்பட்டுத்தீயைக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். (ஒ.5,110)

தமிழ்க் கூட்டமைப்பு மட்டுமே பிரச்சினைகளை பேசுகின்றது

சாள்ஸ் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, ஜன.28

தற்போது புதிய கட்சி பற்றியும், புதிய தலைமைத்தவம் பற்றியும் பலர் பேசுகின்றனர். வடக்கு, கிழக்கில் தமிழ்க் கூட்டமைப்பைத் தவிர வேறு தலைமைகள் இருக்கின்றனவா?. அப்படியானால் அது யார் என்று காட்டுங்கள்?.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மல நாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.

வவுனியா சாம்பல் தோட்டம் கிராமத்தின் மலைமகள் விளையாட்டு கழகத்துக்கான புதிய கட்டடம் நேற்றுத் திறக்கப்பட்டது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வுடன் கலை, கலாசார, மதம் சார்ந்த விடயங்களின் பாதுகாப்பு, அபிவிருத்தி, வேலை வாய்ப்பு போன்ற பல விடயங்கள் தேவையாக உள்ளன. தற்போது அபிவிருத்தியை எதிர் பார்த்து எமது மக்கள் பயணித்துக்கொண்டிருக்கிறார்கள். அது ஆபத்தான விடயம்.

அண்மையில் தலைமை அமைச்சருடனான சந்திப்பில் பல அபிவிருத்திவிடயங்கள் பற்றிப் பேசப்பட்டன. அவை பற்றிப் பேசி முடிந்ததும் அவர் எழுந்து செல்ல முற்பட்டார். அப்போது அவரிடம் கேட்டேன், தொல்பொருள் திணைக்களம் ஒரு மதத்தில் மட்டும் கரிசனை கொள்வதுடன், ஏனைய மதங்களை அழிக்கும் வகையில் செயற்படுகின்றது. குறிப்பாக வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் இப்படியான செயற்பாடுகளை அவதானிக்க முடியும். அதற்கு எவ்வாறான தீர்மானம் எடுக்கலாம் என்று அவரிடம் கேட்டேன். இது பற்றிப் பிறகு கதைக்கலாம் என்று தலைமை அமைச்சர் கூறினார். அப்படியானால் நான் வெளியே செல்கின்றேன் என்று நான் எழுந்து சென்றேன். அவர் என்னை அழைத்து என்ன செய்ய வேண்டும் என்று கூறுங்கள் என்று கேட்டார்.

வவுனியா நெடுக்குநாறிமலை, குருந்தூர் மலை, நீராவியடிப் பிள்ளையார் ஆலயம் என்பன இந்துக்களின் பூர்வீகப் பிரதேசங்கள். அங்கு இந்துக்களின் அடையாளங்களை அழித்துப் பௌத்த சின்னங்களை நிறுவும் செயற்பாட்டுக்குத் தொல்பொருள் திணைக்களம் உடந்தையாக இருக்கின்றது என்று அவரிடம் கூறினேன். இது தொடர்பாக தொல்பொருள் திணைக்களத்தின் பதிலைத் தலைமை அமைச்சர் கோரியிருந்தார்.

அதற்கமைய தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளரால் இந்த விடயங்கள் தொடர்பான அறிக்கை தலைமை அமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதில் வெடுக்குநாரிமலை, நீராவியடிபிள்ளையார் கோவில் என்பன இந்துக்களின் பூர்விகமான வழிபாட்டுப்பிரதேசங்கள் அல்ல. நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் உண்மைக்கு புறம்பான குற்றச்சாட்டை தெரிவித்து மக்களை ஏமாற்றுகின்றார் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்பிரதி எனக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பாக நானும் ஒரு தெளிவான அறிக்கையை அவர்களுக்கு அனுப்பவுள்ளேன்.

இந்த விடயங்களைத் தமிழ்க் கூட்டமைப்பு மட்டுமே தற்போது கதைத்து வருகின்றது. மக்களுக்கு துரோகம் செய்து அரசியல் செய்ய வேண்டிய தேவை எமக்கில்லை. எமக்குள் பல பிரச்சினை இருந்தாலும் ஒற்றுமையை கைவிடகூடாது - என்றார்.

நிகழ்வு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் முன்னாள் வடமாகாண அமைச்சர் ப. சத்தியலிங்கம் தெற்கு பிரதேச சபை உறுப்பினர்களான பு.சந்திரபத்மன், சுப்பிரமணியம், தமிழரசுக் கட்சியின் இளைஞரணித் தலைவர் பா.சிந்துயன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (எ-110)

மத்தள வானூர்தி நிலையத்தின் 70 வீதமான பங்கு இந்தியாவுக்கு

தயாராகிறது அமைச்சரவைப் பத்திரம்

கொழும்பு, ஜன. 28

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பங்குகள் வழங்கப்பட்டமைபோன்று மத்தள வானூர்தி நிலையத்தின் 70 வீதமான பங்கு இந்தியாவுக்கு வழங்கப்படவுள்ளது.

இதற்கு அனுமதி அளிக்கும் அமைச்சரவைப் பத்திரம் தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது என்று கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மத்தள வானூர்தி நிலையத்தைக் கூட்டு முயற்சியாக அபிவிருத்தி செய்யும் உடன்பாட்டில் இலங்கையின் வானூர்தி நிலைய மற்றும் வானூர்தி சேவைகள் நிறுவனமும், இந்தியாவின் வானூர்தி நிலைய அதிகார சபையும் கையெழுத்திடவுள்ளன. இரண்டு தரப்புகளும் கலந்துரையாடிய பின்னர் அமைச்சரவைப் பத்திரத்தில் திருத்தங்கள் செய்யப்படும்.

மத்தள வானூர்தி நிலையம் ஆதாயத்தைத் தரும் திட்டமாக இல்லாததால், அதன் 70 வீதத்துக்கும் குறைவான பங்குகளை ஏற்க இந்தியா மறுத்து வருகிறது.

வானூர்தி நிலையங்களின் மூலமாக ஓர் இரவில் இலாபமீட்ட முடியாது என்றும் அதற்கு 15 ஆண்டுகள் வரை தேவைப்படும் என்றும் கூறப்படுகிறது. முதலில் மத்தள வானூர்தி நிலையத்தை 99 ஆண்டுகள் குத்தகைக்குப் பெற்றுக் கொள்ளவே இந்தியா விரும்பியது. எனினும், நடத்தப்பட்ட பேச்சு அடுத்த 40 ஆண்டுகள் குத்தகை உடன்பாடாகக் கையெழுத்திட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. எனினும், இரண்டு தரப்பும் இந்தக் கூட்டு முயற்சி உடன்பாட்டை ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மீளாய்வு செய்ய முடியும். அத்துடன் பங்கு விகிதம் தொடர்பாகவும் இருதரப்பு இணக்கப்பாட்டுடன் மாற்றங்களைச் செய்ய முடியும் என்றும் கூறப்படுகிறது. (த)

ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பைக்கோரி இரண்டாவது நாளாக ஒருவர் போராட்டம்

இன்றைய நாளைக் கரி நாளாகக் கடைப்பிடிக்கக் கோரிக்கை

கொழும்பு, ஜன. 28

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பள உயர்வை வழங்கக்கோரி டிக்கோயா சலங்கந்தை பகுதியில் ஒருவர் இரண்டாவது நாளாகவும் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

அதே இடத்தைச் சேர்ந்த சிவனு கணேசன் என்பவரே இரண்டாவது நாளாகச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில்ஈடுபட்டுள்ளார். தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் பாராமுகமாகச் செயற்படாமல் உடனடியாகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும், கொழும்பில் போராட்டத்தில் ஈடுப்பட்டுள்ள மலையக இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்தும் சத்தியாகிரக போராட்டத்தை நேற்றுமுன்தினம் தொடக்கம் நடத்திவருகிறார்.

ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளமாக வலியுறுத்திப் பேச்சு நடத்திய தொழிற்சங்கங்கள் இன்று 700 ரூபாவுக்குக் கையொப்பம் இடுவதற்குத் தயாராகின்றன என்றும் அதற்குத் தான் எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.

அதுமட்டுமன்றி கூட்டு ஒப்பந்தம் இடம்பெறும் இன்று திங்கட்கிழமையை தொழிலாளர்கள் அனைவரும் கறுப்பு நாளாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் கறுப்புப் பட்டிகளை அணிந்துகொண்டு தொழிலுக்குச் செல்ல வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (த)



புதையல் தோண்டிய நபர் கைது

வவுனியா பூவரசங்குளம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலினை அடுத்து வவுனியா செக்கட்டிப்புலவு, குஞ்சுக்குளம் வயல் வெளியில் புதையல் தோண்டிய 38 வயதான குளியாப்பிட்டியைச் சேர்ந்த ஒருவர் நேற்றய தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். இதன் போது புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய கில்ட்டி உபகரணம், மின்பிறப்பாக்கி, நிலத்தை தோண்ட பயன்படும் பொருள்கள், மண் அகழ்வதற்கான உபகரணங்கள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

புதையல் தோண்டிய ஏனைய ஏழு பேர் பொலிஸாரின் சுற்றிவழைப்பில் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவித்த, பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-110)

வரலாறுகளை கற்கத் தவறின் இலக்கை அடைய முடியாது

வ.மா. சபையின் முன்னாள் உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜன.28

மாணவர்கள், இளையோர் எமது கடந்தகால வரலாறுகளைத் கற்றுத் தேறவேண்டும். தவறின் நாங்கள் எங்களுடைய இலக்குகளையும், எங்களுடைய இன உரிமைகளையும் இழந்தவர்களாக மாறிவிடுவோம். இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் தெரிவித்தார். முல்லைத்தீவு மாட்டத்தில் உள்ள முத்து ஐயன்கட்டு மகா வித்தியால வருடாந்த மெய்வன்மை வினைத்திறன் காண் போட்டிகள் நேற்று முன்தினம் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

நிஎமது மாணவர்கள் உற்சாகமாகச் செயற்பட வேண்டும். தேசிய மட்டத்தில் பல சாதனைகளை நிகழ்த்த வேண்டும். எதிர்காலத்திலே எங்களுடைய மாணவர்கள் கற்றலிலும் சிறப்பான தேர்ச்சிகளைப் பெறவேண்டும். நாங்கள் இந்த மாணவர்களிடம் எதிர்பார்ப்பது எல்லாம் எங்களுடைய மாவட்டத்துக்கும், எங்களுடைய மாகாணத்துக்கும் இந்த தமிழ் தேசத்துக்கும் நீங்கள் சிறந்த கல்விமான்களாக வரவேண்டும் என்பதையே. அதற்கான சந்தர்ப்பங்களை நீங்கள் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

நாங்கள் ஏன் 30 ஆண்டுகளாகப் போர் செய்தோம்?. நாங்கள் இன்று ஏன் இந்த நிலையில் இருக்கின்றோம்? என்பதைக் கற்றுத் தேற வேண்டும். இதை நான் ஏன் கூறுகின்றேன் எனில், எங்கள் இளையோர்கள் இடத்திலே நாங்கள் கடந்த காலத்தில் பட்ட துன்பங்கள் மறந்து நடக்கின்றனர். அதற்கான காரணம் எங்களுடைய வரலாறுகளை அவர்கள் கற்றுக் கொள்ளாமையே என்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எங்களுடைய கடந்த கால வரலாறுகளைக் கற்றுத் தேற வேண்டும். அவ்வாறு செய்யத் தவறின் நாங்கள் எங்களுடைய இலக்குகளையும், எங்களுடைய இன உரிமைகளையும் இழந்தவர்களாக மாறிவிடுவோம். எங்களுடைய கடந்த கால வரலாற்றை மாணவர்கள் கற்றுத் தேறுகின்ற போதே எங்களுடைய சுயநிர்ணய உரிமைக்காக நாம் தொடர்ந்து போராட முடியும். தற்போது எங்களுடைய மக்கள் சலுகைகளைத் தருபவர்களுக்குப் பின்னால் செல்வதை அவதானிக்கமுடிகின்றது. இது ஒரு தவறான முன்னுதாரணம். எங்கள் உரிமையை வென்றெடுப்பதற்கு இது பின்னடைவாக அமையும். கடந்த தேர்தல் காலத்திலும் நாங்கள் அவதானித்துள்ளோம்.

மாணவர்கள் அவ்வாறு நடந்து கொள்ளக் கூடாது. ஏன் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக போரட்டம் செய்தோம் என்ற வரலாறுகளை மாணவர்களுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும் என்றார். நிகழ்வின்போது மைதானத்துக்கு மத்தியில் போதைப் பொருளுக்கு எதிரான வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது. (எ-21)

நான் ரெடி ...

முன்னாள் அரச தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்சவின் இளைய மகன் ரோகித ராஜபக்சவின் திருமண நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தலைமை அமைச்சர் ரணில் கலந்துகொண்டார். அவரை ராஜபக்ச குடும்பத்தினர் இருகரம் கூப்பி வரவேற்று மகிழ்வுடன் அளவளாவிய ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளிவந்திருந்தன. அதில் ரணிலும் ராஜபக்ச சகோதர்களின் ஒருவரான கோத்தபாயவும் நெருங்கி நின்று உரையாடும் படமும் வெளிவந்திருந்தது.

இருவரும் என்ன பேசினார்கள் என்று ரோகித ராஜபக்சவின் திருமண நிகழ்வில் கலந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர் மங்கள சமரவீரவிடம் கொழும்பு ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். இதற்கு அவர் சிரித்தவாறு பதிலளித்துள்ளார். 'அரச தலைவர் தேர்தலில் களமிறங்க நான் தயாராகவே உள்ளேன். நீங்கள் தயாரா? என்று தலைமை அமைச்சரிடம் கோத்தபாய கேட்டுள்ளாராம். ராஜபக்ச குடும்பத்தில் இருந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக அவர்தான் களமிறங்கப் போகின்றார் போல் தெரிகின்றது. எனினும், ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் யார் என்பதை நாம் உரிய நேரத்தில் அறிவிப்போம்' என்று அமைச்சர் மங்கள கூறியுள்ளார். (ஒ.5,22)

பால்மா...

வகைகளின் இறக்குமதி மொத்த வியாபாரிகள் வர்த்தக வாணிப அமைச்சுக்கு அறிவித்துள்ளனர். டொலரின் பெறுமதி 180 ரூபாவாக அதிகரித்துள்ளது. பால்மாவின் விலையை அதிகரிக்குமாறு பால்மா இறக்குமதி செய்யும் நிறுவனங்களால் கடந்த சில மாதங்களுக்கு முன் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதற்கான அனுமதியை அரசு வழங்கவில்லை. பால்மா விலை நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக அமைச்சரவையின் வாழ்க்கைச் செலவு உபகுழு நாளை கூடவுள்ளதாக வர்த்தக வாணிப அமைச்சர் ரிசாத் பதியூதீன் தெரிவித்துள்ளார். (ஒ.5)

'உத்தர தேவி'...

'போதையிலிருந்து விடுதலையான நாடு' தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்திலிருந்து காங்கேசன்துறை வரை இந்தத் தொடருந்து தனது பயணத்தை நேற்றுத் தொடர்ந்தது.

புதிய தொடருந்தை மக்கள் பயன்பாட்டுக்காகக் கையளித்த அரசதலைவர், போதைப்பொருளால் ஏற்படும் பின்விளைவுகள் மற்றும் போதைப்பொருள் ஒழிப்புக்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் மக்களை தெளிவூட்டும் துண்டறிக்கைகளையும் வழங்கினார். வடக்கையும் தெற்கையும் இணைக்கும் முகமாக பயணத்தை ஆரம்பித்த இந்தத் தொடருந்துக்கு 'போதையிலிருந்து விடுதலையான நாடு' என்ற பெயர் சூட்டியதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்தி சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவிடம் கையளிக்கப்பட்டன.

இந்தத் தொடருந்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து ஆகியோர் பயணித்தனர். அரச தலைவர் மைத்திரிபால மருதானை தொடருந்து நிலையத்தில் இறங்கிக் கொண்டார். ஏனையவர்கள் தொடர்ந்து வடக்கு நோக்கிய தங்கள் பயணத்தை தொடர்ந்தனர்.

கிளிநொச்சி அறிவியல் நகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள துணைத் தொடருந்து நிலையத்தையும், அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவும், இந்தியத் தூதுவரும் திறந்து வைத்தனர்.

யாழ்ப்பாணத்துக்கு மதியம் 2.30 மணிக்கு தொடருந்து வந்தடைந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா, போக்குவரத்து அமைச்சர் அர்ஜுனவை வரவேற்றார்.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆறு பெட்டிகளைக் கொண்ட டீசலில் இயங்கும் தொடருந்து, உத்தரதேவியாக பயணிக்கவுள்ளது. புதிய தொடருந்தின் இரண்டு பெட்டிகள் குளிர்சாதன வசதி கொண்டவை. 120 கி.மீ வேகத்தில் பயணம் செய்யக் கூடிய இந்த தொடருந்தில், மொத்தம் 724 பயணிகள் பயணிக்க முடியும். இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட இந்தத் தொடருந்து வடக்கு, தெற்கு நல்லிணக்கத்தை குறிக்கும் வகையில் சேவையில் ஈடுபடுகின்றது என்று போக்குவரத்து அமைச்சு குறிப்பிட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகள், அப்பியாசப் புத்தகங்கள் உள்ளிட்ட பாடசாலை உபகரணங்கள் முதலாவது தொடருந்தில் நேற்று எடுத்து வரப்பட்டுள்ளன. (ஒ,5,8)

ரிக்கெட்...

காப்பாற்ற மாட்டேன என்று கொழும்பு காங்கேசன்துறை தொடருந்தில் இருந்தபடி அரச தலைவர் மைத்திரிபால நகைச்சுவையாக தெரிவித்துள்ளார். கொழும்பு கோட்டை - காங்கேன்துறைக்கிடையிலான உத்தரதேவி தொடருந்து சேவை நேற்றுக் காலை 6 மணிக்கு ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, இந்தியத் தூதுவர் தரஞ்சித் சிங் சந்து ஆகியோர் கலந்துகொண்டனர்.

சேவையை ஆரம்பித்து வைத்த அரச தலைவர், கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்திலிருந்து மருதானை தொடருந்து நிலையம் வரை பயணிகளுடன் பயணித்தார்.

இதன்போதே அவர் சிரித்தபடி 'இப்போது மருதானையில் இறங்கியவுடன் ரிக்கெட் இல்லையென எல்லோரையும் பிடிக்கப் போகின்றார்கள். நான் யாரையும் காப்பாற்ற மாட்டேன்' என்று நகைச்சுவையாகத் தெரிவித்தார். (ஒ.5)

துறைமுக...

பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சர் சாகல ரத்நாயக்க மற்றும் மூத்த அதிகாரிகள், இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர்.

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் மூலம், இறக்குமதி, ஏற்றுமதித் துறைக்கு உதவியாக இருப்பதுடன், நாட்டின் பொருளாதாரத்திலும் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும். அத்துடன், பிரதேசத்தின் உட்கட்டமைப்பு வசதிகளும், பெருமளவு நேரடி மற்றும் மறைமுக தொழில்வாய்ப்புகளும் கிடைக்கும் என்று, அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

'இந்தத் திட்டத்தின் கீழ், சரக்குக் கப்பல்கள் வரக்கூடிய வகையில், துறைமுகப் பகுதி 9 மீற்றர் வரை ஆழமாக்கப்படவுள்ளது. தற்போதுள்ள அலைதாங்கி முற்றிலுமாக மாற்றியமைக்கப்படவுள்ளது. தற்போதுள்ள ஒரு இறங்குதுறை முழுமையாக மறுசீரமைக்கப்படும். அத்துடன் மேலும் ஒரு புதிய இறங்குதுறையும் அமைக்கப்படவுள்ளது.

காங்கேசன்துறை துறைமுக சுற்றுப்புறத்தில் 15 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில், திட்டத்தின் ஆரம்பக் கட்ட வேலைகளை துறைமுக அதிகாரசபை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. அடுத்த கட்டமாக 50 ஏக்கர் பரப்பளவுக்கு இந்த திட்டம் விரிவுபடுத்தப்படும்.

திட்டத்தின் ஆரம்பத் திட்டமிடல் செயல்முறைகளுக்கான ஆலோசகர்களை நியமிக்கும் நடவடிக்கைகளை துறைமுக அதிகார சபை ஆரம்பித்துள்ளது. ஆலோசகர்களின் மதிப்பீடுகளைத் தொடர்ந்து, வெளிப்படையான முறையில் கட்டுமானம் செய்பவர் தெரிவு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும், அமைச்சர் சாகல ரத்நாயக்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ஒ.5)

அரசியலுக்கு...

மகிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவுடன் இரகசியச் சந்திப்பு நடத்தியதாக வெளியான தகவல்கள் தொடர்பில் சந்திரிகாவிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் சூழ்ச்சியில் ஈடுபடும் பழக்கம் எனக்கு இல்லை. குமார வெல்கம மட்டுமல்ல, சிறிலங்கா சுத்ந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் பலர் என்னுடன் பேச்சு நடத்தியுள்ளனர். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு இறுதிச் சந்தர்ப்பம் வழங்கி கடிதம் எழுதினேன். அவர் அதற்கு உரிய பதில் வழங்கவில்லை. எனது தந்தையும், தாயும், நானும் சேர்த்து வளர்த்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து என்னைத் தூக்கி எறியும் நடவடிக்கையில் அரச தலைவர் மைத்திரிபால ஈடுபடுகின்றார். இந்த மோசமான செயலுக்கு அவர் பெரியதொரு பின்விளைவை அனுபவிப்பார்.

2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசை உருவாக்குவதற்காக நான் இரவு, பகல் பாடுபட்டேன். என்னைப் போன்று சிவில் சமூகப் பிரதிநிதிகளும் பாடுபட்டார்கள். ஆனால் மைத்திரிபால, எனக்கு மட்டுமல்ல இந்த நாட்டு மக்களுக்கும் துரோகம் இழைத்துள்ளார். கொலைகார ராஜபக்சகும்பலுடன் சேர்ந்து நாட்டை நாசமாக்கிவிட்டார். மைத்திரி அணியினதும், மகிந்த அணியினதும் அரசியலுக்கு முடிவுகட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உண்மையான பிரதிநிதிகள் தயாராகிவிட்டார்கள். அவர்கள் எடுக்கின்ற முயற்சிகளுக்கு முழுமையான ஆதரவு வழங்குவேன் என்றார். (ஒ.5,22)

வாள்களுடன் ...

தொடர்புடைய சந்தேகத்தில் மூன்று இளைஞர்களை வாள்களுடன் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டுக்குழுக்களைக் கட்டுப்படுத்த வடக்கு மாகாண மூத்த பொலிஸ் அத்தியட்சகரால் சிறப்புக் குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவே இந்தக் கைதுகளை நேற்று மேற்கொண்டுள்ளது. யாழ்ப்பாணம் மையப் பேருந்து நிலையத்தில் ஓர் இளைஞனும், மானிப்பாயில் இரண்டு இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் 25, 23, 27 வயதுகளைச் சேர்ந்தவர்கள். மானிப்பாயில் உள்ள மயானத்திலிருந்து இரண்டு வாள்களையும் மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ,5,26)

தமிழர்கள்...

கொண்ட தலைவர்களால் மக்களை ஒன்றிணைக்க முடியாது போனபோதும் நாம் மக்களை ஒன்றிணைத்துள்ளோம்.

நாம் ஆட்சிக்கு வந்த பின்னரே மகிந்தவுக்கு எதிரான பன்னாட்டு அழுத்தங்கள் இல்லாது போனது. எமது தலையீட்டால் தான் பன்னாட்டு அழுத்தங்களை நீக்கி நாட்டினைக் கட்டியெழுப்பும் பன்னாட்டு ஒத்துழைப்பை உருவாக்கிக் கொண்டோம். இராணுவத்தை தண்டிக்கும் பன்னாட்டு நோக்கத்தை இல்லாது செய்தோம். எனினும் இவர்கள் இப்போதும் அதே கதைகளைக் கூறிக்கொண்டுள்ளனர். இவர்களுக்கு இனவாதம் மட்டுமே ஆயுதம், இவர்கள் தீவிரியமான தேசியவாதிகள் என்றால் தூய்மையான அரசியல் கொள்கை உள்ளவர்கள் என்றால் இவர்களுக்கென்ற தேசியக் கொள்கையை உருவாக்கி சகல மக்களையும் உள்வாங்கிய கொள்கையை உருவாக்கி எம்முடன் நேரடியாக அரசியல் போட்டிக்கு வரவேண்டும் என்று சவால் விடுத்தார். (ஒ.5)

மீட்கப்பட்ட உந்துருளி 30 மாதங்களின் பின்னர் சாவகச்சேரி நீதிமன்றில்

சாவகச்சேரி, ஜன. 28

மீசாலைப் பகுதியில் அநாதரவாகக் காணப்பட்டு சாவகச்சேரி பொலிஸாரால் மீட்கப்பட்ட உந்துருளி கடந்த 30 மாதங்களாக உரிமை கோரப்படாத நிலையில் சாவகச்சேரி நீதிமன்றில் அண்மையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. டபிள்யூ.பி.எக்ஸ்.வி 2628 என்ற இலக்கத் தைக் கொண்ட உந்துருளியே நீதிமன்றில் ஒப்படைக் கப்பட்டது.

கடந்த 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் திகதி மீசாலைப் பாடசாலையொன்றின் அருகில் பிரச்சினை நடப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார் அங்கு எவரையும் காணாதநிலையில் அநாதரவாகக் காணப்பட்ட உந்துருளியை மீட்டு பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

இதுவரை அந்த உந்துருளியை எவரும் உரிமை கோரப்படாத நிலையில் நீதிமன்றில் ஒப்படைப்பதாக அறிக்கை தாக்கல் செய்திருந்தனர்.

அறிக்கையினைப் பார்வையிட்ட நீதிமன்று இது தொடர் பாகப் பொதுமக்களுக்கு அறிவித்தல் வழங்குமாறு பொலி ஸாருக்கு உத்தரவிட்டு உந்துருளியை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டது. (ஜ-9)

கல்சியம் நீக்கிப் புகையை சுவாசித்தவர் சிகிச்சையில்

சாவகச்சேரி, ஜன.28

குளியறையில் காணப்பட்ட கறைகளை நீக்க கல்சிய நீக்கியை ஊற்றியபோது எழுந்த புகையைச் சுவாசித் ததால் பாதிப்படைந்த முதியவர் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி, நுணாவில் கிழக் கில் நடந்துள்ளது.

அங்குள்ள வீடொன்றில் குளியலறையைச் சுத்தம் செய்ய ஒருவரை ஏற்பாடு செய்திருந்தனர். அவர் கல்சி யம் நீக்கியை ஊற்றியபோது எழுந்த புகையைச் சுவா சித்ததால் மூச்சுவிடச் சிரமப்பட்டுள்ளார்.

அவர் சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அவர் மாற்றப்பட்டுள் ளார். (எ-9)

யாழ்ப்பாணம், காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்பாள் ஆலய குட முழுக்கையொட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை சங்காபிசேகப் பெருவிழா வில் பாற்குடப் பவனி இடம்பெற்றது. காரைநகர் வாரி வளவு கற்பக விநாயகர் ஆலயத்திலிருந்து மங்கள வாத்தியம் சகிதம் பெண் கள் பாற்குடங்களைச் சுமந்து சென்று அம்பாளின் அபிசேகத்துக்கு வழங்கினர். (த-250)

முஸ்லிம்களின் இருப்பை அழிக்கப் பயங்கரமான சதி

ரிஷாட் பதியுதீன் குற்றச்சாட்டு

மன்னார், ஜன.28

முஸ்லிம்களில் ஒரு சிலர் மேற்கொள்ளும் சிறிய நடவடிக்கைகளை, 'ஐ.எஸ் ஐ.எஸ்' பயங்கரவாதத்துடன் சம்பந்தப்படுத்தி அவர்க ளின் இருப்பை இல்லாமல் செய்யும் பயங்கர மான சதியொன்று அரங் கேற்றப்படுகின்றது.

இவ்வாறு அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரி வித்தார்.

கொழும்பை தளமாகக் கொண்டு இயங்கும் மனிதாபிமான நிவாரண அமைப்பினர் நாடளாவிய ரீதியில் நடத்திய ஹிப்ளுள் குர் ஆன் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசு வழங்கும் நிகழ்வு நேற்றுக் கொழும் பில் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இஸ்லாத்துக்கும், முஸ்லிம்களுக்கும் அண்மைக்காலமாக உலக நாடுகளில் பயங்கரமான அச்சுறுத்தல் நிலவி வருகின் றது. 50க்கும் மேற்பட்ட இஸ்லாமிய நாடு களில் ஏறத்தாழ 90% நாடுகளில் இன்று நிம்மதியான சூழல் இல்லை.

நமது மார்க்கத்தை பற்றி தவறாகவும், ஆபத்தானதாகவும் மற்றைய சமூகங்கள் பார்க்குமளவுக்கு நாளுக்கு நாள் சம்பவங் கள் நடக்கின்றன. எங்களுடைய மார்க் கத்தின் நல்ல பண்புகளை அறியும் அள வுக்கு நமது நடவடிக்கைகள் அமைய வேண்டும்.

வன்முறைகளைத்தூண்டிமுஸ்லிம்களின் பொருளாதாரங்களையும் உடமைகளை யும் அழிக்கவேண்டும் என்பதையும் நமது சமூதாயத்தையும் பெரும்பான்மை சமூதாயத்தையும் முட்டி மோத வைப்ப தையும் இலக்காக கொண்டு கபடத்தன மாக காரியங்கள் முன்னெடுக்கப்படுகின் றன. நமது சமூகம் மிகவும் அவதானமா கவும் பொறுமை காத்தும் வாழ்வதன் மூலமே எதிர்கால சவால்களை முறியடிக்க முடியும்- என்றார். (எ-56)

சேவை நயப்பு விழா

யாழ்ப்பாணம் கரந்தன் இராமுப் பிள்ளை வித்தியாலய ஆசி ரியை திருமதி. புஸ்பராணி பத்ம நாதனின் சேவைநயப்பு விழா பாடசாலை மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் சாந் தினி வாகீசன் தலைமையில் நடைபெறவுள்ளது என்று அறி விக்கப்பட்டுள்ளது. (எ)

போதைக்கு எதிரான செயற்பாடு

யாழ்ப்பாணம்.ஜன.28

போதை ஒழிப்பு வாரத்தை முன் னிட்டு யாழ். குடாநாட்டு பாடசா லைகளிலும், போதைக்கு எதி ரான செயற்பாடுகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன.

நேற்று கொக்குவில் பகுதியில் போதை ஒழிப்பு வாரத்தை முன் னிட்டு போதைக்கு எதிரான பேரணி இடம்பெற்றுள்ளது.

கொக்குவில் நாமகள் வித்தியா லயமும், நல்லூர் பிரதேச சபை யும் இணைந்து போதைப் பொருள் ஒழிப்பை வலியுறுத்தி, கவனவீர்ப்பு ஊர்வலத்தில் ஈடு பட்டன.

ஊர்வலம் நேற்று முன்தினம் காலை 8 மணிக்கு பாடசாலை முன்றலில் இருந்து ஆரம்பமாகி கொக்குவில் பொது நூலகத்தை சென்றடைந்தது.

அங்கு போதைப் பொருள் பாவ னைக்கு எதிரான சத்தியப்பிரமா ணம் மற்றும் கருத்துரைகள் இடம்பெற்றுள்ளன. பாடசாலை கள் மாணவர்கள், ஆசிரியர்கள், பிரதேச சபை தவிசாளர், உறுப் பினர்கள், சபை பணியாளர்கள், பொலிஸார் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-17)

பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

சாவகச்சேரி, ஜன. 28

தென்மராட்சி பழ உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத் தின் (பழமுதிர்சோலை) சிறப்புப் பொதுக்கூட்டமும், நிர்வாகிகள் தெரிவும்

எதிர்வரும் செவ்வாய்கிழமை சங்க மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு தலைவர் செ.நாகேந்திரன் தலைமையில் நடைபெறும்.

சங்க உறுப்பினர்கள் மற்றும் பழ உற்பத்தியாளர்கள் அனை வரையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு செயலர் செ.சுப்பி ரமணியம் அறிவித்துள்ளார். (ஜ-9)

மாணவருக்கு மதிப்பளிப்பு

சாவகச்சேரி, ஜன.28

தென்மராட்சி கல்வி வலயத் தைச் சேர்ந்த கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கடந்த 5ஆம் தரப் புலமைப் பரி சில் பரீட்சையில் 100 புள்ளிக ளுக்கு மேல் பெற்ற மாணவர் கள் மதிப்பளிக்கப்படவுள்ளனர்.

பழைய மாணவர் சங்கத்தின் பிரான்ஸ் கிளையினர் இந்த நிகழ்வை ஏற்பாடுசெய்துள்ளனர்.

இந்த நிகழ்வு இன்று திங்கட் கிழமை (28) பாடசாலையின் முத்தமிழ் மண்டபத்தில்நடைபெ றவுள்ளது என்று பழைய மாண வர் சங்கச் செயலாளர் அறிவித் துள்ளார். (எ-9)

சுகாதாரத்துக்கு கேடாக உணவு தயாரித்தவருக்கு தண்டம்

சாவகச்சேரி, ஜன.28

சுகாதார விதிமுறைகளை மீறி உணவு தயாரிப்பில் ஈடுபட்ட வர்த்தகருக்கு சாவகச்சேரி நீதி மன்று 6 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

வரணிப் பொதுச் சுகாதார பரி சோதகர் பிரிவுக்குட்பட்ட உணவு விற்பனை நிலையத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பரிசோ தனை மேற்கொண்டபோது, தொப்பி மேலங்கி மற்றும் கை யுறை அணியாமலும் உணவு தயாரிப்பில் ஈடுபட்டதுடன், மக் கள் நலனுக்கு சுகாதாரக் கேடு விளைவிக்கும் வகையில் அழுக் குத் துணியால் ரொட்டி தயாரிக் கும் மேசையைத் துடைத்தார் என்று வர்த்தகர் ஒருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய் தார். இந்த வழக்கு கடந்த வெள் ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வர்த்தகர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அழுக்குத் துணியால் உணவு தயாரிப்பு மேசையைத்துடைத்தமைக்காக 5 ஆயிரம் ரூபாவும் தொப்பி மற் றும் கையுறை மேலங்கி அணி யாமல் உணவு தயாரிப்பில் ஈடு பட்டமைக்கு ஆயிரம் ரூபாவு மாக 6 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (எ-9)

மாணவர்களின் மட்டத்திலிருந்து நல்லிணக்கம் ஏற்படுவது சிறப்பு

முனிதாச குமாரதுங்க வித்தி. அதிபர் சுட்டிக்காட்டு

கொடிகாமம், ஜன.28

தென்மராட்சி வலயத்தில் காணப் படும் முன்னேற்றகரமான விட யங்களை எங்கள் மாகாணத்துக் கும், வலயத்துக்கும் எடுத்துச் செல்ல விரும்புகிறாம். மாணவர் கள் மட்டத்தில் இணைவதன் மூலம் சமூக நலன்களுக்கடையி லான நல்லிணக்கத்தை உறுதி யாக சமூகங்களுக்கிடையே கட் டியெழுப்ப முடியும்.

இவ்வாறு மேல் மாகாண ஜய வர்த்தனபுர கல்வி வலயத்தைச் சேர்ந்த முனிதாச குமாரதுங்க வித்தியாலய அதிபர் ஆர்.பீ.இந் திக புஸ்பகுமார தெரிவித்தார்.

கஞ்சாய் அரசினர் தமிழ்க் கல வன் பாடசாலையின் "இனங்க ளுக்கு இடையிலான நல்லிணக் கமும் சமாதானமும்" என்ற தொனிப்பொருளில் மெய்வல்லு நர் திறன்விருத்திப் போட்டிகள் கடந்த வியாழக் கிழமை நடை பெற்றன. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது பாடசாலையையும் இணைத்து மெய்வல்லுநர் போட் டியை ஒழுங்கு செய்தமைக்காக மகிழ்ச்சி அடைகின்றோம். இந்த நிகழ்வில் இந்தப் பாடசாலையின் முழுமையான ஆற்றல்களைக் கண்டேன். தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் இவ்வா றான வேலைத் திட்டங்களில் முழு அர்ப்பணிப்புடன் செயற்படு கின்றார். மேல்மாகாணத்தில் இப்படியான செயற்பாடுகள் எத னையும் நான் பார்ப்பதில்லை. இந்த நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்கும் பணிப்பாளரைப் போன்று மேல் மாகாணத்திலும் இருந்தால் நாம் மகிழ்ச்சியடை வோம். இந்த வலயத்தில் கற் றுக்கொள்ள வேண்டிய நிறைய விடயங்கள் உண்டு.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி தமிழ் சிங்களப் புத்தாண்டு கொண்டாடவுள்ளோம். வலயக் கல்விப் பணிப்பாளரையும், இந் தப் பாடசாலையின் அதிபர், ஆசி ரியர்கள், மாணவர்கள் என 100க்கு மேற்பட்டவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளோம். தென் மராட்சிக் கல்வி வலய அதிகாரி கள், பாடசாலை அதிபர்கள், ஆசி ரியர்கள், மாணவர்கள் எமது பாடசாலைக்கு வருவதை நாம் எதிர்பார்க்கின்றோம்.

அன்பான பிள்ளைகளே விரிவுபட் டிருக்கும் வேறுபாட்டிலிருந்து மீள்வதற்கு இப்படியான செயற்பா டுகளை முன்னெடுக்கவேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுக்கின்றேன். நீங்களும், நாங் களும் இணைந்த இந்த நாட் டுக்கு ஒரு சுபீட்சத்தைப் பெற்றுக் கொடுப்போம் - என்றார்.

நிகழ்வில் முதன்மை விருந்தி னராகக் கலந்துகொண்ட தென்ம ராட்சி வலயக் கல்விப் பணிப்பா ளர் சு.சுந்தரலிங்கம் உரையாற் றினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாணவர்களின் உடல் உள விருத்திக்கு மாத்திரமல்லாது அவர்களின் உணர்வுத் திறன் மேம்பாட்டையும் மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி ஏற்பட்டுத் கின் றது.

இந்தப் பாடசாலைச் சமூகம் மைய விருட்சமாக மேன்மேலும் வளர வேண்டும். பாடசாலை யின் எதிர்காலச் செயற்பாடுகள் அனைத்தும் வெற்றி பெற வேண் டும்.

நல்லிணக்கச் செயற்பாட்டின் ஊடாகத் தென்னிலங்கைச் சமூ கத்துக்கும், எமக்கும் இறுக்கமான பிணைப்புக்கள், ஒற்றுமைகள் ஏற் பட வேண்டும் - என்றார். (எ-159)

தென்மராட்சி பிரதேசத்தில் டெங்கு நோயின் தாக்கம்

சாவகச்சேரி, ஜன. 28

தென்மராட்சிப்பிரதேசத்தில்டெங்குநோயின் தாக்கம் ஜனவரி மாதத்தில் அதிகரித்துள்ளது எனச் சுகாதார திணைக்களப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனவரி மாதத்தில் நேற்று வரையில் 35 பேர் டெங்கால் பீடிக்கப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்தவருடத்தில்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட டெங்குப் பரிசோதனைகளாலும்பொது மக்கள் வழங்கிய ஒத்தழைப் பினாலும் டெங்குவின் தாக் கம் வெகுவாகக் குறைவ டைந்துகாணப்பட்டது.

வருடத்தின் பிற்பகுதியில் பெய்த மழை காரணமாக டெங்குவின் தாக்கம் ஓரளவு அதிகரித்துக்காணப்பட்டது.

கடந்த டிசெம்பர் மாத்தில் 35 பேர் டெங்கால் பாதிக்கப்பட் டுள்ள நிலையில் ஜனவரி மாதத்தில் இதுவரை 35 பேர் டெங்குவினால் பீடிக்கப்பட் டுள்ளனர் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது. கடந்த 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் டெங்கால் 35 பேர்பாதிக்கப்பட் டுள்ளனர் எனவும் தெரிவிக் கப்பட்டது.

கடந்த வருட பிற்பகுதியில் வீசியகஜாபுயல்மற்றும்பெரு மழைகாரணமாகப்பலஇடங் களில்வெள்ளம்தேங்கிநின்ற போதிலும், பல குடியிருப்பு களை அண்டிய பகுதிகளில் காணப்பட்டவெள்ளம்பிரதேச செயலகம் மற்றும் உள்ளூ ராட்சிசபைகளால்வெளியேற் றப்பட்டதாலும், டெங்குவின் தாக்கம் மேலும் அதிகரிக்கா மல் கட்டுப்படுத்தப்பட்டது.

ஜனவரி மாதத்தில் டெங்கால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற வர்களில் பெரும்பாலானோர் யாழ். மாநகரசபைப் பகுதிக ளில் கல்வி தொழில் போன்ற வற்றின் காரணமாக தங்கி யிருந்தவர்களென வும் விசாரணைகளில் அறிய முடிந்ததாகவம் தெரிவிக்கப் பட்டது. (க-9)

நல்லூர் பிரதேச சபையினரால் போதை எதிர்ப்பு ஊர்வலம்

யாழ்ப்பாணம். ஜன. 28

தேசிய போதைப் பொருள்கள் தடுப்பு பாடசாலை வாரத்தை முன்னிட்டு நல் லூர் பிரதேச சபை, நல்லூர் பிரதேச செயலகம், நல்லூர் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை, கொக் குவில் நாமகள் வித்தியாலயம் ஆகி யன இணைந்து மேற்கொண்ட போதைஎதிர்ப்புவிழிப்புணர்வுஊர்வ லமும், கருத்தரங்கும் நேற்று முன்தி னம் கொக்குவிலில் நடைபெற்றது.

காலை 8 மணியளவில் வித்தியால யத்துக்கு முன்பாக மாணவமாணவி கள், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் கள், நல்லூர் பிரதேச சபை தவிசாளர், பிரதேசசபை உறுப்பினர்கள், பிரதேச சபை அலுவலர்கள், நல்லூர் பிரதேச சுகாதாரமருத்துவஅதிகாரிபணிமனை அலுவலர்கள், பொதுச் சுகாதாரப் பரி சோதகர்கள், கொக்குவில்பொதுநூலக நூலகர்கள், அலுவலர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து போதைப் பொருள் பாவனைக்கெதிராக உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். (க-8)

பொங்கல் விழா

சாவகச்சேரி, ஜன. 28

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங் கைப்பூவேந்தன் பாலர் பகல் பரா மரிப்பு நிலையத்தில் பொங்கல் விழாவின்சிறப்பினைஎடுத்தியம் பும் வகையிலான உழவர் விழா வும் பொங்கல் தின நிகழ்வும் எதிர்வரும்30ஆம்திகதிகாலை10 மணிக்கு நிலைய முன்றலில் இடம்பெறும்.

காளை மாடுகள் மூலம் வயல் உழவு, நெல் விதைப்பு, களை பிடுங்கல், அறுவடை செய்தல். சூடு மிதித்தல், உரலில் நெல் குற் றுதல், பானைவைத்துபொங்கல் செய்தல் போன்றவை சிறார்கள் ஊடாகமேற்கொள்ளப்படும்.

நிலையத் தலைவர் வை. இராச ரத்தினம்தலைமையில்நடைபெ றும்நிகழ்வுக்குமுதன்மைவிருந் தினராக கல்வி ராஜாங்க அமைச் சர் திருமதி விஜயகலா மகேஸ்வ ரன் கலந்துகொள்வார். (க-9)

மின் விளக்கு பொருத்தல்

யாழ்ப்பாணம், ஜன. 28

நாவாந்துறை பிரதேசத்துக்கு வலுக் கூடிய மின் விளக்குகள் பொருத்தும் பணிகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

மாநகர பிரதேசத்தில் குற்றச் செயல்களைத் தடுக்கும் முகமாக பிரதான வீதிக்கு வலுக் கூடிய வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு வரு வதாக மாநகர பிரதி முதல்வர் து. ஈசன் தெரிவித்தார்.

மாநகர உறுப்பினர் நிஷாமின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கொட்டடிச் சந்தியில்இருந்துபொம்மைவெளி வரைக்கும் நாற்பது வரையி லான வலுக் கூடிய வீதி விளக்கு கள் பொருத்தி வைக்கப்பட்டுள் ளன.

மாநகரபிரதேசத்தில்இரவுவேளை யில் குற்றச் செயல்களைத் தடுக் கும் முகமாக சகல பிரதான வீதிக ளுக்கும் வலுக் கூடிய வீதி விளக் குகள் பொருத்தி வைக்கப்படவும் உள்ளன. (க-17)

கிராம சக்தி திட்டத்தில் தெரிவான பிரான்பற்று

பிரான்பற்று ஜே/147 கிராம அலுவலர் பிரிவு கிராம சக்தி திட்டத்தின் கீழ் உள் வாங்கப்பட்டுள்ளது.

வலிகாமம் தென்மேற் குப் பிரதேச செயலர் திரு மதியு. உதயகுமார் இதற் கான நடவடிக்கை எடுத் துள்ளார்.

நேற்றுமாலை 4 மணிக்கு கிராம சக்தித் திட்டம் தொடர்பாகப் பிரதேசசெய லகத் திட்டமிடல் அதிகாரி கள், கிராமஅலுவலர் சங் கர்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டு கிராம சக்தித் திட்டம் தொடர்பில் விளக் கமளித்தனர். (க-50)

நவாலி, அட்டகிரி சிவன் ஆலயத்தில் அண் மையில் திருவாசக முற்றோதல் நடைபெற் றது. ஆலயத்தின் முதன்மைக் குரு பிரம்மஸ்ரீ கா. துரைச்சாமிக் குருக்கள் தலைமையில் முற்றோதல் நடைபெற்றது. (எ-50)

மிருக வதை செய்த ஒருவருக்கு தண்டம்

சாவகச்சேரி, ஜன. 28

ஆடு ஒன்றைக் கொடுமைப்ப டுத்தும்வகையில்பெட்டிக்குள் அடைத்துச் சென்றவருக்கு சாவகச்சேரி நீதிமன்று கடந்த வியாழக்கிழமை 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

சாவகச்சேரிப் பொலிஸார் கடந்த வியாழக்கிழமை வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த போது ஆடு ஏற்றிக் கொண்டு வந்தவரை கைது செய்தனர். அவர்மீதுமிருகவதைச்சட்டத் தின் கீழ் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

நீதிமன்றில் வழக்கு விசார ணைக்கு எடுக்கப்பட்டபோது சந்தேகநபர்குற்றத்தை ஒப்புக் கொண்டதைஅடுத்துநீதிமன்று தண்டம் விதித்தது. (எ-9)

கைதடியில் விரைவில் கள் விற்பனை நிலையம்

சாவகச்சேரி, ஜன. 28

கைதடியில் நவீன கள் விற் பனை நிலையம் மீண்டும் திறக் கப்படவுள்ளது என்று பனை தென்னை வள அபிவிருத்தி கூட் டுறவுச்சங்கங்களின் தலைவர் வ. தெய்வேந்திரம் தெரிவித் தார். கைதடி நகரை அண்டிய பகுதியில்குடியிருப்புக்கள்அற்ற இடத்தில் உள்ள சங்கக் காணி யில் கட்டடம் அமைக்கும் பணி கள்நடைபெறுகின்றன. அவை பூர்த்திய அடைந்ததும் எதிர்வ ரும்மார்ச்மாதம்முதலாம்திகதி முதல் கள்விற்பனைநிலையம் இயங்கும் என்றும் அவர் தெரி வித்தார்.

கைதடிச் சந்தியில் உள்ள தனி யார் காணியில் கள் விற்பனை நிலையம்முன்னர் இயங்கியது என்றும், காணிஉரிமையாளர் காணியை விடுவிக்கக் கோரி யதை அடுத்துவிற்பனைநிலை யம் இயங்காது இருந்தது என் றும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

பளை பேருந்துத் தரிப்பிடத்துக்குள் வாகனங்கள் – மக்கள் அவதி

கிளிநொச்சி, ஜன. 28

பொலிஸாரின் அசமந்தபோக்குகார ணமாக பளை பேருந்து தரிப்பிடத் தில்பயணிகள்அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பளை பொது பேருந்து தரிப்பிடத்தில் இரவுநேரத்தில் 7 மணிக்குபின்னர் தரிப்பிடம் முழுவதும், அதனை அண்டியவீதியிலும், டிப்பர்கள், பாரா வூர்தி உள்ளிட்டவை நிறுத்தப்படுவ தால் பேருந்துகள் பேருந்து நிலை யத்துக் குள் உட்செல்ல முடியாத நிலை ஏற்படுகிறது. அத்தோடுபயணி கள்பேருந்துநிலையத்துக்குமுன்னால் உள்ள வீதியில் நின்று கூட பேருந்து களை மறிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. வாகனங்கள் வீதிகளில்நிறுத்தப்படுவதால்பேருந் துகள் நிறுத்தாமல் செல்கின்றன.

குறித்த நேரத்துக்குள் பயணிகள் பயணங்களை மேற்கொள்ள முடி யாத நிலையும் காணப்படுகின்றது. பொலிஸ்நிலையத்தில்இருந்து200 மீற்றருக்கு அண்மையில் பேருந்து நிலையம்இருகின்றபோதும், பொலி ஸார்அந்தச்சம்பவங்களைக்கண்டு கொள்ளாமல் இருகின்றனர். பொலி ஸார்வருகைதருகின்றபோதும்வாக னங்கள் அவ்வாறு நிறுத்தப்படு கின் றது. பொலிஸார் கண்டுகொள்ளா மல் செல்கின்றனர். உரியவர்கள் கவனத்தில் எடுத்து இதற்கான நடவ டிக்கையை எடுக்க வேண்டும் என பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பளைப் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரியிடம்கேட் டபோது வாகனங்கள்உள்ளேநிறுத் தப்படுவது விபத்துக்களைத் தடுப்ப தற்காகஎனவும், வெளியில்நிறுத்தப் படுவது தொடர்பாக இன்றைய தினமேநடவடிக்கைஎடுப்பதாகவும் தெரிவித்தார். (க-6)

ஆரம்பமானது

முதன்மை வடிகால்களை துப்புரவு செய்யும் பணி

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ். நகர் ஸ்ரான்லி வீதியில் உள்ள பிரதான வடிகால்களை துப்புரவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வடிகால்களில் கழிவு நீர் தேங்கி வழிந் தோடுவது தடைப்பட்டுள்ளது. அடுத்து அதைத் துப்புரவாக்கும் பணிகளில் தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர் என்று மாநகர பிரதி முதல்வர் து. ஈசன் தெரிவித்தார். கஸ்தூரியார் வீதி புல்லுக்குளம் வரைக்குமான கழிவு நீர் வழிந்தோடும் வடிகால்கள் பல வருடங்களாக துப்புரவு செய்யப்படவில்லை. தற்போது வடி கால்களில்தேங்கியகழிவுகள்யாவும்அகற்றப் பட்டு துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. மாநகர பிரதேசத்தில் உள்ள அதிகமான பிர தானவடிகால்கள்யாவும்துப்புரவுசெய்யப்பட்டு மழை காலத்தில் வெள்ளம் வழிந்தோட வசதி யாக சீர் செய்யப்பட்டு வருகின்றன. (க-17)

ஓவியப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள்

சாவகச்சேரி, ஜன. 28

பயிலுநர் பொது சுகாதாரப் பரிசோதர்களால்வரணி, கரம்பைக்குறிச்சிபிரிவில் நடத்தி ஆய்வுகளின் அடிப்படையில் அந்தப்பகுதி சிறுவர்களிடையேநடத்தப்பட்ட ஓவியப் போட்டியில்வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வும் பயிலுநர் பொது சுகாதார பரிசோதகர்களின்செயற்றிட்டநிறைவுவிழாவும் நாளை வரணி கரம்பைக்குறிச்சி அ.த.க.பாடசாலையில்நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார பயிற்சி நிலையத்தில் பொது சுகாதார பரிசோதகர் பயிலுநர்களாக பயிற்சி பெற்ற ஒரு தொகுதியினர் ஆய்வுக்காக சாவகச்சேரிசுகாதாரமருத்துவஅதிகாரி பிரிவுக்குட்பட்ட வரணி கரம்பைக்குறிச்சி கிராம அலுவலர் பிரிவை மாதிரிக் கிராமமாகத் தெரிவு செய்து ஆறு மாத கால வெளிக்களப் பயிற்சிகளை மேற்கொண்டனர். அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டசுகாதாரநடவடிக்கைகள் மாணவர்களின்பற்சிகிச்சைகள்போன்ற செயற்றிட்டங்களைமேற்கொண்டனர். அந்தவேளையில்அங்குள்ளமாணவர்களிடையே ஓவியப் போட்டியை நடத்தினர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் பங்குபற்றி அனைத்து மாணவர்களுக்கு பரிசுப் பொதிகளும்வழங்கும்நிகழ்வேநடத்தப்படவுள்ளன.

வரணி கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலை அதிபர் க.இளங்கோவன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் க.தயாளனும், சிறப்புவிருந்தினர்களாக யாழ். பிராந்திய பயிற்சி மைய மூத்த விரிவுரையாளர் க.தெய்வேந்திரம், பயிற்சி நிலைய இணைப்பாளர் க.சதீஸ்ரீம், யாழ்.மாவட்டமேற்பார்வைபொதுச் சுகாதாரப் பரிசோதகர் தி.கிளின்ரஜீம், மதிப்புறுவிருந்தினர்களாகயாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணியக சுகாதாரக் கல்வி அலுவலர்களான அ.ஜெயபாலன் இ.ஈஸ்.வரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-9)



சிறைக்கு வருவோரை நல்வழிப்படுத்துங்கள்

சிறைச்சாலை ஆணையாளர் அலுவலர்களுக்கு அறிவுரை

யாழ்ப்பாணம், ஜன.28

சிறைச்சாலைகளுக்கு கைதாகி வரும் நபர்களை நல்வழிப்படுத்தி அவர்களையும் சிறந்த குடிமக்களாக மாற்றும் கடமைகளில் அனைத்து அலுவலர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறு சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சி.தசாநாயக்க தெரிவித்தார். யாழ்ப்பாண சிறைச்சாலை அலுவலர்களின் வருடாந்த ஒன்று கூடல் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் மரில்லோ ஆலோசனைக்கு அமைய முதன்மை சிறைச்சாலை அதிகாரி ந.பிரபாகரன் தலைமையில் ஒன்றுகூடல் நடைபெற்றது. அதில்முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சிறைச்சாலை ஆணையாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:

அரச உத்தியோகங்களில் சிறைச்சாலை உத்தியோகமும் ஓர் சிறந்த உத்தியோகமாகும். இன்றைய நிகழ்வுக்குநீங்கள் அனைவரும் உங்கள் குடும்பங்களுடன் வந்துள்ளார்கள்.

சிறைச்சாலைகளில் பல்வேறுபட்ட குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள்தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களைப் பார்ப்பதற்கு அவர்களின் குடும்பத்தினரும் வருவார்கள். அவர்களுடன் நீங்கள் நேர்த்தியாக நடந்து கொள்ளுங்கள். சிறைகளில் உள்ள நபர்களை நல்வழிப்படுத்தி அவர்களை சிறந்த குடிமக்களாக ஆக்கும் பொறுப்பு அனைத்து அலுவலர்களுக்கும் உள்ளது.

அதை நீங்கள் அர்ப்பணிப்புடன் செய்ய வேண்டும் என்றார். யாழ்ப்பாணத்தில் நீண்டகாலம் பணியாற்றி இடமாற்றம் பெற்று சென்ற அலுவலர்கள், திணைக்களங்களுக்கு இடையிலான விளையாட்டு போட்டிகளில் வெற்றியீட்டிய அலுவலர்கள் நிகழ்வில் மதிப்பளிக்கப்பட்டனர். அவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (எ-8)

வருடாந்த மெய்வன்மை போட்டி

கொடிகாமம், ஜன. 28

மந்துவில் றோமன் கத்தோலிக தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ந.தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெறும் போட்டிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் முதன்மை விருந்தினராகவும், தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகக் கணிதப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் மதிதரன் சிறப்பு விருந்தினராகவும், கணபதி அறக்கொடை நிதியப் பணிப்பாளர் ஓய்வு நிலை அதிபர் க.இராசேந்திரம், மந்துவில் றோ.க.த.க. பாடசாலை ஓய்வு நிலை அதிபர் சி.பவளேந்திரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-159)

வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு

கொடிகாமம் ஜன 28

நாவற்குழி மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில்முதன்மைவிருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலர் சி.சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க. வாமதேவன், தீவக வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பொ.சகிலன், மதிப்புறு விருந்தினர்களாக நாவற்குழி மகா வித்தியாலய ஓய்வு பெற்ற பிரதி அதிபர் திருமதி செ.சுசீலா பழைய மாணவன் செ.சுகந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (க-159)

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய இல்ல மெய்வன்மை

கொடிகாமம், ஜன. 28

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிநாளை செவ்வாய்க்கிழமை மதியம் ஒரு மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் தா.கணேசபாலேந்திரன் தலைமையில் இது நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக சட்டத்தரணியும் ஓய்வு நிலை கோட்டக் கல்விப் பணிப்பாளருமான நா.சத்தியநாதன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி பிரதீபா கிருஷ்ணபிள்ளை, மதிப்புறு விருந்தினராக ஆரம்பப் பிரிவு ஓய்வு பெற்ற பகுதித் தலைவர் திருமதி தயாபரி சூரியகுமாரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(த-159)

புதுக்காடு – தாளையடி வீதியை சீரமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 28

புதுக்காடு தாளையடி வீதியிலிருந்து கிழக்குப் பக்கமாக செல்லும் மருதங்கேணி சுனாமிக்குடியிருப்பு வீதி பல ஆண்டுகளாகத் திருத்தப்படாமல் குன்றும் குளியும் நிறைந்துள்ளது. இதனை விரைவில் சீரமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்படுகிறது. மருதங்கேணி மக்கள் இந்த பாதை ஊடாகவே மருத்துவமனை, வங்கிகள், பிரதேசசெயலகம், பிரதேச சபை போன்றவற்றுக்கும் ஏனைய அரச, தனியார் அலுவலகங்களுக்கும் வேறு பல தேவைகளுக்கும் செல்கின்றனர். குறித்த வீதி பருத்தித்துறை பிரதேச சபைக்கு உட்பட்டது. இதனை விரைவில் சீரமைக்க வேண்டும்என்று அங்குள்ளமக்கள்கோரிக்கை விடுக்கின்றனர். (த-70)

அளவெட்டிதெற்கு கிராமஅபிவிருத்திச் சங்க தைப்பொங்கல் கடந்த 15 ஆம் திகதி உழவர் திருநாளில் விழா தலைவர் இ.இடபாரூபன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. (க)

சிறிகணேசா வித்தியாலய இல்லமெய்வன்மைப் போட்டி

சாவகச்சேரி ஜன. 28

எழுதுமட்டுவாழ் தெற்கு சிறிகணேசா வித்தியாலய இல்லமெய்வன்மைப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. அதிபர் த.சோதி.லிங்கம் தலைமையில்நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலக முதன்மை,உள்ளகக் கணக்காய்வாளர் க.கமலரூபன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ந.சிறிகாந்தா மதிப்புறு விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் இ.கயிலைநாதன் ஆகியோர் கலந்து கொள்வுள்ளனர். (க-9)

இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

சாவகச்சேரி ஜன. 28

யாழ்ப்பாணம் சாவகச்சேரி மகளிர் கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மண்டபத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அதிபர் திருமதி ல.முகுந்தன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், மதிப்புறு விருந்தினராக சாவகச்சேரி கிருபா சாரதிய பயிற்சிப் பாடசாலை அதிபர் அ. கிருபாகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஜ-9)



கிளிநொச்சியில் புதிய உப தொடருந்து நிலையம் திறப்பு

கிளிநொச்சி,ஜன.28

அறிவியல் நகர் உப தொடருந்து நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டு புதிய ரயிலின் சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அறிவியல் நகரிலில் அமைக்கப்பட்ட உபதொடருந்து நிலையம், போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுனரணதுங்கவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொடருந்து திணைக்களம் வாங்கிய, இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்த புதிய எஸ் 13 உத்தரதேவி தொடருந்து கொழும்பு-காங்கேசன் துறை இடையில் சேவையினை ஆரம்பித்துள்ளது.

இந்த தொடருந்து சேவை, அமைச்சரால் மருதானை தொடருந்து நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட துடன் யாழ்ப்பாணத்துக்குத் தொடருந்தில் பயணித்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகம் மற்றும் கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலை அருகில் இந்த தொடருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.இங்குஉத்தரதேவி, யாழ்தேவி, இரவு தபால் தொடருந்து ஆகியனநிறுத்தப்படவுள்ளன.

புதிய தொடருந்து 30 ஆம் திகதி சேவையினை ஆரம்பிக்குமென தெரிவிக்கப்பட்ட நிலையில், முன்கூட்டியே 27 ஆம் திகதி தொடக்கம் கொழும்பு - காங்கேசன் துறை இடையில் சேவையில் ஈடுபட்டுள்ளது.

மருதானையில் இருந்து ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பிக்கும் தொடருந்து யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை அடைந்து, காங்கேசன்துறை தொடருந்து நிலையத்துக்கு பயணிக்கும். பின்னர் யாழ்ப்பாணம் தொடருந்து நிலையத்திலிருந்து மாலை 6 மணிக்கு கொழும்பு நோக்கி புறப்படும். இதில் அமைச்சர் உட்பட தொடருந்து திணைக்கள அதிகாரிகள், முக்கிய விருந்தினர்களும் பயணித்தனர்.

இன்று கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு முற்பகல் 11.50 இற்கும், யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு காலை 6.10 இற்கும் தொடருந்து சேவையில் ஈடுபடும். (க-214)

கிறிஸ்தவசபைக்கு எதிராக நகரசபையால் வழக்குத் தாக்கல்

வவுனியா.ஜன.28

வவுனியா சின்னப்புதுக்குளத்தில் அமைந்துள்ள கிறிஸ்தவ சபையின் கட்டுமானப்பணிகளின்போது, நகரசபையின் அனுமதியினைப் பெறவில்லை எனத் தெரிவித்து நகரசபையால் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தம்மிடம் உரிய ஆவணங்கள் இருப்பதாகவும், தாம் அனுமதி கோரியபோதும், நகரசபை அனுமதி தரவில்லை என தெரிவித்து வவுனியா நகரசபை மீது கிறிஸ்தவ சபையின் போதகரால் உயர்நீதிமன்றத்தில் இன்னுமொரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த கிறிஸ்தவ சபையின் தலைமைப் போதகர் எமது சபையின் கட்டுமானப்பணிகள் ஆரம்பிப்பதற்கு முன்பாக வவுனியா நகரசபையின் அனுமதி கோரலுக்காக கடந்த 2010 ஆம் ஆண்டு சகல ஆவணங்களும் நகரசபைக்குச் சமர்ப்பித்திருந்தோம்.

கடந்தஎட்டுஆண்டுகளாகஅனுமதிவழங்கப்படவில்லை. இந்த நிலையில் தற்போது நீதிமன்றம் நோட்டிஸ் அனுப்பியுள்ளது.

வழக்கு தொடர்பாக எமது சட்டத்தரணி ஊடாக அனைத்து ஆவணங்களையும் நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளோம்.

வவுனியா நகரில் பல கட்டடங்கள் நகரசபையின் அனுமதி இன்றியே கட்டப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக நகரசபைக்கு எதிராக உயர்நீதிமன்றில் வழங்குத்தாக்கல் செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக வவுனியா நகரசபைத் தவிசாளரைத் தொடர்புகொண்டு கேட்டபோது

குறித்த கட்டடம் உரிய அனுமதி இன்றியே அமைக்கபட்டுள்ளது. அதனை அமைப்பதற்கு முறையான ஆவணங்கள் வழங்கபட்டிருந்தால் கட்டடம் அமைப்பதற்கான அனுமதி நகரசபையால் வழங்கப்பட்டிருக்கும். இந்த விடயம் தொடர்பாக அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் நகரசபைக்குத் தெரியபடுத்தியமையாலேயே நாம் நீதி மன்றில் வழக்குத் தொடுத்துள்ளோம். எனவே நீதி மன்று இந்த விடயம் தொடர்பாகத் தீர்மானிக்கும் - என்றார். (க-110)

ஒட்டுசுட்டானில் சிறுத்தை கடித்து ஒருவர் காயம்

முல்லைத்தீவு.ஜன.28

ஒட்டுசுட்டான்பிரதேசத்துக்கு உட்பட்டமுத்துஐயன்கட்டு காட்டுப்பகுதியில், விறகு வெட்டசென்றகுடும்பஸ்தர் ஒருவர் சிறுத்தைத் தாக்கு தலுக்கு இலக்காகி ஒட்டு சுட்டான் மருத்துவமனை கொண்டு செல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக மாஞ்சோலை மருத்துவ மனையில் சேர்க்கப்பட் டுள்ளார்.

முத்துஐயன் கட்டுப்பகுதி யினை சேர்ந்த 55 அகவையுடைய பொன்னம்பலம் நடராசா என்பவரே இவ்வாறு சிறுத்தை கடிக்கு இலக்காகியுள்ளார்.(க-28)

விவசாயப் பாதிப்பை மதிப்பிடும் பணி தொடக்கம்

முல்லைத்தீவு.ஜன.28

மழைவெள்ளத்தால் கற்சிலைமடு பெரியகுளத் தின் கீழ் உள்ள விவசாயத் தில் ஏற்பட்ட பாதிப்பை மதிப்பிடும் பணிகள் தொடங்கப் பட்டுள்ளன. அதற்கான குழுவினர் கடந்த 26 ஆம் திகதி தமது களப் பயணங் களைத் தொடக்கியுள்ள னர்.

பேராறு, பண்டார வன்னி வலது கரை, 3 ஆம் கண் டம் ஆகிய பகுதிகளில் வெள் ளத்தால் பாதிக்கப்பட்ட விவ சாய நிலங்களை பார்வை யிட்டு எத்தனை ஏக்கர் ? என்னவீதம் பாதிக்கப்பட் டுள்ளது போன்ற தரவுகள் திரட்டப்படவுள்ளன. ஒவ் வொரு விவசாயினதும் வயல் நிலங்களும் கமக் கார அமைப்பினரின் அனு சரணையுடன் பார்வையி டப்பட்டு மதிப்பிடப்படுகின் றது. (க-500)

மன்னார் சௌத்பார் பகுதியில் வயோதிபரின் சடலம் மீட்பு

மன்னார்.ஜன.28

மன்னார் சௌத்பார் பிரதான் வீதி , சாந்திபுரம் உப்பளம் பகுதியில் வயோதிபர் ஒருவருடைய சடலத்தினை மன்னார் பொலிஸார் சனிக்கிழமை காலை மீட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் மன்னார் பனங்கட்டிக் கோட்டு கிராமத்தை வதிவிடமாக கொண்ட கதிர்காமநாதன் அருளானந்தன் (வயது82) என அவரது மகனால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த வயோதிபர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வீட்டில் இருந்து வெளியே சென்ற நிலையிலே நேற்று சனிக்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டார்.

அந்தப் பகுதியால் சென்றவர்கள் சடலத்தைக் கண்டு மன்னார் பொலிஸாருக்குத் தகவல் வழங்கிய நிலையிலே, மன்னார் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து சடலத்தை மீட்டுள்ளனர்.

குறித்த வயோதிபரின் மரணம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-56)

உலக கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம் மன்னாரில் நேற்று

சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டன

மன்னார்.ஜன.28

உலக கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தை முன்னிட்டு மன்னார் முருங்கன் கிறிஸ்தவ திருச்சபைகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளிக் கிழமை மாலை 4.30 மணியளவில் நறுவலிக்குளம் மாதிரிக் கிராமத்தில் அமைந்துள்ள அன்னை வேளாங்கன்னி ஆலயத்தில் நடைபெற்றது.

வழிபாட்டைத் தொடர்ந்து அந்தப் பகுதியிலுள்ள மெதடிஸ்த ஆலயத்துக்கு இரு திரு அவைகளிலுள்ள இறை மக்களும், அருட்பணியாளர் துறவறச் சபையினரும் பவனியாகச் சென்றனர்.

மெதடிஸ்த ஆலயத்தில் இறை வழிபாடுகளும் மறையுரை மற்றும் முக்கியஸ்தர்களின் உரைகளும் இடம்பெற்றன.

நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி அ.விக்ரர் சோசை,மெதடிஸ்த திருச்சபையின் வடக்கு - கிழக்கு குரு முதல்வர் எஸ்.எஸ்.ரெரன்ஸ் அடிகளார், முருங்கன் மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி.எல்.சுரேஸ் றெவல் அடிகளார், அருட்பணி.திருமறை தாசன், மன்னார் சிறிய குருமட இயக்குனர் அருட்பணி நேசன் அடிகளார், மன்னார் மெதடிஸ் ஆலய சேகரக் குரு அருட்பணி.கே.ஜெகதாஸ் அடிகளார், மெதடிஸ்த அருட்சகோதரி நித்தியகலா,அருட்பணி நேரு அடிகளார் எனப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (க-60)

பொங்கல் விழாவும் சிறுவர் பூங்கா திறப்பு நிகழ்வு

சுழிபுரம் தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தாலும், பொது அமைப்புக்களாலும் நடத்தப்பட்ட தைப் பொங்கல் விழாவும் சிறுவர் பூங்கா திறப்பு விழாவும் அண்மையில் சிறப்பாக நடைபெற்றுள்ளன.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகநாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டார். ஈ.சரவணபவனின் சிறப்பு நிதி மூலம் ஒதுக்கப்பட்ட 1.5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா அவரால் திறந்து வைக்கப்பட்டது.

விருந்தினர்களாகதவிசாளர் த.நடனேந்திரன், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் அ.ஜயந்தனும் கலந்து கொண்டனர். (க)

வவுனியாவில் கல்லூரி மாணவர்களுக்கு நிழல் குடை அமைக்க நடவடிக்கை

வவுனியா.ஜன.28

விபுல சாரணன் செல்வன் தர்மசீலன் லிசாந்தனின் அரசதலைவர் விருது செயற்றிட்டமாக வவுனியா விபுலாநந்தா கல்லூரி மாணவர்களுக்கான பயணிகள் நிழல் குடை, மாணவர்களின் நலன் கருதி அமைக்கும் நடவடிக்கையின் ஆரம்ப நிகழ்வு விபுலாநந்தா கல்லூரி, விபுல சாரணர்களின் பொறுப்பாசிரியர் தற்பரன் தலைமையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

நிகழ்வில் வவுனியா நகர சபை உறுப்பினரும் விபுல சாரணர்களின் உயர் விருதான பேடன் பவல் விருதினையும், அரசதலைவர் விருதினை பெற்றவரும், கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் செயலருமான சுந்தரலிங்கம் காண்டீபன் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலர் சிறிதரன், கல்லூரியின் அரசதலைவர் சாரணர்களான வி.சஜீவ்நாத், வ.பிரதீபன், யோ.சதுர்சிகன் ஆகியோருடன் சாரணர்களும் கலந்து கொண்டனர். (க-222)

வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் கையகப்படுத்திய

நாகதாழ்வு மயானத்தை மீட்டுத் தரக்கோரிக்கை

மன்னார்.ஜன. 28

இறந்தவர்களுக்கான இறுதிச் சடங்கு செய்வதற்கு பதினைந்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மன்னார் நகர பொது மயானத்துக்கே செல்ல வேண்டியுள்ளது. எனவே நாகதாழ்வு இந்து மயானத்தை உடனடியாக மீட்டுத்தாருங்கள். அல்லது பொருத்தமான இடமொன்றை பெற்றுத்தாருங்கள் என்றும் மக்கள் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது:

மன்னார் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நாகதாழ்வு முள்ளிப்பள்ளம் சிறுநாவற்குளம் கிராமங்களின் மக்கள் கடந்த கால போரால் இடம்பெயர்ந்து போரின் பின் 2010 ஆம் ஆண்டில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்கள்.

போரின் போது உயர்பாதுகாப்பு வலயமாக இருந்த எமது கிராமத்தின்பல பகுதிகளை வனவிலங்குதிணைக்களத்தினர் அபகரித்து, எல்லைகளை வகுத்துள்ளனர் .

இவற்றில்கோவில்மற்றும்குளங்களுடன்மயானமும்அடங்குகிறது. மிக அவசரமாக மயானத்தை மீட்டுத்தரு மாறு நாகதாழ்வு மக்கள் கோரிக்கையினை முன்வைத்தார்கள்.

மக்களுக்கு பதில் அளித்த நாடாளுமன்ற உறுப்பினர் வனவிலங்கு திணைக்களத்தினருடன் பேசுவதற்கு ஏதுவாக மன்னார் பிரதேச செயலரிடம் கடிதம் ஒன்றை சமர்ப்பிக்குமாறும், இது தொடர்பாக உரிய தரப்பினருடன் பேசி நடவடிக்கை எக்கப்படும் என்றும் தெரிவித்தார்

இதன் போது மன்னார் மாவட்ட செயலர் சி.ஏ.மோகன்றாஸ், மன்னார் பிரதேச செயலர் திருமதி சிவசம்பு மற்றும் அரச அதிகாரிகளும் உடனிருந்தனர். (க-213)

மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சமூர்த்தி அலுவலர் இடைநிறுத்தம்

முல்லைத்தீவு, ஜன.28

முல்லைத்தீவு, கரைத்துறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவில் சமூர்த்தி அலுவலர் ஒருவர் மோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பயனாளிகளின் பெயர்களில் கடன்கள் பதிவு செய்யப்பட்டபோதும், பயனாளிகளுக்கு வழங்காது மோசடி செய்துள்ளார் என்று கூறப்படுகின்றது. இந்தக் குற்றச்சாட்டு கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் சுமத்தப்பட்டிருந்தது.

குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டதை அடுத்து அந்த அலுவலர் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். இந்த விவரங்கள் சமூர்த்தி அதிகார சபைக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அவற்றின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

விசாரணையின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முதற்கட்ட முடிவு மாவட்டச் செயலகத்துக்குத் தற்போது அனுப்பப்பட்டுள்ளது. குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அலுவலரை உடனடியாக இடைநிறுத்தம் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

அதற்கமைய அலுவலர் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என்று மாவட்டச் செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-105)

உலர் உணவு வழங்கல்

வவுனியா,ஜன.28

வவுனியா தரணிக்குளத்தில் வசித்துவரும் கணவனை இழந்த 3 பிள்ளைகள் கொண்ட பெண்தலைமைத்துவக் குடும்பத்துக்கு தரணி தீபம் விளையாட்டுக் கழக இளைஞர்களால் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

கணவர் இறந்த பின் மின்சாரக்கட்டணம் செலுத்தாமையால் சுமார் 40 ஆயிரம் ரூபா வரை நிலுவையில் இருந்து செலுத்தப்படாதுள்ளது.

வீடு பூட்டப்பட்டு உள்ளதால் அயலவர் வீட்டில் தற்காலிகமாக வசித்து வருகின்றனர். இவர்களுக்கான ஒருமாத உலர் உணவு சிவானந்தன் நற்பணி மன்றத்தினால் அமரர் தவராணி சிவானந்தன் நினைவாக கொக்குவிலைச்சேர்ந்த மகன் சுரேஷ் சிவானந்தன் குடும்பத்தினால் வழங்கி வைக்கப்பட்டது.

மாவட்ட சமூகசேவை அலுவலர் செ.சிறிநிவாசன், அபிவிருத்தி அலுவலர் கிறிஷ்வசந், வெளிச்சம் அறக்கட்டளை நிறுவன தலைவர் பா.லம்போதரன், தரணிதீபம் விளையாட்டுக்கழக இளைஞர்கள் எனப்பலரும் நிகழ்வில் கலந்து கொண்டு குடும்பத்தின் முன்னேற்ற நடவடிக்கை பற்றி ஆராய்ந்தனர். (க-222)

கள்ளச்சாரயம் வடிப்பு மூன்று பேர் கைது

முல்லைத்தீவு,ஜன.28

முல்லைத்தீவு சுதந்திரபுரம் கொலனிப் பகுதியில் பாவனைக்கு இல்லாத வீடு ஒன்றில் கள்ளச்சாராயம் வடிப்பதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதற்கமைய நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ஏ.சந்திரபால தலைமையிலான குழுவினர் குறித்த பகுதிக்குச் சென்று, சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார்கள்.

இதன்போது கசிப்பு காச்சும் நடவடிக்கையில் ஈடுபட்டமூவரையும் கையும் களவுமாக பிடித்துள்ளதுடன் அவர்களிடம் இருந்த கசிப்பு காச்சுவதற்காக பயப்படுத்தப்பட்டபொருள்கள் உள்ளிட்ட 5 பெரல் கோடா, 20 லீற்றர் கசிப்பு என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சுதந்திரபுரம் கொலனிப் பகுதியில் மக்களின் பாவனையற்ற வீடுகளைப் பயன்படுத்தி சட்டவிரோ செயல்கள் அதிகரித்து வருவதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளார்கள்.

பாவனையற்ற வீட்டினைப் பயன்படுத்தி சட்டவிரோக் கசிப்புக் காச்சும் நடவடிக்கையில் ஈடுபட்ட மூவரையும் கைது செய்து சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தியுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளார்கள். (க-ரி3)

வாழ்வாதாரஉதவிவழங்கல்

முல்லைத்தீவு,ஜன.28

அமைச்சர் றிசாட் பதியுதீனின் நிதியீட்டத்தில் கற்சிலைமடு பெரிய புளியங்குளம் கிராம மக்களுக்கு நேற்றுக் காலை வாழ்வாதாரப்பொருளாக முட்கம்பி வழங்கப்பட்டது.

ஒட்டுசுட்டான் பிரதேச சபை உறுப்பினர் நா.வன்னியசிங்கம் மற்றும்கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் ந.இஸ்ரவேல் ஆகியோரால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முட்கம்பிகள் வழங்கப்பட்டன. (500)

அழகாபுரியில் "படிப்பகம்"

கிளிநொச்சி,ஜன.28

சிறகுகள் அமையத்தின் "படிப்பகம்" செயற்றிட்டம் ஊடாக கிளிநொச்சி அழகாபுரி வித்தியாலய நூலகத்துக்கான நூல்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதற்கான நிதி உதவியினை வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையின் 91 மாணவிகள் வழங்கியிருந்தனர்.

சிறகுகள் அமையத்தின் குறித்த செயற்றிட்டம் ஊடாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலைஆகிய மாவட்டங்களில் 15 பாடசாலை நூலகங்களுக்கான நூல்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

ஆரம்பப் பிரிவு மாணவர்களின் வாசிப்பு ஆற்றலினை விருத்திசெய்யும் வகையில், உருவாக்கப்பட்ட "படிப்பகம்" செயற்றிட்டம் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

விழிப்புணர்வு கருத்தமர்வு

மன்னார்,ஜன.28

தேசிய ரீதியில் அரச தலைவரினால் ஆரம்பிக்கப்பட்ட போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு 'பிள்ளைகளிடம் இருந்து கற்று கொள்ளுங்கள்' எனும் தொனிப் பொருளில் மன்னார் புனித சவேரியார் பெண்கள் பாடசாலையில் விழிப்புணர்வுக் கருத்தமர்வு பாடசாலை அதிபர் கில்டா சிங்கராஜ தலைமையில் நேற்று முன்தினம் காலை 7.30 மணியளவில் பொது ஒன்று கூடலின் போது இடம் பெற்றது

குறித்த கருத்தமர்வில் பாடசாலை ரீதியில் மாணவர்கள் எவ்வாறு போதை பொருள்கள் பாவனையில் இருந்து தங்களை பாதுகாத்து கொள்ள முடியும் என்பது தொடர்பாகவும், போதைப் பொருள் பாவனை தொடர்பான குற்ற செயல் ஒன்றினால் பாதிக்கப்படும் போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பாகவும், மன்னார் நகர் மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்களுக்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரி மற்றும் ஊடகவியளாலர்களினால் கருத்துரைகள் வழங்கப்பட்டது. அத்துடன் மாணவர்களுடைய கருத்துக்களும் உள்வாங்கப் பட்டு ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

தொடர்ச்சியாக குறித்த போதை பொருள் ஒழிப்புத் தொடர்பான செயற்பாடுகள் மற்றும் விழிப்புணர்வுப் பேரணிகள் இடம் பெற இருப்பது குறிப்பிடத் தக்கது. (க-222)

பாடசாலைக்கு வழங்கப்படவுள்ள பிளாஸ்ரிக் கதிரைகள்

சாவகச்சேரி, ஜன. 28

சாவகச்சேரி கல்வயல் சிறிசண்முகானந்தா வித்தியாலய மாணவர்களின் பயன்பாட்டுக்கென 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பிளாஸ்ரிக் கதிரைகள் நாளை வழங்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட பிளாஸ்ரிக் கதிரைகள் வித்தியாலய அதிபர் க.மகிந்தனிடம் கையளிக்கவுள்ளன . (க-9)

மைதான நிதியத்துக்கு நிதி வழங்கிவைப்பு

வவுனியா,ஜன.28

வவுனியா விபுலானந்தாக் கல்லூரியின் மைதான நிதியத்துக்கு முதற்கட்டமாக ஒரு தொகை நிதி நேற்று முன்தினம் வழங்கிவைக்கப்பட்டது.

தமது பாடசாலைக்கு மைதானம் இன்மையால் அதற்கான காணி ஒன்றைக் கொள்வனவு செய்யும் பொருட்டு விபுலானந்தா பாடசாலைச் சமூகத்தால் உருவாக்கப்பட்டிருந்த மைதானநிதியத்துக்கு நேற்றுமுன்தினம் ஒரு தொகைநிதி வழங்கிவைக்கபட்டிருந்தது.

அந்தவகையில் மாகாணசபை முன்னாள் உறுப்பினர் செ.மயூரன் ஒரு இலட்சம் ரூபாயும், நகரசபை உறுப்பினர்களான காண்டீபன் ஒரு இலட்சம் ரூபாயும், சுமந்திரன் 15 ஆயிரம் ரூபாயும், பரதலிங்கம், செபநேசராணி, மதியழகன், பாயிஸ்,ஆகியோர் இணைந்து 65 ஆயிரம் ரூபாயுமாக மொத்தம் இரண்டு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பணம் வழங்கிவைக்கபடவுள்ளது. அதன் முதற்கட்டமாக ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் பணம் நேற்றுமுன்தினம் மைதான நிதியத்துக்கு வழங்கிவைக்கப்பட்டது. (க-110)

அறநெறிப் பாடசாலையின் ஆண்டு நிறைவு நிகழ்வு

முல்லைத்தீவு.ஜன.28

நெடுங்கேணி மாமடு சந்தி வெள்ளைப் பிள்ளையார் ஆலய கற்பக அறநெறி பாடசாலையின் முதலாம் ஆண்டு நிறைவு நிகழ்வு கடந்த 20 ஆம் திகதி ஆலய பரிபாலன சபையின் தலைவர் எஸ். சுபாஸ்கரன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி சாந்தி சிறிஸ்ந்தராஜா ,சி.சிவமோகன் , வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜி .ரி .லிங்கநாதன் , பிரதேச சபை உறுப்பினர் சத்தியசீலன் ,ஒட்டுசுட்டான் பிரதேச செயலக கலாசார அலுவலர் மோகன் ,அறநெறிப் பாடசாலையின் ஒருங்கிணைப்பாளர் சுகந்தன் , ஆலய பரிபாலன சபையின் பொருளாளரும் ,காப்பாளருமான தர்மலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-222)



மாணவர்களுக்கு புத்தகப்பைகள் வழங்கல்

யாழ்ப்பாணம்.ஜன.28

பெரிய பண்டிவிரிச்சான் பகுதியில் போரால் பாதிக்கப்பட்டு வறிய நிலையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 52 மாணவர்களுக்கு புத்தகப்பைகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் களரி அமைப்பினூடாக கடந்த 12 ஆம் திகதி சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

பிரித்தானியாவில் வசிக்கும் ரமேஸ் ஆதிரனின் முதலாவது பிறந்த நாளை முன்னிட்டு அவர்களின் குடும்பத்தால் இந்த உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

பெரியபண்டிவிரிச்சான் பங்குத்தந்தையின் வேண்டுகோளுக்கிணங்க அப்பகுதியில் வசிக்கும் மாணவர்களுக்கு மாதத்தில் ஒரு நாள் உளவியல் ரீதியான கற்கைகளும் அன்றைய தினத்தின் மதிய உணவும் யாழ்ப்பாணம் களரியால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இப்புத்தகப் பைகள் அனைத்தும் போரினால் தனது இரு கால்களையும் இழந்த இராசேந்திரனால் தயாரிக்கப்பட்டவை. (ஜ)

வாழ்வாதார உதவி வழங்கல்

முல்லைத்தீவு.ஜன.28

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்த தருமபுரம் கிழக்கைச் சேர்ந்த மாற்றுத்திறனாளியின் குடும்பதினருக்கு, விவசாய செய்கைக்கான உதவியாக நீர் இறைக்கும்பம்பி வழங்கப்பட்டுள்ளது.

மக்கள் நலன் காப்பகம் நேற்று முன்தினம் நீர்ப்பம்பியும் அதனுடன் சேர்ந்த உபகரணங்களும்.வேலிக்கான முள்கம்பியும்.நிலத்தை பண்படுத்தி. விதை தானியங்கள் வாங்குவதற்க்குமான நிதியும் வழங்கப்பட்டது. தருமபுரம் கிழக்கு கிராமஅலுவலர் திருமதி த.விஜயசாந்தினி முன்நிலையில் மக்கள் நலன் காப்பக முக்கியஸ்தர்களால் உதவி வழங்கி வைக்கப்பட்டது. (க-222)

போதைப் பொருள் ஒழிப்பு வாரத்தில்

கஞ்சா விற்பனை பற்றிய தகவலை வழங்கிய மாணவனுக்கு அச்சுறுத்தல்

விழிப்புணர்வை முடக்கும் திட்டமிட்ட செயலா?

கிளிநொச்சி, ஜன. 28

கஞ்சா விற்பனை செய்பவர் தொடர்பான தகவலைப் பொலிஸாருக்கு வழங்கிய மாணவன் பாடசாலைக்குச் செல்ல முடியாத அளவுக்கு அச்சுறுத்தலுக்குள்ளாகி பாடசாலையை விட்டு விலகும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசதலைவர் மைத்திரிபாலவின் பணிப்பின்பேரில் தேசிய ரீதியில் பாடசாலை மட்டத்தில் போதைப் பொருள் ஒழிப்பு வாரத்தில் இப்படியொரு நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோணாவில் மகா வித்தியாலயத்தில் கடந்த 21 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை இடம்பெற்ற போதைப் பொருள் ஒழிப்பு வாரத்தில் மாணவர்களுக்கு வழிப்புணர்வுக் கருத்துக்களை விழங்குவதற்கும் அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்துகொள்வதற்கும் பொலிஸார் அழைக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது தரம் எட்டில் கற்கும் மாணவன் ஒருவர் தனது வீட்டுச் சூழலில் கஞ்சா மற்றும் கசிப்பு விற்பனை இடம்பெறுகிறது என்றும், இதனால் தமக்குப் பெரும் நெருக்கடி ஏற்படுகிறது என்றும் தெரிவித்திருந்தார். அங்கு தகவல் வழங்கிய மாணவனின் விவரங்கள் கஞ்சா விற்பனை செய்பவர் என்று கூறப்படும் நபருக்கு வழங்கப்பட்டுள்ளன.

அந்தநபர் தகவல் வழங்கிய மாணவனைத் தாக்க முயற்சித்துள்ளார். மாணவனின் வீடு தேடிச் சென்றும் அச்சுறுத்தியுள்ளார். சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற நபரால் தனது மகன் எந்த வேளையும் தாக்கப்படலாம் என்ற காரணத்தால் பெற்றோரர் பாடசாலைக்குக் கடிதம் எழுதி வழங்கிவிட்டு பாடசாலையிலிருந்து மாணவனை நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பரிதாப நிலையைக் கண்டு பாடசாலைச் சமூகம் கவலையடைந்துள்ளது.

இவ்வாறு சிறு வயதிலேயே சமூக சீர்கேடுகளுக்கு எதிராக எழுந்துவரும் மாணவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுவது இந்த மாணவன் போன்று துணிந்து செயற்படும் ஏனைய மாணவர்களையும் எதிர்காலத்தில் முடக்கும் நிலையை ஏற்படுத்திவிடும் என்றும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

அந்த குறித்த மாணவனின் பாதுகாப்புக்கு உரிய தரப்பினர் உத்தரவாதம் வழங்க வேண்டும்.

சம்மந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகிறது.

மாணவன் தற்போது வீட்டுச் சூழலிலும் நெருக்கடிகளை எதிர் கொண்டு வருகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையானது,

கஞ்சா விற்பனை பற்றிய தகவல்களை மாணவர்கள் அறிந்தாலும் அவற்றைக் வெளியில்கூறாது முடக்கி வைத்திருக்கும் திட்டமிட்ட செயலா? என்றும் சந்தேகம் எழுப்பப்படுகிறது.

(த-214)

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட ஐந்து வீதிகள் சீரமைப்பு

2018 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்ட நிதியூடாகப் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட ஐந்து வீதிகளின், சீரமைப்புப் பணிகள் 25 மில்லியன் ரூபாசெலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தவிசாளர் செ.பிறேமகாந் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட,சுதந்திரபுரம், விசுவமடு,நெத்தலியாற்று வீதி, மந்துவில் 2ஆம் குறுக்குவீதி, மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக் குட்பட்ட கருவேலன்கண்டல் மானூரிவிவீதி,ஒட்டுசுட்டான்பண்டாரிக்குளம் வீதி,போன்ற வீதிகளே தார்மற்றும் கொங்கிறீற் வீதிகளாக சீரமைக்கப்படவுள்ளதாகவும், இதற்காக 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த தவிசாளர், கடந்த வருடயிறுதியில், எம துசபைக்குட்பட்ட 120கிலோ மீற்றர் நீளமான வீதிகள் சேதமடைந்துள்ளதாகவும், குறிப்பிட்டார். இக்கோரிக்கைகள் இடர் முகாமைத்துவத்தினருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பியுள்ளதாகவும், இங்கு வரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது 2019 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட நிதியூடாகவீதிசீரமைப்புக்கே முன்னுரிமைஅளிக்கப்படும் என தெரிவித்துள்ளதாகத் தவிசாளர் தெரிவித்தார். (க - 500)

"காந்தள்" புலம்பெயர் அமைப்பின் தைப்பொங்கல் நிகழ்வு

முல்லைத்தீவு.ஜன.28

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புப் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட மருதமடுக் கிராமத்தில் காந்தள் புலம் பெயர் அமைப்பின் ஏற்பாட்டில், தைப்பொங்கல் விழா இடம்பெற்றுள்ளது.

நிகழ்வில் மாணவர்களுக்குக் கற்றல் கருவிகளும், முதியோர்களுக்கான மாதாந்த உதவு தொகைகளும் காந்தள் புலம்பெயர் இளையோர் அமைப்பால் வழங்கப்பட்டுள்ளன.

காந்தள் புலம்பெயர் அமைப்பின் 'உறவுகளுடனான பாசம்பகிரும் பயணம்' எனும் செயற்றிட்டத்தில், தைப்பொங்கல் நாளான 15 ஆம் திகதி மருதமடுப் பிள்ளையார் கோவிலில் இடம்பெற்றுள்ளது.

விருந்தினர் வரவேற்புடன் தொடங்கி, 200பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் கருவிகளும், 30 முதியோர்களுக்கான மாதாந்த உதவுத் தொகையும் காந்தள் புலம்பெயர் இளையோர் அமைப்பினால் வழங்கிவைக்கப்பட்டன.

விருந்தினர்களாக வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் , புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் உப தலைவர் க.ஜனமேனசஜந், கோம்பாவில் கிராம அலுவலர் இ.தேவகி, மாணிக்கபுரம் கிராம அலுவலர் தி.உமாஜிதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வுகளை ஒழுங்குபடுத்திய மு.காயத்திரி மற்றும் நீ.நிக்சன் ஆகியோருடன், மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(க-246)

அணில்க் குஞ்சால் விபத்து: மூவர் மருத்துவமனையில்

மட்டக்களப்பு, ஜன. 28

வீதியின் குறுக்காக ஓடிய அணில் குஞ்சு காரணமாக இடம்பெற்றவிபத்தில் 3 பேர் காயமடைந்து மருத்துவம னையில்சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கிழக்கு மாகாணம் களுவாஞ்சிக் குடியில் நேற்று இடம்பெற் றது. மட்டக்களப்புபகுதியிலி ருந்து களுவாஞ்சிகுடி நோக்கி மோட்டார் சைக்கி ளில் சென்று கொண்டிருந்த வர் வீதியின் குறுக்கே திடீ ரென்றுஅணில்குஞ்சுஓடுவ தைக் கண்டு திடீரென்று வேகத்தடுப்பை (பிறேக்) பிரயோகித்தார். அணில் பாதுகாப்பாகத்தப்பிச்சென்ற அதேகணம் அவரது உந்து ருளியின் பின்புறத்தில் முச் சக்கரவண்டிமோதியது.

உந்துருளியில் பயணித்த வர் திடீரென்று வேகத்தடை ஏற்படுத்தியதால் அதன் பின்னே வந்துகொண்டி ருந்த முச்சக்கரவண்டி உந்துருளியை மோதியது என்று தெரிவிக்கப்பட்டது.

அதனால் அவற்றில் பய ணித்த 3 பேர் காயமடைந்த னர். அவர்கள்களுவாஞ்சிக் குடிஆதார மருத்துவமனை யில்சேர்க்கப்பட்டுள்ளனர். இரண்டு வாகனங்களும் கடுமையாகச் சேதமடைந் தன என்று தெரிவிக்கப்பட் டது. (த-46)

கொக்கட்டிச்சோலைப் படுகொலையின் 32ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று

கொக்கட்டிச்சோலை, ஜன. 28

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை படுகொலையின் 32ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு நாளை மட்டக்களப்பு மகிழடித்தீவு சந்தியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி வளாகத்தில் இன்று திங்கட்கிழமை பிற் பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன என்று மண்முனை தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளரும், பிரதேச தமிழ் அரசுக் கட்சியின் தலைவரு மான சி.புஸ்பலிங்கம் தெரிவித்தார்.

1987ஆம் ஆண்டு முதலைக்குடா இறால் வளர்ப்பில் வேலைசெய்த மக் கள் படுகொலை செய்யப்பட்டனர். இந் தப் படுகொலையில் முனைக்காடு, முதலைக்குடா, மகிழடித்தீவு, பண்டாரி யாவெளி, படையாண்டவெளி, கடுக்கா முனை, கொக்கட்டிச்சோலை, அரசடித் தீவு, அம்பிளாந்துறை, கற்சேனை, பட்டிப்பளை, தாந்தாமலை ஆகிய பகு திகளைச்சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் அகப்பட்டிருந்தனர். இந்த நினைவுதினத்தை இந்தப் பகுதி மக்கள் வருடாந்தம் கடைப்பிடித்து வருகின்ற னர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பட்டிப்பளை கிளையிரால் நடத்தப்பட வுள்ள நினைவு தின நிகழ்வில், நினைவுச் சுடர்கள் ஏற்றுதல், மலரஞ் சலி செலுத்துதல் அகவணக்கம் செலுத் துதல், நினைவு உரை கள், "மறைந்தாலும் மறையாது" என்ற சிறப்பு கவியரங்கம் போன்றன நடைபெற வுள்ளன.

நிகழ்வில், கொக்கட் டிச்சோலைப் படுகொ லையில் உயிர்நீத்த உறவுகளின் உறவுக ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடா ளுமன்ற உறுப்பினர் கள், நாடாளுமன்ற உ று ப் பு ன ர் க ள் , கிழக்கு மகாணசபை முன்னாள் உறுப்பினர் கள், மட்டக்களப்பு மாந கர முதல்வர், பிரதி முதல்வர் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைகளின் தவிசாளர் கள், பிரதித் தவிசாளர்கள், உறுப்பினர் கள், மற்றும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி கிளைகளின் உறுப்பினர்கள்



பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர் என்று மண்முனை தென்மேற்குப் பிரதேச இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக் கிளையின் தலை வர் தெரிவித்தார்.

(த)



மன்னாரிலும் வெண்பா பனிப் பொழிவு

மன்னார், ஜன. 28

மன்னார் பெரு நிலப்பரப்பில் என்றும் இல்லாதவாறு வெண்பா பனி என அழைக் கப்படும் பனிப் படலம் கடந்த இரு நாட்களாக அதிகமாக உள்ளது . காலையில் தொழில், அலுவலகம் சென்றவர்களும் பாடசாலைகளுக்கு சென்ற மாணவர்களும் பெரும் சிர மத்தை எதிர் நோக்கியதாக தெரிவித்தனர். இந்தப் பனிப் படலம் காலை 9 தொடக்கம் 10 மணிவரை காணப்படுகி றது. (க-60)

நிபந்தனையற்ற ஆதரவுக்கு கிடைத்த பரிசு புத்தர் சிலை

சிவசக்தி ஆனந்தன் எம்.பி. குற்றச்சாட்டு

வவுனியா, ஜன. 28

கூட்டமைப்பின் நான்கு வருட நிபந்தனை யற்ற ஆதரவுக்கு கிடைத்த பரிசு நீராவியடி புத்தர் சிலையும் செம்மலை பௌத்த விகாரையுமே என்று நாடாளுமன்ற உறுப் பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றஞ்சாட்டி யுள்ளார்.

அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் உள்ளதாவது:

முல்லைத்தீவுமாவட்டம்கேப்பாபுலவுகிராம மக்கள், அரச படைகளால் ஆக்கிரமிக்கப்பட் டுள்ளதமதுபூர்வீகக்காணிகளைவிடுவித்து தம்மை மீளக் குடியமர விட வேண்டும் என்று வலியுறுத்தித் தொடர் கவனயீர்ப்பு போராட்டங்களை வீதி ஓரங்களில் கூடாரங் கள் அமைத்து நடத்தி வருகின்றனர்.

தொடர் போராட்டம் 698 நாள்களை கடந்து விட்டநிலையில்காணிவிடுவிப்பு,மீள்குடியே ற்றம் தொடர்பாக அரசு தரப்பில் எத்தகைய முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. பொறுமையிழந்து விட்ட மக்கள் தமது போராட்டத்தை மேலும் தீவிரப்படு த்தும் வகையில் கைக்குழந்தை களுடன் வீதியில் இறங்கி இராணுவ முகா மின் பிரதான நுழைவாயி லுக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேனகேப் பாபிலவைச்சேர்ந்த104குடும்பங்களுக்கான 171ஏக்கர் காணிகளைடிசம்பர் 31ம்திகதிக்கு முன்னர் விடுவித்து மீளக்குடியமர அனும திப்பதாக வழங்கிய வாக்குறுதியும் மீறப்பட்டுள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் குமுறுகின்றனர்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கேப்பா பிலவு மக்களின் காணி விடுவிப்புத் தொடர் பாக வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனைச் சந்தித்தேன்.

அரச தலைவர் தற்சமயம் வெளிநாடு சென் றுள்ளார். அவர்நாடுதிரும்பியவுடன்காணி விடுவிப்புத் தொடர்பாக அவருடன் பேசிசாத கமான ஒரு பதிலைப் பெற்றுத் தருவேன் என்றுஅவர்குறிப்பிட்டுள்ளார். என்றுள்ளது.

(எ-110)

படையினர் இறந்தால் அல்லது அங்கவீனமானால் தங்கிவாழ்வோருக்குக் காலம் முழுவதும் ஊதியம்

அரசதலைவர் மைத்திரி நடவடிக்கை

கொழும்பு, ஜன. 28

கடமையில் இருக்கின்றபோதோ பயங்கரவாதத்தாக்குதல்கள் காரணமா கவோ சட்டத்தை நடைமுறைப்படுத்து கின்ற பணிகளின்போதோ அங்கவீன முற்றமுப்படையினருக்கும், உயிர்நீத்த படையினரின் மனைவிமார் மற்றும் தங்கிவாழ்கின்றவர்களுக்கும்55வயது வரையில் வழங்கப்பட்ட ஊதியங்கள் மற்றும் கொடுப்பனவுகள் உயிர்வாழும் வரையில் வழங்கப்பட அதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது

இவ்வாறு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அடுத்த இரண்டு மாதங்களில் இதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவுள்ளன என்றும் அரசத லைவர் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

அங்கவீனமுற்றபடைவீரர்களின்நீண்ட காலக்கோரிக்கையாக இருந்துவந்தஇந் தப்பிரச்சினையைத்தீர்க்கஅரசதலைவ ரின் பணிப்புரையின் பேரில் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது பற்றித் தெளிவுபடுத்தும் சந்திப்பு ஒன்று அரசதலைவர் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற் றுள்ளது.

அங்கவீனமுற்ற, உயிர்நீத்த படைவீரர் களின்தேசியஅமைப்பு,படைவீரர்களின் மனைவிமார்களின் மாவட்ட மற்றும் தேசியஅமைப்புஆகியவற்றைபிரதிநிதித் துவப்படுத்திபிரதிநிதிகள்இந்தச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அங்கவீனமுற்ற படையினரால் 08 கோரிக்கைகள் அரசதலைவரிடம் முன் வைக்கப்பட்டிருந்தன. அந்தஅனைத்துக் கோரிக்கைகளுக்கும் தீர்வைப் பெற்றுக் கொடுக்க அரசதலைவரின் வழிகாட்ட லில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரு கின்றன.

பாதுகாப்புஅமைச்சரின்பிரத்தியேகசெய லர் சனத் வீரசூரிய, பாதுகாப்பு அமைச் சின் மூத்த மேலதிக செயலர்களான அநுராத விஜேகோன், விஜிதா மாயா துன்னே ஆகியோரும் முப்படை களை யும் சேர்ந்த மூத்த அதிகாரிகளும் சந்திப் பில்கலந்துகொண்டனர்என்றுதெரிவிக் கப்பட்டது. (த)

தேசிய கல்வியல் கல்லூரிக்கு விண்ணப்பமுடிவு 15 ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஜன 28

தேசிய கல்வியல் கல்லூ ரிக்குமாணவர்களைஉள் வாங்குவதற்கான விண் ணப்பங்களை பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக் கப் வேண்டும் என்று கல்வி அமைச்சு தெரிவித் துள்ளது.

தேசிய கல்வியல் கல்லூரி களுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற் கானஅரசிதழ் வெளியிடப் பட்டுள்ளது. தேசிய கல்வி யல் கல்லூரிக்கு முதன் முறையாகஇணையவழி ஊடாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள் ளன. பதிவுத் தபால் மூல மும் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

2016 மற்றும் 2017ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளுக்கமைய மூன்றுவருடசேவைமுன் கற்பித்தலில் தேசிய டிப் ளோமா பாடநெறிகளைப் பயில்வதற்கு மாணவர் கள்இணைத்துக்கொள்ளப் படவுள்ளனர். விண்ணப் பங்களைபெப்ரவரி15ஆம் திகதிக்கு முன்னதாக இணையவழியில்அனுப் பிவைக்கப்படவேண்டும். இணைய வழி மூலமாக வி ண் ண ப் பி ப் ப வ ர் கள் முகவரியில் உள்நு ழைந்து ஆள் அடையாள அட்டைஇலக்கத்தைபதிவு டுவதன்மூலம்விண்ணப் பிக்கும் முறைக்கு செல்ல முடியும்.

இணைய வழி மூலமாக வி ண் ண ப் பி த் தோ டு மாணவர்கள் பதிவுதபாலி லும் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண் டும் .பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி), தேசிய கல்வியற் கல்லூரி கிளை, கல்வி அமைச்சு இசுரு பாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவித் தபா லில் அனுப்பி வைக்க வேண்டும். பதிவுத் தபால் செய்யப்பட்ட பற்று சீட்டை வைத்துக்கொள்ளவேண் டும். அத்துடன் பூர்த்தி செய் யப்பட்ட விண்ணப்பப் படி வத்தை நிழற் பிரதி ஒன்று எடுத்து வைத்திருத்தல் அவசியம். கல்லூரிக்கு உள்வாங்கும் நேர்முக பரீட்சையில் அதனை சமர்ப்பிக்க வேண்டிய தேவை உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைஉள்வாங் கும் நோக்கில் விண்ணப் பங்கள் கோரப்படும் போதும் இணைய வழி மூலமான பதிவுகள் செய் யும்முறைமைகாணப்படு கிறது. இந்த முறைமை தற்போதுகல்வியல்கல்லூ ரிகளுக்கும் மாணவர் களைஉள்வாங்கும்போது இணைய வழிமூலமான பதிவு முறைமை இந்த ஆண்டு அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது.

(எ-7)

மாலியில் கண்ணிவெடித் தாக்குதலில்

காயமடைந்த சிப்பாயின் நிலை கவலைக்கிடம்!

கொழும்பு, ஜன. 28

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் ஐ.நா அமைதிப்படையில் இடம்பெற்றுள்ள இலங்கைப் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் படுகாயமடைந்த ஒரு சிப்பாயின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுமுன்தினம் காலை ஐ.நாவாகனத்தொடரணிக்கு பாதுகாப்பு அளித்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த போது, இலங்கைப் படையணியின் துருப்புக்காவி கவசவாகனம் ஒன்றின் மீது டோன்ட்சா என்ற இடத்தில் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டது. கப்டன் உள்ளிட்ட இரண்டு இலங்கைப் படையினர் கொல்லப்பட்டனர். 6 படையினர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள், ஐ.நாஅமைதிப்படையில் உள்ள கனேடிய வானூர்திப் படையின் மீட்பு உலங்குவானூர்தி மூலமாக 400 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள சீன மருத்துவமனையில்சேர்க்கப்பட்டனர். தாக்குதலை நடத்தியவர்கள்இன்னமும்உரிமை கோரவில்லை. கொல்லப்பட்ட இலங்கையின்இரண்டுபடையினரதும் சடலங்கள் வரும் புதன்கிழமை கொழும்புக்குக் கொண்டு வரப்படவுள்ளன என்று இராணுவ வட்டாரங்கள்தகவல்வெளியிட்டன.

(த)

தாயும் குழந்தையும் சடலங்களாக மீட்பு

கொலையா, உயிர்மாய்ப்பா: பொலிஸார் விசாரணை

குடும்பத்தலைவர் காயங்களுடன் மருத்துவமனையில்

கொழும்பு, ஜன. 28

7 மாதங்களான ஆண் குழந்தை ஒன்றினதும் அந்தக் குழந்தையின் தாயாரினதும் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். இது கொலையா அல்லது உயிர்மாய்ப்பா என்பது குறித்து விசாரணை இடம்பெறுகிறது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

திம்புள்ளபத்தனைபொலிஸ்பிரிவின்கொட்டகலைரொசிட்டாப் பகுதியில் நேற்று அதிகாலை சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. அதே இடத்தைச் சேர்ந்த கே.நித்தியகல்யாணி (வயது 26), அவரது ஆண் குழந்தை சந்தீப் அஷ்விந்தன் ஆகியோரே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

ஏழுமாதக்குழந்தைகொலைசெய்யப்பட்டுள்ளதாகப்பொலிஸார் சந்தேகிக்கின்றனர். வயர் ஒன்றால் குழந்தையின் கழுத்துப்பகுதிஇறுக்கப்பட்டுள்ளதுஎன்றும்பொலிஸார்தெரிவித்தனர். குடும்பத்தகராறு இருந்தது என்றும் குழந்தையைத் தாய் தான் கொன்றாரா என்று சந்தேகிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. இவர்கள்இருவரும்சடலங்களாகமீட்கப்பட்டதனை அறிந்த குடும்பத் தலைவர் தனக்குத் தானே கத்தியால் குத்தினார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அவர் நுவரெலியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார். நுவரெலியா நீதிவான் சம்ப இடத்தில் விசாரணை நடத்தினார். இரண்டு சடலங்களும் நுவரெலியாமாவட்டமருத்துவமனையின்பிரேதஅறையில்வைக்கப்பட்டுள்ளன. விசாரணை இடம்பெறுகிறது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(த)

அரசியல், பொருளாதாரம், பண்பாடு, கல்வியில் தமிழர்களின் ஈடுபாடு குறைவாகவே உள்ளது!

மட்டக்களப்பு மாவட்டச் செயலர் கவலை தெரிவிப்பு

கொக்கட்டிச்சோலை, ஜன. 28

பொருளாதாரம், அரசியல், பண்பாடு, கல்வி போன்றசமுகமுன்னேற்றம் தொடர்பிலான விடயங்களிலே தமிழர்கள் ஈடுபாடில்லாதவர்களாக இருக்கின்றார்கள். இந்த நிலை மிகவும் கவலைக்குரியது என்று மட்டக்களப்பு மாவட்டச் செயலர் மா.உதயகுமார் தெரிவித்தார்.

மண்முனை தென்மேற்கு பிரதேச பொங்கல் விழா நேற்றுமுன்தினம் முனைக்காடுநாகலிங்கேஸ்வரர்ஆலயமுன்றலில், மண்முனைதென்மேற்குப் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர்தெட்சணகௌரிதினேஸ்தலைமையில் நடைபெற்றது. அதில் முதன்மை கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

வீடுகளிலும், வர்த்தநிலையங்களிலும், பாடசாலைகளிலும், திணைக்களங்களிலும், பொது இடங்களிலும் பொங்கல் நிகழ்வுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. இதனால் மட்டக்களப்பு மாவட்டம் திருவிழாக்கோலம் பூண்டுள்ளது.

தைப்பொங்கல் தமிழர்களுக்கு மிகச்சிறப் பான நாளாகக் கருதப்படுகின்றது. தமிழர்களையும், உழவர்களையும் இரண்டுபிரிவினர்களாகப் பிரித்துப் பார்க்க முடியாது. இவ்வாறான பண்டிகை புரதான காலங்களில் இருந்து இடம்பெற்று வருகின்றது. இவ்வாறான பண்பாடுகளை அடுத்த தலைமுறையினருக்கும்கடத்தவேண்டியதுகாலத்தின் தேவையாகவும் உள்ளது. இதற்கேற்றால்போல் மண்முனை தென்மேற்கு பிரதேசபொங்கல்விழாவில், தொழில்சார் முறைகளையும், அதோடு இணைந்த வாழ்க்கைமுறையினையும்காட்சிப்படுத்தியுள்ளமைவரவேற்கத்தக்கது. பண்பாட்டுக் கலைகளையும்ஆற்றுகைசெய்துகாட்டியுள்ளமை மகிழ்வுக்குரியது. கலைகள் அந்தப் பகுதிகளின் வாழ்வியல் முறைகளை எடுத்துக்காட்டக்கூடியன. இவ்வாறான பண்பாடுகளோடு பொருளாதாரம், அரசியல், கல்வி போன்ற சமுக முன்னேற்றம்தொடர்பானவிடயங்களிலே தமிழர்கள் ஈடுபாடில்லாதவர்களாக இருக்கின்றமை மிகவும் கவலைக்குரியது.

இலங்கைநாட்டில், ஒருகாலச்சூழலில் தமிழர்கள் எல்லாத்துறைகளிலும் சிறப்புற்றுவிளங்கினர். கடந்தகாலங்களிலே இடம்பெற்ற பல்வேறு இன்னல்களால் பின்நிலை யில் நிற்கின்றனர். தற்காலத்திலும் வாழ்வதற்கு, தமிழர்கள், பொருளாதாரம், பண்பாடு, விழுமியங்கள், கல்வி, அரசியல் போன்றவற்றைமீண்டும்மீளஅமைக்கவேண்டும். அதேவேளைகிடைக்கின்றசந்தர்ப்பங்களையும் சரியாகப் பயன்படுத்திக்



கொள்ள வேண்டும். எமது நாட்டில் இருந்து பிற நாடுகளுக்குச் சென்றவர்கள், பண்பாடுகளையும், விழுமியங்களையும்வளர்ப்பதில்ஆர்வமுடன்செயற்படுகின்றனர். இங்குள்ள நாம் இருப்பதையும்இழந்துகொண்டிருக்கின்றோம். எதிர்காலம் தொடர்பாக அனைவரும் சிந்திக்கவேண்டும் - என்றார்.

(த)

மகிந்தவின் மைத்துனர் ஜாலியவுக்கு 20 வருட சிறை விதிக்கப்பட வாய்ப்பு

கொழும்பு, ஜன. 28

மகிந்தராஜபக்சவின்மைத்துனர்ஜாலியவிக்ரமசூரிய மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால், 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும். அவரது அனைத்துச் சொத்துகளும் பறிமுதல் செய்யப்படும் வாய்ப்பும் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்து குற்றச்சாட்டுகள்கொண்டவழக்கு அவருக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றில் விசாரணையிலுள்ளது.

மகிந்தராஜபக்சஆட்சிக்காலத்தில்அமெரிக்காவுக்கான இலங்கையின் தூதுவராக ஜாலிய விக்ரமசூரிய நியமிக்கப்பட்டிருந்தார்.

அமெரிக்ககுடியுரிமையையும்கொண்டுள்ள இவர் அங்கு பதவியில் இருந்த காலத்தில் பணச்சலவை, நிதிமோசடிமற்றும்குடிவரவுச் சட்டங்களை மீறியமை குறித்து அமெரிக்காவின் கொலம்பியா மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பணச்சலவைசட்டத்தின்கீழ்இரண்டுகுற்றச்சாட்டுகளும், நிதிமோசடிதொடர்பானஇரண்டு குற்றச்சாட்டுகளும், 2018மேமாதம்அமெரிக்காவுக்கு வந்தபோது குடிவரவுத் திணைக்களத்துக்கு தவறான தகவல்களை வழங்கினார்என்றுஒருகுற்றச்சாட்டும்சுமத்தப்பட்டுள்ளன.

அமெரிக்காவின்மத்தியபுலனாய்வுஅமைப்பான எவ்.பி.ஐ அதிகாரிகளின் நீண்ட புலனாய்வுக்குப்பின்னர்இந்தவழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதுஎன்றுதெரிவிக்கப்பட்டது.

கடந்த ஒக்ரோபர் 26ஆம் திகதி மகிந்த ராஜபக்ச தலைமைஅமைச்சராக நியமிக்கப்பட்ட பின்னர்இந்தவழக்குவிரைவுபடுத்தப்பட்டது. ஆட்சிக்கவிழ்ப்பையடுத்து, அவருக்குமகிந்த ராஜபக்ச அரசு புதிய இராஜதந்திரப் பதவிகளைக் கொடுத்தால், இந்த வழக்கில் சிக்கல் ஏற்படும்என்றும்கருதப்பட்டதால், விரைவாக வழக்கைநடத்தநடவடிக்கைஎடுக்கப்பட்டது. எனினும், ஆட்சிக்கவிழ்ப்பு தோல்வியில் முடிந்தநிலையில்ஜாலியவிக்ரமசூரியவுக்கு எதிரான வழக்குஎந்தச்சிக்கலுமின்றி, அமெரிக்க அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்தநிலையில்அவர்எதிர்வரும்செவ்வாய்க்கிழமை அமெரிக்கநீதிமன்றத்தில்சரணடைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் தூதுவராகப் பணியாற்றிய ஒருவர் பன்னாடு ஒன்றின் நீதிமன்றத்தில் இதுபோன்ற குற்றச்சாட்டை எதிர்கொள்வது இதுவே முதல்முறை. ஜாலிய விக்ரமசூரிய இலங்கையிலும்நிதிமோசடி, வருமானத்தை மீறி சொத்துச் சேர்த்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளைஎதிர்கொண்டுள்ளார்என்றுதெரிவிக்கப்பட்டது.

(த)

படைப்புழுவின் தாக்கம், கட்டுப்படுத்தல் தொடர்பாகக் கிழக்கில் செயலமர்வு

செங்கலடி, ஜன. 28

கிழக்கு மாகாணத்தில் பயிர்ச்செய்கையில் அண்மைக்காலமாகபடைப்புழுவால்ஏற்பட்டுள்ளதாக்கம்மற்றும் அதனைக்கட்டுப்படுத்தும்வழிகள் குறித்து விவசாயம்மற்றும்அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும்செயலமர்வுநேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மட்டக்களப்பு கரடியனாறுவிவசாயபயிற்சிப் பண்ணையில் மாகாண விவசாய அமைச்சின் செயலர் கே.சிவநாதன் தலைமையில் இதுநடைபெற்றது.

விவசாயத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர்மருத்துவர்எஸ்.எம்.ஹீசைன், பூச்சியியலாளர் எஸ். ஆர். சரத்சந்திர, விவசாய ஆராய்ச்சித் திணைக்கள அதிகாரி எல்.கே.எஸ்.பீ.குமாரஆகியோர்கலந்துகொண்டு விளக்கமளித்தனர்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை சோளப் பயிர்ச் செய்கையில் அம்பாறை மாவட்டத்திலேயே படைப்புழுவின் தாக்கம் அதிகம்காணப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்தில் செய்கைபண்ணப்பட்ட12ஆயிரத்து850ஹெக்டேயரில்8ஆயிரத்து 35 ஹெக்டேயர் பாதிக்கப்பட்டுள்ளது. இது 62.5 சதவீதம். மட்டக்களப்பு மாவட்டத்தில்செய்கைபண்ணப்பட்ட967ஹெக்டேயரில் 476 ஹெக்டேயர் பாதிக்கப்பட்டுள்ளது. இது 50 சதவீதம்.

திருகோணமலை மாவட்டத்தில் 780 ஹெக்டேயரில் சோளன் பயிரிடப்பட்டது. இதில் 594 ஹெக்டேயர் பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயத் திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் பிரதேச செயலகம் போன்ற நிறுவனங்களின் அலுவலர்கள் செயலமர்வில் பங்கேற்றனர்.

இதேவேளை படைப் புழுவின் தாக்கம் சோளம் மற்றும் கரும்பைத் தொடர்ந்து நெல்லையும் தாக்கும் என்று ஐக்கிய நாடுகள் உணவுவிவசாயஅமைப்புஅறிவித்துள்ளது. இயற்கையான கட்டுப்பாட்டு முறைகளும், சிறந்தநிர்வாகமும்இல்லையேல், படைப்புழு பயிர்களில் தாக்கத்தை ஏற்படுத்தி விவசாயிகளின்ஜீவனோபாயத்தைப்பாதிக்கக்கூடும். புதிய பகுதியில் படைப்புழு பரவும்போது அதனை முற்றாக இல்லாதொழிப்பது நடைமுறையில் இயலாத காரியம். விவசாயிகள் முறையாக அறிந்து கட்டுப்படுத்தவேண்டும் என்றும் அந்த அமைப்பு எச்சரிக்கையுடன் அறிவுறுத்தியுள்ளது.

(த)

புத்தக விநியோகம் தாமதம்: உரிய விசாரணை நடத்தவும்

இலங்கை ஆசிரியர்சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 28

இந்த வருடத்துக்கான பாட சாலைப்புத்தகங்கள்மற்றும் ஆசிரியர்களுக்கான கை யேடுகளை விநியோகிப் பதில் தாமதம் ஏற்பட்டமை தொடர்பில் கல்வி அமைச்சு விசாரணை நடத்த வேண் டும் என்று ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தாமதம் காரணமாக மேல், வட மத்திய, மத்திய மாகா ணங்களில்பாடசாலைஆசி ரியர்களும்மாணவர்களும் அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளனர் என்றும் இலங்கை ஆசிரியர் சங்கத் தின் செயலர் ஜோசப் ஸ்ரா லின்தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்கல்விவெளி யீட்டுத் திணைக்களத்தின் ஆ ணையாளர் பத்மினி நாலிகா தெரிவித்ததாவது:

97 வீதமான பாடப்புத்தகங் கள் விநியோகிக்கப்பட்டுள் ளன. புதிதாகஅறிமுகப்படுத் தப்பட்டுள்ள தகவல் தொழி நுட்பப்பாடத்துக்கானபுத்தங் களைவிநியோகிக்கும்நடவ டிக்கைகள் இடம்பெறுகின் றன.

தேசியகல்விநிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட ஆசிரியர்க ளுக்கான கையேடுகள், அச்சகத்துக்கு அனுப்பப்பட் டுள்ளன. ஆசிரியர்களுக் கானகையேடுகள்விநியோ கிக் கப்படுகின்றன என்று தெரிவித்தார். மாணவர்க ளுக்குப் பாடசாலைப் புத்த கங்கள் கிடைக்காத பட்சத் தில் பாடசாலை அதிபர் ஊடாக கல்வி வெளியீட்டுத் திணைக் களத்துக்கு அறி விக்குமாறும்அவர்கேட்டுள் ளார். (த)

மறு அறிவித்தல் வரும்வரை சோளச் செய்கை வேண்டாம்

விவசாயத் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 28

மறு அறிவித்தல் வரை சோளப் பயிர்ச் செய்கை யைமேற்கொள்ளவேண் டாம்என்றுவிவசாயபிரதிப் பணிப்பாளர் அனுரவிஜய துங்க அறிவுறுத்தியுள் ளார்.

அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:

படைப் புழுவின் தாக்கத் தால்சுமார் ஆயிரம்ஹெக் டேயர் நிலப்பரப்பில் மேற் கொள்ளப்பட்ட சோளச் செய்கை முற்றாக அழிவ டைந்துள்ளது.

பயிர்ச்செய்கைக்குஏற்பட்ட பாதிப்புத் தொடர்பிலான ஆய்வுகள் தற்போது மேற் கொள்ளப்பட்டு வருகின் றன. மறு அறிவித்தல் வரை சோளப் பயிர்ச் செய்கை மேற்கொள்ள வேண்டாம்-என்றார்.

அதேவேளை, படைப்புழு வால் பழச் செய்கைக்கு தாக்கம் ஏற்படவில்லை என்று ஹொரணை பழச் செய்கை ஆராய்ச்சி மற் றும் அபிவிருத்தி நிறுவ னம்தெரிவித்துள்ளது.

மேற்கொள்ளப்பட்டபரிசோ தனைகளின் போதே இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று நிறுவனத்தின் பணிப்பாளர் ஈ.ஆர்.எஸ். பி. எதிரிமான்ன குறிப்பிட் டுள்ளார். தொடர்ந்தும்ஆய் வுகள் முன்னெடுக்கப்படு கின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பழச்செய்கைக்கு ஏதும் தாக்கம் ஏற்பட்டிருப்பின் அது தொடர்பாக 1920 என்ற தொலைபேசி இலக் கம்மற்றும்நிறுவனத்தின் 034 2261323 என்ற தொலைபேசி இலக்கங்க ளுக்கு அழைத்து அறி விக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

தோட்டத் தொழிலாளர்களின்

கூட்டு ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொகவந்தலாவையில் நேற்றுப் போராட்டம்

நாரஹேன்பிட்டியில் இன்று ஒப்பந்தம்

கொழும்பு, ஜன. 28

தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளமாக ரூபா 700 ரூபாவை வழங்க ஒப்பந்தம் செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொகவந்தலாவையில் நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது.

தோட்டத் தொழிலாளர்களின் அடிப்ப டைச்சம்பளமாகரூபா700மற்றும்இதர படியாக50பெற்றுக்கொள்ளஇலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் சில தொழிற்சங்கங்கள் தோட்ட முதலாளி மார்களுடன் கூட்டுஒப்பந்தம் ஒன்றை இன்றுதிங்கட்கிழமைகைச்சாத்திடவுள்ள நிலையில் நேற்றுப் போராட்டம் நடத்தப் பட்டது.

பொகவந்தலாவ ஹற்றன் முதன்மை வீதியைமறித்துபொகவந்தலாவசெல்வ கந்ததோட்ட மக்கள் சுமார் 500 பேர்வ ரையில் நேற்றுக்காலை வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் சில மணித்தியாலங்கள் வீதிப்போக்கு வரத்துத்தடைப்பட்டது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா பெற்றுத் தருவதாகக் கூறியதொழிற்சங்கங்கள்இன்றுவெறு மனே 700ரூபாவுக்குக் கைச்சாத்திட முடிவெடுத்துள்ளன.

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுகின்ற தொழிற்சங்கங்கள் வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில்

ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளம் வேண்டும்என்றுபோராட்டத்தில்ஈடுபட்ட மக்கள்தெரிவித்தனர்.

தொட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாகிடைக்காவிட்டால்தீக்குளிக்கப்போ வதாகவும், அமைச்சுப் பதவிகளைத் துறக்கப் போவதாகவும் கூறியவர்கள் தற்போது தோட்டத் தொழிலாளர்களைக் காட்டிக்கொடுத்துவிட்டனர். ஆயிரம்ரூபா சம்பளம் வழங்கும்வரை தாம் போராட் டத்தைக் கைவிடப்போவதில்லை என் றும் தோட்டத் தொழிலாளர்கள் தெரிவித் தனர்.

இதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்ட மக்களைக் கலைப்பதற்குக் கலகத்தடுப் புப் பொலிஸார் சம்ப இடத்தில் களமிறக் கப்பட்டிருந்ததையும்அவதானிக்கமுடிந் தது.

கூட்டு ஒப்பந்தம்

கூட்டு ஒப்பந்தத்தின் இறுதிகட்டப் பேச்சு நாரஹேன்பிட்டியிலுள்ள தொழில் திணைக்களத்தில், கடந்த வெள்ளிக்கி ழமை நடைபெற்றது. அதில் தொழில் அமைச்சர், பெருந்தோட்டக் கைத்தொ ழில் அமைச்சர் ஆகியோர் முன்னிலை யில் ஒப்பந்தம் கைச்சாத்திடும் மூன்று தொழிற்சங்கங்களும், முதலாளிமார் சம்மேளனமும் கலந்துகொண்டன.

இதன்போது, பெருந்தோட்டக்கைத்தொ ழில்அமைச்சர்நவீன்திசாநாயக்க, இரா ஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் ஆகியோர் அரசு சார்பில் புதிய முன்மொ ழிவை முன்மொழிந்திருந்தனர். அதன் படி அடிப்படைச் சம்பளமாக 700 ரூபா வும் விலைக் கொடுப்பனவாக 50 ரூபா வும்ஊழியர்சேமலாபநிதியம்இஊழியர் நம்பிக்கை நிதியமாக 105 ரூபா என்ற அடிப்படையில்இமொத்தச்சம்பளம்855 ரூபாவும் மேலதிகமாகப் பறிக்கப்படும் கொழுந்துஒருகிலோவுக்கு40ரூபாவும் வழங்கப்படவுள்ளன. இந்தமுன்மொழி வுகளுக்கு, இருதரப்பும் இணங்கி யுள்ளன.

தொழிலாளர்களுக்கு, நிலுவைக்கொடுப் பனவை வழங்குவதற்கும்அரசும்கம்ப னிகளும் முன்வந்துள்ளன. அதன்படி 2017ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்திலி ருந்து ஜனவரி மாதம் வரைக்கான நிலு வைக்கொடுப்பனவு, தொழிலாளர்கள் தொழிலுக்குச் சென்ற நாள்களை அடிப்ப டையாகவைத்துவழங்கப்பட்டுள்ளது.

நிலுவைக்கொடுப்பனவை வழங்குவதற் குப்போதியளவுநிதிஇல்லைஎன்றுகம்பனி கள் அறிவித்ததால், தேயிலைச் சபையிலி ருந்து 150 மில்லியன் ரூபாவை கம்பனிக ளுக்கு வழங்க, அரசு முன்வந்துள்ளது.

இதில்50மில்லியன்ரூபாநிதியை, அரசும் கம்பனிகளுக்குத்திருப்பிச்செலுத்தவேண் டுமெனவும் 100 மில்லியன் ரூபா நிதிஇ தோட்டத் தொழிலாளர்களுக்காக அரசின் தரப்பில் வழங்கப்படுவதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

மேலும் கிளைபேசெட் தடை இரத்துச் செய் யப்பட்டுள்ளதெனவும்எனவே, காடுகளாகி யுள்ள தேயிலைத் தோட்டங்களைத் துப்பு ரவு செய்து, தொழிலாளர்களுக்குத் தொழில் செய்வதற்குரிய பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டு மென்றும், கம்பனிகளுக்குப் பணிக்கப்பட் டுள்ளது. இந்தமுறை செய்துகொள்ளப்பட வுள்ள கூட்டுஒப்பந்தத்தின் பிரதிகள், தமிழ் மொழியில் மொழிபெயர்ப்புச் செய்து, தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த)

மண்முனை தென்மேற்கில் பொங்கல், கலை நிகழ்வுகள்

கொக்கட்டிச்சோலை, ஜன. 28

மண்முனை தென்மேற்குப் பிரதேச பொங்கல்விழாமுனைக்காடுசிறிநாக லிங்கேஸ்வரர் ஆலய முன்றலில் நேற்றுமுன்தினம்நடைபெற்றது.

பிரதேச செயலர் தெட்சணகௌரி தினேஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதேசத்தில்உள்ள24கிராம அலுவலர்பிரிவுகளைச்சேர்ந்தமக்கள் ஒவ்வொரு பொங்கல் பானை வீதம் பொங்கலில் ஈடுபட்டனர். 24பொங்கல் பானைகளும் ஒவ்வொரு வகை பொங்கல் களாக அமைந்திருந்தன என்று தெரிவிக்கப் பட்டது.

கட்டியம் கூறுதலுடனும், மத்தள இசையுட னும் ஆரம்பித்த பொங்கல் நிகழ்வில், வசந் தன்கூத்து, கவிதை, நாட்டார்பாடல், சிலம்பம் போன்ற கலைகளும் ஆற்றுகை செய்யப் பட்டன.

சூரியனுக்குநன்றிசெலுத்தும்வகையிலான பூசை வழிபாடுகளுடன், கோமாதா பூசையும் இடம்பெற்றது. பண்பாட்டு விவசாயத் தொழிலைஎடுத்துக்காட்டும்வகையில், நெற் செய்கை, சோளன்பயிர்ச்செய்கைபோன்றன செய்கைபண்ணப்பட்டிருந்தன.

அந்தப்பயிர்ச்செய்கையைமிருகங்களிடமும், குருவிகளுட மிருந்தும் பாதுகாத்துக்கொள் ளும்வகையில், அவற்றைத்துரத்துவதற்கான காவல்பரண், குடிசைபோன்றனவும்அமைக் கப்பட்டிருந்தன.

குடிதண்ணீர்குடிப்பதற்காகபூவல்தோண்டப் பட்டிருந்ததுடன் விவசாய மற்றும் மீன்பிடிப் பொருள்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. சிலம்பம் கலையை ஆற்றுகை செய்த கலை ஞன் அ. குமணன் பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டார்.

மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. நிகழ்வில்மாவட்டச் செயலர்மா. உதயகுமார்முதன்மைஅதிதியா கக் கலந்து கொண்டிருந்தார். (த)

பிரிகேடியர் பிரியந்தவுக்காக இலங்கை ராணுவம் களத்தில்

பிடியாணையை மீளப் பெறுமாறு பிரிட்டன் நீதிமன்றில் விரைவில் மனு

கொழும்பு, ஜன. 28

லண்டனில் உள்ள இலங்கைத் தூதரக பாதுகாப்பு ஆலோசகராக முன்னர் பணி யாற்றிய பிரிகேடியர் பிரியங்க பெர் னான்டோ மீதான நடவடிக்கையை திரும்பப் பெற வேண்டும் என்று கோரி மான்செஸ்டர் மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் இலங்கை இராணுவம்முறைப்படியான முறையீடு ஒன்றைச் செய்யவுள்ளது.

லண்டனில்உள்ள இலங்கைத்தூதரகத் தின்ஊடாகஇந்தமுறையீடுசெய்யப்படும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்தார்.

பிரிகேடியர்பிரியங்கபெர்னான்டோஒரு கொண்டாடப்படும் போர் வீரர் என்றும், அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை கைவிடவேண்டும்என்றும்இராணுவம் முறையீடுசெய்யும்என்றுஅவர்கூறியுள் ளார். அதேவேளை, எதிர்வரும்முதலாம் திகதி பிரிகேடியர் பெர்னான்டோவுக்கு எதிரானவழக்குலண்டன்நீதிமன்றத்தில் விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்படும். அன்று அவருக்கு எதிராகப் பிறப்பிக்கப் பட்டிருந்த பிடியாணை மீளப் பெறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்று கொழும்புஆங்கிலவாரஇதழ்ஒன்றுதெரி வித்துள்ளது.

இந்த விவகாரம் இராஜதந்திரம் தொடர் பான மோசமான முன்னுதாரணத்தை ஏற்படுத்தும் என்று கொழும்பில் உள்ள பிரித்தானியத் தூதுவர் ஜேம்ஸ் டெளரிசி டம் அதிகாரிகள் தகவல்களை பரிமாறி யுள்ளனர்என்றுஇந்தவிடயம்தொடர்பில் கருத்துத் தெரிவித்த வெளிவிவகாரச் செயலர் ரவிநாத் ஆரியசிங்க தெரிவித் துள்ளார். முறையாக நியமிக்கப்பட்ட இராஜதந்திரி என்ற வகையில், பிரிகேடி யர் பிரியங்க பெர்னான்டோவின் இராஜ தந்திர விலக்குரிமையை உறுதிப்படுத்த வேண்டும்என்றுநாம்பிரிட்டன்அரசிடம் கோரியுள்ளோம்என்றும்அவர்கூறியுள் ளார். (எ)

பிற நாட்டு அரச தலைவர் வி
தலையிடுவதை அமெ. நிறுத்த

ஜனநாயகக் கட்சி உறுப்பினர் துளசி கபார்ட் தெரிவி

வோஷிங்டன்.ஜன.28

வெனிசுலாவில் எவர் அதிபராகப் பதவி வகிக்க வேண்டும் என்பதை அமெரிக்கா தீர்மானிக்கக் கூடாது, வெனிசுலா மக்கள்தீர்மானிக்கட்டும். வெனிசுலாவிவகாரத்திலிருந்து அமெரிக்கா ஒதுங்க வேண்டும் என்று அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சி உறுப்பினரும், அந்த நாட்டின் அடுத்த அதிபர் வேட்பாளருக்கான பட்டியலில் இருப்பவருமான துளசி கபார்ட் தெரிவித்தார்.

37 வயதாகும் துளசி கபார்ட், 4 தடவைகள் ஜனநாயகக் கட்சியில் அமைச்சராக இருந்தவர், அமெரிக்காவின் அடுத்த அதிபர்போட்டியாளர்கள் பட்டியலில் இவருடைய பெயரும் உள்ளது.

இந்தநிலையில் 2020 ஆம் ஆண்டில்நடக்கவிருக்கின்ற அமெரிக்காவின் அதிபர்தேர்தலில்போட்டியிடப்போவதாக அறியப்படும் துளசி கபார்ட், "வெனிசுலா விவகாரத்திலிருந்து அமெரிக்கா தள்ளி நிற்க வேண்டும். வெனிசுலா மக்களே தங்கள் எதிர்காலத்தைத் தெரிவு செய்யட்டும். நம் தலைவர்களை வெளிநாடு தெரிவு செய்தால் நாம் அதை ஏற்போமா, அனுமதிப்போமா, அது போல்தான் நாமும் பிறநாட்டுத் தலைவர்களை இங்கிருந்தபடி தெரிவு செய்ய முற்பட டக் கூடாது" என்று தன்னுடைய கீச்சகப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். வெனிசுலாவில் அந்த நாட்டின் அதிபர் நிக்கோலஸ் மதுரோவுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்துக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ஆதரவளிப்பதுடன் நிக்கோலஸ் மதுரோவின் ஆட்சிக்கு எதிராகவும் செயற்பட்டு வரும்நிலையில்வெளிவந்திருக்கும்துளசி கபார்ட்டின் இந்தக் கருத்து ட்ரம்பைக் கடுமையாக விமர்சித்திருக்கிறது.

பின்னணி

அமெரிக்காவின்ஒடுக்குமுறைக்குஎதிராகக் குரல் கொடுத்த போராட்ட வீரர் வெனிசுலாவின்மறைந்தமுன்னாள்அதிபர்சாவேஸ். அவருக்குப்பின்னர்வெனிசுலாவில்ஆட்சியிலிருப்பவர் நிக்கோலஸ் மதுரோ. சாவேஸின்காலத்திலிருந்து வெனிசுலா மீது அமெரிக்காவின் பகை வளர்ந்தது. சாவேஸைக் கொல்வதற்கு அமெரிக்கா 600தடவைகள் சதித்திட்டம்தீட்டியிருந்ததாகவும் தகவல்கள் வெளியாகின.

சாவேஸின் மறைவுக்குப் பிறகு சோஷலிஸ்ட் அரசின் அதிபராக நிக்கோலஸ்மதுரோஇருந்துவருகிறார். அவரை அரசிலிருந்து அகற்றி எதிர்க்கட்சித் தலைவர் யுவான் குவைடோவை அதிபராக்கும் முனைப்பில் அமெரிக்கா அதிபர் ட்ரம்ப் செயற்பட்டு வருகிறார். கடும் இடது

அமெ. – வெனிசுலா பனிப்போர்
அமெரிக்காவின் உறவைத் துண்டிக்க வெனிசுலா அதிபர் உத்தரவு

காரகாஸ்.ஜன.28

அமெ. - வெனிசுவெலா இடையே நடந்து வரும் பனிப் போரை வெளிப்படையான அரசியல் நிலைப்பாடாக மாற்றும்வகையில்அமெரிக்காவில்உள்ளதமதுதூதரகத்தை மூடுமாறு வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ உத்தரவிட்டார். நிக்கோலஸ் மதுரோவின் ஆட்சியில், அரசியல் சர்ச்சைகள் மற்றும் அரசுக்கு எதிரான போராட்டங்களால் வெனிசுலாவில் நிலையற்ற தன்மை ஏற்பட்டது. இதற்கு மத்தியில் கடந்த ஆண்டு அங்கு அதிபர் தேர்தல் நடந்தது. எதிர்க் கட்சியால் புறக்கணிக்கப்பட்ட இந்தத் தேர்தலில், மதுரோ வெற்றி பெற்று மீண்டும் அதிபரானார். இதனை ஏற்கமறுத்தஎதிர்க்கட்சிகள், அவர் பதவிவிலகவேண்டும் என்று வலியுறுத்துகின்றன. வெனிசுலாவின் பல்வேறு பகுதிகளில்மோதல்வெடித்தது. எதிர்க்கட்சித்தலைவரான குவான்குயெய்டோ, தன்னைநாட்டின்தற்காலிகஅதிபராக அறிவித்தார். அவருக்கு அமெரிக்கா ஆதரவுதெரிவித்தது. இதன்விளைவாக, வெனிசுலாநாட்டில்உள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகளை வெளியேறும்படியும், அமெரிக்காவில்உள்ளவெனிசுலாத்தூதரகத்தைமூடுமாறும்மதுரோ உத்தரவிட்டார்.



பணிந்தார் ட்ரம்ப் முடிந்தது பணி முடக்கம்

வோஷிங்டன்.ஜன.28

எல்லைச் சுவர் விவகாரத்தால், அமெரிக்காவில் நீண்ட நாள்களாகத் தொடர்ந்த பணி முடக்கத்துக்கு அதிபர் ட்ரம்ப் தற்காலிக முற்றுப்புள்ளி வைத்தார். இந்த ஆண்டுக்கான அமெரிக்க அரசின் வரவுசெலவுத் திட்டத்தில் அமெரிக்கா மெக்சிக்கோ இடையே அமைக்கத் திட்டம் இட்டிருக்கின்ற எல்லைச் சுவருக்கானட்ரம்ப்பின் நிதிகோரலும்உள்ளடங்கியிருந்தது. எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு காரணமாக இந்த வரவுசெலவுத்திட்டம் இதுவரை நிறைவேறவில்லை.

இதனால்அந்தநாட்டுஅரசநிர்வாகம்முடங்கியிருந்தது. 30 நாள்களுக்கும் மேலாகத் தொடர்ந்த இந்தப் பணி முடக்கத்துக்குத் தற்போது முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார் ட்ரம்ப். செனட் மற்றும் பிரதிநிதிகள் சபை இரண்டும் தற்காலிகமாக இந்த முடக்கத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக முன்வைக்கப்பட்ட தீர்மானத்துக்கு ஆதரவு அளித்ததைத்தொடர்ந்துஇதுதொடர்பானஒப்பந்தத்தில்அதிபர்ட்ரம்ப் கையெழுத்திட்டார்.

ஆனாலும் எல்லைச் சுவர் விவகாரத்தில் சமரசம் என்பதே இல்லை என்று ட்ரம்ப் திட்டவட்டமாகத் தெரிவித்தார். பணி முடக்கத்தைமூன்றுவாரங்களுக்குநிறுத்திவைக்கஒப்புதல் அளித்த நிலையிலும், மெக்சிக்கோ எல்லையில் சுவர் கட்ட வேண்டும் என்பதில் சமசரம் செய்துகொள்ளமாட்டேன் என்று அவர் கூறியுள்ளார்.

பின்னணி

அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக நுழைபவர்களைத் தடுப்பதற்காக அமெ.- மெக்சிக்கோ இடையே சுவர் கட்டுவதற்காக 570 கோடி டொலர் நிதி ஒதுக்கும்படி ட்ரம்ப் அமெ. நாடாளுமன்றத்தில் கேட்டுக்கொண்டார். அவரது இந்தக் கோரிக்கையைஎதிர்க்கட்சிகள்நிராகரித்தன. இதனால்இந்த ஆண்டுக்கானவரவுசெலவுத்திட்டநிதிஒதுக்கீடுக்குஒப்புதல் அளிக்க ட்ரம்ப் மறுத்து விட்டார். எனவே கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக அமெரிக்காவில் ஊழியர்களுக்குச் சம்பளம் உட்பட செலவினங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படாமல் அரச துறை செயலிழந்தது. பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படாத நிலை தொடர்ந்தது.

சிரியா அகதிகளுக்கு கரம் நீட்டியது கட்டார்



டோஹா.ஜன.28

சிரியா அகதிகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த அகதிகளின் மறுவாழ்வுக்காகக் கட்டார் நாட்டு மன்னர் 50 மில்லியன் டொலர்நிதிவழங்குவதாகஅறிவித்தார். சிரியாநாட்டில்அதிபர்பஷார் அல் ஆசாத் படைகளுக்கும், உள்நாட்டுப் போராளிகளுக்கும் இடையே 2011ஆம் ஆண்டிலிருந்து உள்நாட்டுப்போர் நடந்து வருகிறது. இந்தப் போரில் கடந்த ஆண்டு நிலவரப்படி சுமார் 5 இலட்சத்து 60 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

தற்போதைய நிலவரப்படி சுமார் 24இலட்சம் பேர் அகதிகளாகப் பிற நாடுகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். இந்த நிலையில், சிரியா அகதிகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த அகதிகளின் மறுவாழ்வுக்காகக் கட்டார் நாட்டு மன்னர் 50 மில்லியன் டொலர் நிதி வழங்குவதாகஅறிவித்துள்ளார். இந்தநிதிஉதவியைஜக்கியநாடுகள் சபையின் பொதுச்செயலர் ஆன்ரனியோ குத்ரெஸ் வரவேற்றார்.

பிலிப்பைன்சில் குண்டு

19 பேர் சாவு - பலர் படுகாயம்

மணிலா.ஜன.28

தெற்குப்பிலிப்பைன்ஸிலுள்ளஜோலோஎன்கிறதீவில் அமைந்துள்ள கத்தோலிக்க தேவாலயம் ஒன்றில் குண்டுத்தாக்குதல் நடந்தது. இந்தத் தேவாலயத்தில் பயங்கரச்சத்தத்துடன் நேற்றுக் குண்டு ஒன்று வெடித்தது.

சிறிது நேரம் கழித்து அரச படைகள் தங்கியிருந்த முகாம் அருகில் மற்றொரு குண்டு வெடித்தது. இந்த இரண்டுசம்பவங்களில்அரசபடைகள்மற்றும்பொது

மனிதர்களுக்கு ஏற்படுகின்ற 'அல்சைமர்' எனப்படு
விஞ்ஞானிகள்புதுவிதஆய்வுஒன்றைமேற்கொண்டுவ
5 குரங்குகளை குளோனிங் முறையில் உருவாக்கி, அ
அவற்றை உட்படுத்துகின்றனர். முதன் முறையாகக் கு
நீக்கப்பட்ட குரங்குகள்உருவாக்கப்பட்டுள்ளன. இவைச
அக்கடமியால் அதன் நரம்பியல் அறிவியல் ஆய்வகத்

விடயத்தில் த வேண்டும்

தரிவிப்பு

அதிபர் இடது

சாரி அதிபரான மதுரோவை 'சட்டவிரோத அதிபர்" என்றும் குவைடோதான் அதிபர் என்றும் கூறிவருகிறார்.

ன்டுத் தாக்குதல்கள்

மக்கள் என 19 பேர் சாவடைந்தனர். 48பேர் காயம டைந்தனர். காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில்சேர்க்கப்பட்டனர்.
குண்டு வெடிப்பு நடந்த இடத்தில் பாதுகாப்பை அதிக ரிக்குமாறும், பொதுமக்கள் கூடும் இடம், வழிபாட்டுத் தலங்களில் உச்சக் கட்ட பாதுகாப்பை வழங்குமாறும் அந்தநாட்டின்பாதுகாப்புச்செயலாளர்உத்தரவிட்டார். இந்தத் தாக்குதலுக்கு எந்தவோர் அமைப்பும் நேற்றுவரை பொறுப்பேற்கவில்லை.

ாப்படும் மறதி நோயைத் தடுப்பதற்காகச் சீன ன்டுவருகின்றனர். மரபணுமாற்றியமைக்கப்பட்ட ாக்கி, அல்சைமரைத் தடுப்பதற்கான ஆய்வுக்கு ாகக் குளோனிங் முறையில் மரபணுக் கோளாறு ுவைசீனாவின்ஷாங்காயில்உள்ளசீனஅறிவியல் ்வகத்தில் உருவாக்கப்பட்டுள்ளன.

சபரிமலை விவகாரம்

"சட்ட உரிமையோடு வீட்டுக்குச் செல்வேன்"

வீட்டை விட்டு விரட்டப்பட்ட கனகதுர்கா தெரிவிப்பு

கேரளா.ஜன.28
கேரளாவைச் சேர்ந்த கனகதுர்கா (வயது-39) சபரிமலை கோயிலுக்குள் சென்று ஐயப்பனைத் தரிசித்ததால் தனது குடும் பத்தினரால் தற்போது வீட்டை விட்டு வெளி யேற்றப்பட்டார். நீதிமன்ற உத்தரவுடன் தனது வீட்டுக்கு மீண்டும் செல்வதற்குத் தயாராக உள்ளதாக அவர் தெரிவித்தார்.
'சபரிமலை கோயிலுக்குள் சென்றதற்காக இந்து அமைப்புகளிடமோ, அல்லது எனது குடும்பத்தினரிடமோ நான் ஒருபோதும் மன்னிப்புக்கேட்கமாட்டேன். நான்உச்சநீ திமன்றத் தீர்ப்பின்படியே நடந்துள்ளேன், எவருக்கும் அநீதி இழைக்கவில்லை.
எனது வீட்டுக்குத் திரும்பச் செல்வதற்குச் சட்டரீதியான முயற்சிகளை மேற்கொள் வேன்" என்று கனகதுர்கா தெரிவித்தார்.
கேரளாவின்மலப்புரம்மாவட்டத்தில்உள்ள தனது வீட்டுக்குள் நுழைவதற்கு அவரது கணவர் உள்ளிட்ட குடும்பத்தார் எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையில், கனகதுர்கா தற் போதுதற்காலிக அரசதங்குமிடம்ஒன்றில்

தங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.
பின்னணி
கேரளாவிலுள்ள சபரிமலையில் பருவம டைந்தபெண்கள்தரிசனம்செய்வதுதவிர்க் கப்பட்டிருந்தது. பெண்களின் உரிமை மீறப்படுவதாகவும், பெண்அடிமைத்தனம் தொடர்வதாகவும் இதுகுறித்து இந்திய உச் சநீதிமன்றத்தில்வழக்குத்தாக்கல்செய்யப் பட்டது. பெண்களைக்கோயிலுக்குள்அனு மதிக்காதது மாதவிடாய் என்ற காரணத் தால்மட்டுமல்ல, அதுஐயப்பனின்விருப்பத் துடன் தொடர்புடையது என்று இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் இந்து அமைப்புகள் கூறின. வழக்கை விசாரித்த நீதிமன்று சப ரிமலைக்குச் செல்வதற்கு அனைத்து வய துப் பெண்களுக்கும் அனுமதியளித்துத் தீர்ப்பளித்தது. நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரா கப் போராட்டங்கள் நடந்தன.
இந்த நிலையில் கேரளாவைச் சேர்ந்த 39 வயது கனகதுர்காவும், 40 வயது பிந்து அம்மிணியும் பொலிஸ் பாதுகாப்புடன் தரி சனம் செய்து திரும்பினர். சபரிமலைக்குச் சென்று திரும்பிய காரணத்தால் கனகதுர் காவை அவரது கணவரும், மாமியும் வீட்டை விட்டு வெளியேற்றினர்.
கனகதுர்காமீதுதொடுக்கப்பட்டதாகக்கூறப் படும் வன்முறை, அவரை வீட்டுக்குள் செல்லஅனுமதிமறுத்தது உள்ளிட்டகுற்றச் சாட்டுகள் குறித்த வழக்கு விசாரணை அடுத்த வாரம் நடக்கவுள்ளது.

பிறேசிலில் உடைந்தது அணைக்கட்டு பலர் நீரால் அடித்துச் செல்லப்பட்டனர்

பிறேசிலியா.ஜன.28
பிறேசிலில்தென்கிழக்குப்பகுதியில்அணைக்கட்டு ஒன்று உடைந்தது. இதில் 9 பேர் சாவடைந்தனர். 300க்கும் மேற்பட்டவர்களை நீர் அடித்துச் சென் றது. அவர்களைத்தேடும்பணிகள்முடுக்கிவிடப்பட் டுள்ளன. பிறேசிலின் பர்மாடின்ஹோ பகுதியில் அமைந்துள்ள மிகப் பெரிய அணை ஒன்றே கடந்த வெள்ளிக்கிழமை உடைந்தது. அதனால் அருகிலி ருந்த சுரங்கத் தொழிலாளர்கள் பலர் தண்ணீரில் அடித்துச்செல்லப்பட்டனர். இதில்9பேரின்உடல்கள் மீட்கப்பட்டுள்ள பலர் இதுவரை காணாமல்போய் உள்ளனர்.
அவர்களைஉலங்குவானூர்திமூலம்தேடும்பணி யில்மீட்புப்பணியாளர்கள்ஈடுபடுகின்றனர். இந்தச் சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்று பிறேசில் அரசு தெரிவித்துள்ளது. பிறேசிலில் 2015 ஆம் ஆண்டு சுரங்கத் தொழிற்சாலை ஒன் றின்அருகேஇருந்தஅணைஉடைந்ததில்19தொழி லாளர்கள்சாவடைந்தனர், 25ஆயிரம்வரையான மக்கள் தண்ணீர் இல்லாமல் பெரும் துன்பத்துக்கு உள்ளாகினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



சீனாவுக்கான கனடாத் தூதர் மாற்றம் தலைமை அமைச்சர் ஜஸ்டின் அதிரடி

ஒட்டோவா.ஜன.28
சீனாவுக்கானகனடாவின்தூதராகஇருந் துவந்த ஜோன் மெக்கலனைப் பதவியி லிருந்து நீக்கியுள்ளார் கனடாவின் தலைமை அமைச்சர் ஜஸ்டின். அவர் வெளியிட்டுள்ளஓர் அறிக்கையில்,
"நான் ஜோன் மெக்கலனைப் பதவி வில கும்படி கேட்டுக் கொண்டேன். அவரின் பதவி விலகல் கடிதத்தையும் ஏற்று கொண்டேன்" என்றுள்ளார். மூத்த ராஜ தந்திரியான ஜோன் மெக்கலன், கனடா அரசுசார்பாகப்பலபதவிகளைவகித்ததா கவும், அவருக்கும் அவரது குடும்பத் துக் கும் நன்றி எனவும் ஜஸ்டின் மேலும் கூறினார். சீனாவின் ஹூவாவி நிறுவ னத்தலைமை அதிகாரியை அமெரிக்கா வின் பணிப்பின் நிமித்தம் கனடா கைது செய்தது.
இந்த விடயத்தில் ஜோன் மெக்கலன் சில கருத்துக்களை வெளியிட்டார். அதைத் தொடர்ந்துஅவர்பதவிநீக்கம்செய்யப்பட் டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



பாடசாலை நிகழ்வுகள்

வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி

கிளிநொச்சி, ஜன. 28

கிளிநொச்சி ,விவேகானந்தா வித்யாலய பாடசாலையின் 2019ஆம் ஆண்டுக்கான இல்லமெய்வல்லுநர் திறனாய்வு போட்டி பாடசாலை மைதானத்தில்கடந்த புதன்கிழமை பகல் 1.30 மணியளவில் பாடசாலை அதிபர் திருமதி. ஜெ. மாணிக்கவாசகன் தலைமையில்நடைபெற்றது.

முதன்மை விருந்தினராக கிளிநொச்சி உடற்கல்வி உதவிக்கல்வி பணிப்பாளர்மு. காந்தச்செல்வன், சிறப்பு விருந்தினராக கரைச்சிக் கோட்டக்கல்வி அலுவலகர் சு. தர்மரட்ணம், மதிப்புறு விருந்தினராக அம்பாள்குளம்கிராம அபிவிருத்திச்சங்கதலைவர் கிருஸ்ணசாமி ஆகியோர்கலந்துகொண்டனர். (க-222)

★ ★ ★ ★

வவுனியா, ஜன. 28

வவுனியா, நொச்சிக்குளம் இல. 01கனிஸ்ட உயர்தர வித்தியாலயத்தின்மெய்வல்லுநர்திறனாய்வுப்போட்டிகள் கடந்த புதன்கிழமை நடைபெற்றன.

பாடசாலை அதிபர் தலைமையில்நடைபெற்ற போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் கே. கே. மஸ்தானும், அரச தலைவரின் செயலர் சேனக்கவும் சிறப்பு விருந்தினராக ஓமந்தைக் கோட்டக் கல்வி அதிகாரி எஸ். சசிக்குமாரும் கலந்துகொண்டனர்.

மாணவர்களின் அணி நடை, ஓட்டப் போட்டி, வினோத உடைப்போட்டிஎனப்பலதரப்பட்ட போட்டிகள் நடைபெற்றன. வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் நிகழ்வுகளுக்கு வந்திருந்தனர். (எ-111)

சாவகச்சேரி, ஜன. 28

யாழ்ப்பாணம் மட்டுவில் வடக்கு சந்திர மௌலீசவித்தியாலயத்தின் இல்லமெய்வன்மைப் போட்டிகள் வித்தியாலய மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றன.

வித்தியாலய அதிபர் க. எழிலழகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா. கஜதீபன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஜ-131)

போதைக்கு எதிராக விழிப்புணர்வு ஊர்வலம்

வவுனியா,ஜன. 28

வவுனியா சிறி இராமபுரம் திருஞானசம்பந்தர் வித்தியாலய மாணவர்களால் 'போதைக்கு எதிராக விழிப்புணர்வு' ஊர்வலம் கடந்த வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

*பாடசாலை அதிபர் சிறிதரன் தலைமையில் விழிப்புணர்வு ஊர்வலம் நடை*பெற்றது.

காலை 8 மணிக்கு பாடசாலைக்கு முன்பாக ஆரம்பித்த ஊர்வலம் கிராமத்தின் உள்வீதி வழியாகச் சென்று மீண்டும் பாடசாலையை அடைந்தது.

இதன்போது போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியிருந்ததுடன், கோசங்களையும் எழுப்பியிருந்தனர். இந்த ஊர்வலத்தில் மாணவர்கள் ஆசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (110)

★ ★ ★ ★

மதுஒழிப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், ஜன. 28

மதுஒழிப்பு வாரத்தை முன்னிட்டு மல்லாகம் மதுவரித்திணைக்களகால் பொறுப்பதிகாரி ந. கிருபாகரன் தலைமையில் பாடசாலை மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகத் தமது பிரதேச பாடசாலைகளில் கருத்தரங்குகளை நடத்திவருகின்றனர்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி மாணவர்களுக்கு நேற்று முன்தினம் 23ஆம் திகதி புதன்கிழமை மதுஒழிப்பு கருத்தரங்கு நடத்தப்பட்டது. (63)

★ ★ ★ ★

போதை ஒழிப்புத் திட்டம் மன்னாரில் முன்னெடுப்பு

மன்னார், ஜன. 28

மன்னார்புனிதசவேரியார்பெண்கள்பாடசாலையில் கடந்தபுதன்கிழமைபோதைப்பொருள்ஒழிப்புசெயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரச தலைவரின் பணிப்பின்பேரில் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் போதைப் பொருள் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு இந்தச் செயற்றிட்டம் பாடசாலையில் முன்னெடுக்கப்பட்டது.

போதைப் பொருள்களில் இருந்து மாணவர்கள் எவ்வாறு தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்?, போதைப் பொருள் பாவனை தொடர்பான குற்றச் செயல் ஒன்றில் பாதிக்கப்படும் போது எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பன தொடர்பான விளக்கங்கள் மன்னார் நகர் மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்களுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி மற்றும் ஊடகவியலாளர்களால் வழங்கப்பட்டன. மாணவர்களின் கருத்துக்களும் பெற்றப்பட்டன. (எ-60)

உன்னை அறிந்தால்...

ஓர் உயர்ந்த மரத்தின் மீது இருந்த தன் கூட்டில் கழுகு ஒன்று முட்டைகளை இட்டு வைத்திருந்தது. அந்த மரத்தின் பருத்த அடிப் பகுதியில் கோழி ஒன்றும் முட்டை களை இட்டு வைத்து அடைகாத்து வந்தது. ஒருநாள் கழுகின் கூட்டிலிருந்த முட்டை களில் ஒன்று கூட்டிலிருந்து தவறிக் கீழே விழுந்தது. நல்லவேளையாக அது உடைந்து போகாமல் உருண்டு புரண்டு வந்து மரத்தின் அடியில் இருந்த கோழி முட்டைகளோடு சேர்ந்து கொண்டது. கோழியும் கழுகின் முட்டையைத் தனது முட்டை என நினைத்து தன் முட்டைகளோடு சேர்த்து அடைகாத்து வந்தது.

ஒருநாள் முட்டைகளில் இருந்து குஞ்சுகள் வெளிவந்தன. இப்போது கோழிக்குஞ்சுகள் மத்தியில் ஒரு கழுகுக் குஞ்சும் வளர்ந்து வந்தது. எல்லாக் குஞ்சுகளும் ஒற்றுமையோடு ஓடியாடி விளையாடித் திரிந்தன. தாய்க் கோழியும் எல்லாக் குஞ்சுகளையும் கவனமாகக் காத்து வந்தது. குஞ்சுகள் சற்று வளர்ந்து நின்றன. ஒருநாள் அந்தக் குஞ்சுகள் அனைத் தும் மேய்ந்து கொண்டிருந்தபோது வான் பரப்பில் கழுகு ஒன்று வட்டமிட்டது. கோழிக் குஞ்சுகளின் மத்தியில் நின்றிருந்த சிறிய கழுகுக் குஞ்சு அதனை உற்றுக் கவனித்தது. உடனே அதற்கும் தானும் வானில் உயரப் பறக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. ஆனால் மறுநிமிடம் நான் தான் கோழிக்குஞ்சாயிற்றே. என்னால் எப்படி அந்தக் கழு கைப் போல உயரப் பறப்பது கிடையாதே" என்று தனக்குள் நினைத்து பெருமூச்சுவிட்டுத் தன் ஆசையை அடக்கிக் கொண்டது.

வானில் பறந்த கழுகு திடீரெனத் தரையை நோக்கிப் பறந்து வந்தது. அதைக் கண்டு கோழிகள் மட்டுமல்ல கழுகுக் குஞ்சு கூடப் பயந்து நடுங்கியது. கழுகு சற்றும் தாமதியாது அந்தச் சிறிய கழுகுக் குஞ்சைத் தூக்கி கொண்டு வானில் உயரப் பறந்தது. இப்போது பெரிய கழுகைப் பார்த்து சிறிய குஞ்சுக் கழுகு "கழுகாரே என்னை ஒன்றும் செய்துவி டாதே. நான் ஓர் அப்பாவிக் கோழிக்குஞ்சு. உன்னைப் போல் எனக்கு உயரப் பறக்கவும் தெரியாது" என்று நடுங்கியபடி கூறியது. அதனைக் கேட்ட பெரிய கழுகு "அடேய் முட் டாளே! நான் உன்னைக் கொல்வதற்காகத் தூக்கி வரவில்லை. நீ எனது இனம். வானில் சுதந்திரமாகப் பறக்க வேண்டியவன். அது தெரியாமல் தரையிலேயே தரிந்து கொண் டிருக்கிறாய்!" என்றது.

பெரிய கழுகு சொன்னதைக் கழுகுக் குஞ்சு நம்பவே இல்லை. ஆனால் அது "அப்படியா னால் என்னாலும் உன் போலப் பறக்க முடியுமா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டது. "நிச்சயமாகப் பறக்க முடியும். இதோ பறந்து பார்" என்று கூறி கழுகு தன் கால்களுக்கி டையில் இருந்த சிறிய கழுகை கீழே நழுவ விட்டது. இதனை எதிர்பாராத கழுகு குஞ்சு முதலில் பயந்தது. பின்னர் சிறகை நன்றாக அடித்துப் பறந்து கொண்டிருந்தது. இப்போது அது பெரிய கழுகை நோக்கி "நான் கோழி அல்ல. கழுகுதான் என்ற உண்மை எனக்கு இப்போது புரிந்தது" என்று மகிழ்வுடன் கூறியது.

நம் ஒவ்வொருவருக்குள்ளும் திறமைகள் தூங்குகின்றன. அவற்றைத் தட்டி எழுப்ப வேண்டி வெளிக் கொண்டு வரவேண்டியது அனைவரது கடமையாகும்.

வர்ணம் தீட்டுவோம்







அறிந்து கொள்வோம்

- மனிதனின் உடலில் காணப்படும் குருதி நாளங்க ளின் நீளம் 95 ஆயிரம் கிலோ மீற்றர் வரை இருக் கும்.
- அறிவியல் முறைப்படி ஒரு தர்ப்பூசணிப் பழத்திலி ருந்து 6 இலட்சம் தர்ப்பூசணிப் பழங்களை உற்பத்தி செய்ய முடியுமாம்.
- கடல் நட்சத்திரங்களின் கால்களை வெட்டினால், அவை மீண்டும் வளர்ந்துவிடும்.
- மென்மையான மேல் ஓடு கொண்ட ஆமைகள் சீனாவில் உள்ளன.
- சண்டிகர் நகரை ல கார்பிசியர் என்ற ஒரு பிரெஞ்சு கட்டட வடிவமைப்பாளர் வடிவமைத்தார்.
- ஜப்பானிலுள்ள ஒகினவா தீவில் 100 வயதைக் கடந்த முதியவர்கள் சுமார் 450 பேர் வசிக்கிறார்கள்.
- விக்டோரியா மகாராணி காலத்தில், தாடி வைத்தி ருந்தவர்களுக்காகச் சிறப்புத் தேநீர்க் கோப்பைகள் பழக்கத்தில் இருந்தன. தேநீரை அருந்தும் போது தாடி புடாதவாறு அவை வடிவமைக்கப்பட்டிருந்தன.

வீதி விதிகள் அறிந்திடுங்கள்

பள்ளி செல்லும் செல்வங்களே
பாதையைப் பார்த்துச் செல்லுங்களே
பள்ளம் மேடு குறுக்கிடலாம்
பலவகை வாகனம் பறந்திடலாம்

வலது பக்கம் நடந்திடுங்கள்
எதிரே வருவதை அறிந்திடுங்கள்
தடதடவென்று ஓடாதீர்
தாறு மாறாய் அலையாதீர்

மஞ்சள் கோட்டில் நில்லுங்கள்
விரைந்து மறுபக்கம் செல்லுங்கள்
துள்ளிக் குறுக்கே பாயாதீர்
துன்பம் அடைந்து மாயாதீர்

வீதி விதியை அறிந்திடுங்கள்
சரியாய்ச் செல்லப் பழகிடுங்கள்
காலன் வரவைத் தடுத்திடுங்கள்
கவலையின்றி வாழ்ந்திடுங்கள்

வித்தியாசங்களைக் கண்டுபிடிப்போம்

ஒழுக்கம்

மனிதர்களுக்கு ஒழுக்கம் மிகவும் முக்கியமானது. இது இளமைக்காலத்தில் இருந்தே கடைப்பிடிக்கப்பட வேண் டிய ஒன்றாகும். சிறுவர்களாகிய நீங்கள் நல்லொழுக் கத்தை எப்போதுமே கடைப்பிடிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். பெற்றோர், ஆசிரியர்கள், மூத்தவர்கள் அனைவரையும மதித்து நடக்க வேண்டும். எப்போதும் உண்மையைப் பேச வேண்டும்.

பணிவுடன் நடக்க வேண்டும். எப்போதும் உண்மை யைப் பேச வேண்டும். பணிவுடன் நடக்க வேடும். தீய காரியங்கள் எதிலும் ஈடுபடக் கூடாது. அவ்விதம் வாழ்ந்து பழகினால் நீங்கள் பெரியவர்களாகிய பின்ன ரும் ஒழுக்கமுள்ளவர்களாக விளங்குவீர்கள்.



உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

சம்பந்தனைச் சாட மகிந்தவுக்கு தகுதியில்லை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் ரணில் விக்கிரமசிங்க போன்று பதவி ஆசை பிடித்தவர்தான் என்று கருத்துரைத்திருக்கிறார் முன்னாள் அரச தலைவரும் இன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச.

எதிர்க் கட்சித் தலைவர் பதவி தொடர்பில் சம்பந்தன் மீண்டும் போர்க்கொடி உயர்த்தியிருப்பதையொட்டி அவர் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

எதிர்க் கட்சித் தலைவர் பதவி மகிந்த ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டது தொடர்பில் ஏற்கனவே எழுப்பப்பட்ட இரு வினாக்களில் ஒன்றுக்குப் பதிலளித்த சபாநாயகர், மற்றொன்றுக்குப் பதிலளிக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியே சம்பந்தர் பிரச்சினையைக் கிளப்பியிருந்தார்.

மகிந்த ராஜபக்ச அங்கத்துவம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரே தற்போதைய ஆட்சியின் தலைவராகவும் இருப்பதால், ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களே ஆட்சியின் தலைவராகவும் எதிர்க் கட்சித் தலைவராகவும் இருக்கின்றார்கள் என்கிற நிலை ஏற்படுகின்றது என்கிற கருத்தும்–

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மூலம் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற மகிந்த ராஜபக்ச பின்னர் பொது மக்கள் முன்னணி கட்சியில் சேர்ந்துவிட்டார் என்று அறிவிக்கப்பட்டு 30 நாள்கள் கடந்துவிட்டன என்பதால் அவரது நாடாளுமன்றப் பதவி பறிபோய்விட்டது என்பதால் அவரை எதிர்க் கட்சித் தலைவராக்க முடியாது என்கிற கருத்தும்–

தொடக்கத்திலேயே முன்வைக்கப்பட்டிருந்தன. அதன்பின்னர் தனது முடிவை அறிவிப்பார் என்று சொல்லியிருந்த சபாநாயகர் தனது முடிவை அறிவித்தபோது, மகிந்த ராஜபக்ச ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலேயே தொடர்ந்தும் உறுப்பினராக இருக்கிறார் என்று அந்த முன்னணியின் செயலாளர் கடிதம் தந்திருப்பதால், நாடாளுமன்றத்தில் இரண்டாவது அதிகூடிய ஆசனங்களைக் கொண்ட கட்சி என்ற அடிப்படையில் மகிந்த ராஜபக்சவுக்கு எதிர்க் கட்சித் தலைவர் பதவி வழங்கப்படுகின்றது என்று தெரிவித்திருந்தார்.

கட்சியின் செயலரே மகிந்த ராஜபக்ச தனது கட்சியை விட்டு வெளியேறிவிடவில்லை என்று கடிதம் தந்ததன் காரணத்தால் அவரது நாடாளுமன்றப் பதவி பறிபோகவில்லை என்று சபாநாயகர் எடுத்த முடிவை ஏற்றுக்கொண்டாலும் கூட, ஒரே கட்சியைச் சேர்ந்த இருவர் ஆட்சியின் தலைவராகவும் எதிர்க்கட்சித் தலைவராகவும் எப்படி இருக்க முடியும்? என்கிற கேள்விக்கு சபாநாயகர் பதிலளிக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியே சம்பந்தன் இந்த விவகாரத்தைக் கிளறியுள்ளார்.

சந்திரிகா காலத்திலும் அதற்கு முன்னரும்கூட இதுபோன்ற சந்தர்ப்பங்கள் அமைந்துள்ளன, அப்போதும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களே ஆட்சியின் தலைவராகவும் எதிர்க் கட்சித் தலைவராகவும் இருந்திருக்கிறார்கள் என்கிற வாதத்துக்கும் கூட சம்பந்தர் பதிலளித்திருந்தார்.

அப்போது இந்தப் பிரச்சினை கிளப்பப்படவில்லை என்பதால் அதுபற்றி ஆராய்வதற்கான தேவை எழவில்லை, ஆனால், இப்போது அதுபற்றிக் கேள்வி எழுப்பப்படுவதால் சபாநாயகர் அதற்குத் தெளிவான பதிலை வழங்கவேண்டும் என்பதே சம்பந்தரின் வாதம்.

சம்பந்தர் இந்தக் கேள்வியை விடாப்பிடியாகக் கேட்பதால் தான் அவரைப் பதவி மோகம் பிடித்தவர் என்ற வர்ணித்திருக்கிறார் மகிந்த ராஜபக்ச.

அரசியல் சதியின் மூலம் ஒரு நள்ளிரவில் ஆட்சியைப் பிடிக்க முயன்ற ஒருவருக்கு, பெரும்பான்மையே இல்லாதபோதும் அதிகாரத்தைப் பிடித்துவிடலாம் என்கிற கனவில் ஆட்சிக் கவிழ்ப்புச் சதியில் ஈடுபட்ட ஒருவருக்கு, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது என்பது தெளிவாகத் தெரிந்துவிட்ட பின்னரும் நீதிமன்றம் அகற்றும் வரையும் பதவியைவிட்டுப் போகமாட்டேன் என்று அடம் பிடித்து அமர்ந்திருந்த ஒருவருக்கு, சம்பந்தனைப் பார்த்து பதவி ஆசை பிடித்தவர் என்று சொல்வதற்கு என்ன தகுதியும் உரிமையும் இருக்கிறது? மிக மோசமான, கடை நிலையான, நேர்மையற்ற அரசியலை முன்னெடுக்கும் மகிந்த

இருதடவைகள் அரச தலைவராகப் பதவி வகித்த பின்னரும் அரசியலைவிட்டு ஒதுங்கி மற்றவர்களுக்கு இடமளிக்காமல் அதிகாரக் கதிரைக்கு இன்னும் ஆசைப்பட்டுக் கொண்டிருக்கும் மகிந்த, சம்பந்தனைப் பார்த்து பதவி ஆசை பிடித்தவர் என்று கூறுவதில் எந்தவித நியாயங்களும் இருக்க முடியாது.



சீனாவும் இந்தியாவும் பரம எதிரிகள். அண்டை நாடுகளாக உள்ளதால் எல்லைப்பிரச்சினை நீண்ட காலமாக நிலவி வருகின்றது. 1962ஆம் ஆண்டு இரண்டு நாடுகளுக்குமிடையே இடம்பெற்ற பெரும்போர் இன்னமும் நினைவு கூரப்படுகின்றது. ஆனால் எல்லைப் பிரச்சினைக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை.
இலங்கையில் மகிந்தவின் ஆட்சிக்காலம் சீனாவுக்குச் சாதகமாகவே அமைந்துவிட்டது. மகிந்தவின் ஆட்சி தொடரவேண்டுமென்பது சீனாவின் விருப்பமாகவும் நிலைத்துவிட்டது. ஆனால் ரணிலின் அறிவிப்பு சீனாவை அதிர்ச்சியடையச் செய்திருக்கும்.

சேரலாதன்

சீனாவுக்குப் போட்டியாக இந்தியா களமிறக்கப்படுவது சாத்தியப்படுமா?

சீனாவிடம் பெற்ற கடனை இந்தியாவின் உதவியுடன் மீளச் செலுத்துவோம் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருப்பது இலங்கை இந்தியாவின் பக்கம் சாய்ந்து செல்வதற்கான அறிகுறியாகவே தென்படுகிறது.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் சீனாவிடமிருந்து இலங்கை பெருமளவில் கடன்களைப் பெற்றுக் கொண்டது. அம்பாந்தோட்டை துறைமுகத்தையும், மத்தள வானூர்தி நிலையத்தையும் அமைப்பதற்காக சீனா வழங்கிய கடன்கள் முழு நாட்டையும் அந்த நாட்டிடம் அடகுவைக்கும் நிலையை உருவாக்கிவிட்டது. அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவின் வசம் சென்றுவிட்டது. தலைநகர் கொழும்பிலும் சீனா ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்துவிட்டது. நாட்டின் அரசியலிலும் சீனா அக்கறை செலுத்த ஆரம்பித்துவிட்டது. இதுவொரு ஆபத்தான நிலை யென்பது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். ஏனைய நாடுகள் பலவற்றிலும் சீனாவின் தலையீடுகள் அதிகரித்துச் செல்வதையும் அங்கு அரசியல் குழப்பநிலை காணப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது. இந்த நிலை இலங்கையிலும் ஏற்படாது என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதத்தையும் வழங்க முடியாது.

சீனாவும் இந்தியாவும் பரம எதிரிகள். அண்டை நாடுகளாக உள்ளதால் எல்லைப்பிரச்சினை நீண்ட காலமாக நிலவி வருகின்றது. 1962ஆம் ஆண்டு இரண்டு நாடுகளுக்குமிடையே இடம் பெற்ற பெரும்போர் இன்னமும் நினைவு கூரப்படுகின்றது. ஆனால் எல்லைப் பிரச்சினைக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை.
இலங்கையில் மகிந்தவின் ஆட்சிக்காலம் சீனாவுக்குச் சாதகமாகவே அமைந்துவிட்டது. மகிந்தவின் ஆட்சி தொடரவேண்டுமென்பது சீனாவின் விருப்பமாகவும் நிலைத்துவிட்டது. ஆனால் ரணிலின் அறிவிப்பு சீனாவை அதிர்ச்சியடையச் செய்திருக்கும்.
சீனாவைப் பொறுத்தவரையில் இலங்கைக்குக் கடன் அடிப்படையிலேயே நிதியை வழங்கி வருகின்றது. வட்டி வீதமும் அதிகமாக உள்ளது. சீனாவிடம் பெற்ற கடனை மீளச் செலுத்துவதில் இலங்கை சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றது. இந்தியா வழங்கும் நிதி கடனாக அன்றி உதவி அடிப்படையிலேயே அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது. ஆனால் இத்தகையதொரு நிலை இருந்தபோதிலும் மகிந்த சீனாவை நாடியதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.
போர் முடிவடைந்த பின்னரும் தேவையற்ற திட்டங்களுக்கு பெரும் நிதி செலவிடப்பட்டதையும் இதை கல்வி, சுகாதாரம் போன்ற அத்தியவசிய தேவைகளுக்குச் செலவிடுவதால் மக்களின் பொருளாதாரச் சுமையைக் குறைத்திருக்க முடியுமென்பதையும் ரணில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.
சீனாவுக்கு நிகராக இல்லாவிட்டாலும் இந்தியாவும் பொருளாதார பலத்தில் உயர்ந்து நிற்பதைக் காண முடிகின்றது. இலங்கையின் கடன் சுமையைக் குறைப்பதற்கு இந்தியாவால் முடியும். புலிகளுக்கு எதிரான போரை முன்னெடுத்துச் செல்வதற்கு அப்போதைய இந்திய அரசு இலங்கைக்குத் தாராளமாகவே நிதியுதவிகளை வழங்கியிருந்தது. இதற்கும் மேலாக பெருமளவு படை உபகரணங்களும் வழங்கப்பட்டன. தலைமை அமைச்சரின் முடிவுக்கு மைத்திரி பச்சைக் கொடியைக் காட்டுவாரென்பது சந்தேகமாகவுள்ளது. மகிந்தவுடன் தேர்தல் கூட்டணியொன்றை அமைப்பதற்கு முயன்றுவரும் அவர் சீனாவை எளிதில் பகைக்க மாட்டாரென்பது மறுக்கமுடியாது. ரணில் இந்தியாவின் பக்கம் சாய்வதில் சில இடையூறுகளை எதிர்கொள்ள வேண்டியதொரு நிலை ஏற்படலாம். என்னதான் இருந்தபோதிலும் இலங்கை மீதான தனது பிடியைத் தளர்த்துவதில் சீனா சுலபமாக இணங்கிப் போகாது என்பதை உறுதியாகக் கூறிவிடமுடியும். எதிரி நாடொன்று தனக்குப் போட்டியாகத் இலங்கையில் காலூன்றுவதை அந்த நாடு பொறுத்துக்கொள்ளுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



ஆனால் மகிந்த தரப்புக்குச் சார்பான அரசியல் மாற்றமொன்று ஏற்படுமானால் சீனாவை எவராலுமே அசைக்க முடியாமல் போய்விடும் என்பதும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் புரியும். அவர் ஒரு தந்திரசாலி என்பதால் எதையும் தீர ஆலோசித்த பின்னரே களத்தில் இறங்குவாரென்பதையும் கவனத்தில்கொள்ள வேண்டும்.

இந்துமதி



> போரால் பாதிக்கப்பட்ட மக்கள் உதவிகள் பெற்றுக் கொள்வதற்கு மாவட்டச் செயலகங்களுக்கும், பிரதேச செயலகங்களுக்கும், அரச அலுவலகங்களுக்கும் இன்னமும் அலைந்து கொண்டிருக்கின்றார்கள். வீடுகள் இல்லாமல் அல்லாடுகின்றார்கள்.

சொல் வேண்டாம் செயலே தேவை

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்குத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் கூட்டம் 21ஆம் திகதி திங்கட் கிழமை நடைபெற்றும் முடிந்து விட்டது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில், வடக்கு மற்றும் கிழக்கு அபிவிருத்திக்கான சிறப்புச் செயலணி ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. அந்தச் செயலணியிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், திணைக்களத் தலைவர்கள் இடம்பெற்றிருக்கின்றனர். இந்தச் செயலணியும் இதுவரை 6 கூட்டங்களை நடத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களால் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இந்தச் செயலணியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. ஆனால் அவை முழுமையாகத் தீர்க்கப்படவில்லை. இந்தச் செயலணியும் ஒவ்வொரு தடவை கூடும் போதும் கடந்த காலத் திட்டங்களை மீளாய்வு செய்கின்றது. புதிய திட்டங்களை இனங்கண்டு நடைமுறைப்படுத்தவில்லை. பல்வேறு விடயங்கள்

பேச்சு அளவிலேயே இருக்கின்றன.

இவ்வாறானதொரு நிலையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் மற்றொரு குழு அமைக்கப்பட்டுள்ளது. ஒக்ரோபர் 26ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட அரசியல், நெருக்கடியால் ரணில் பதவியிழந்தார். அவர் தலைமையில் மீளவும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு அமைவதற்கு கூட்டமைப்பு ஆதரவு வழங்கியது. கூட்டமைப்புக்கும், ஐக்கிய தேசிய முன்னணிக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றிருந்தது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும்போது கூட்டமைப்பின் ஆலோசனையுடன் முன்னெடுக்கப்பட வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அபிவிருத்திப் பணிகள் தொடர்பான அமைச்சரவைப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் கூட்டமைப்புடன் பேசப்படவேண்டும். இதற்கான பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் என்று கூட்டமைப்பு வலியுறுத்தியிருந்தது. அதற்கு அமைவாகவே இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட மக்கள் உதவிகள் பெற்றுக் கொள்வதற்கு மாவட்டச் செயலகங்களுக்கும், பிரதேச செயலகங்களுக்கும், அரச அலுவலகங்களுக்கும் இன்னமும் அலைந்து கொண்டிருக்கின்றார்கள். வீடுகள் இல்லாமல் அல்லாடுகின்றார்கள்.

வீட்டுத் திட்டத்துக்கான பெயர்ப் பட்டியலில் தமது பெயர்கள் இல்லை என்பதால் பிரதேச செயலகங்களுக்கும், மாவட்டச் செயலகங்களுக்கும் படையெடுக்கின்றனர். அவர்களின் ஆதங்கங்கள் புரிந்து கொள்ளப்படக்கூடியவை.

இந்திய அரசால் ஏற்கனவே வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களுக்குப் போதிய நிதி ஒதுக்கப்படாததால் அந்தத் திட்டங்களில் உள்வாங்கப்பட்ட மக்கள் பெரும் கடன் சுமையைச் சுமக்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டனர். வீட்டுத் திட்டங்களை வழங்கும்போது, போதுமான நிதியை வழங்குவது அவசியமானது.

வடக்கில் நீர்ப்பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. மழைவீழ்ச்சி ஆண்டுதோறும் குறைந்து செல்வதையும் அவதானிக்க முடிகின்றது. இன்னமும் 40 ஆண்டுகளில் வடபகுதி பாதியளவு பாலைவனமாகிவிடுமென தென்பகுதியைச் சேர்ந்த இனவாத அரசியல்வாதியொருவர் கூறுமளவுக்கு வடக்கின் நிலை மோசமான கட்டத்தை எட்டி நிற்கின்றது.

தொழில் வாய்ப்புக்களைப் பொறுத்தவரையில் வடக்கு நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும்போது கடை நிலையிலுள்ளது. இதை மாற்றியமைத்து புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பித்து நிரந்தரத் தீர்வைக்காண வேண்டியுள்ளது.

தரமான வீதிகள் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றுகின்றன. வடக்கில் உள்ள வீதிகளில் பல மக்களின் பாவனைக்கு உதவாத நிலையிலேயே காணப்படுகின்றன. இவையாவும் உடனடியாக சீர்செய்யப்பட வேண்டும்.

விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை உரிய விலைக்குச் சந்தைப்படுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இவர்களின் உழைப்பை இடைத் தரகர்கள் சுரண்டிவிடுவதே இதற்குரிய முதன்மைக் காரணமாகும். அவர்கள் இங்கு விற்பனை செய்யப்படமுடியாத தமது விளை பொருள்களை வெகு தொலைவில் உள்ள தம்புள்ளவுக்கு எடுத்துச் செல்கின்றனர். பல சந்தர்ப்பங்களில் அங்கும் நியாயமான விலை கிடைப்பதில்லை. போக்குவரத்துச் செலவையும் இவர்களே ஏற்றுக் கொள்வதால் அதிக இலாபத்தை இவர்களால் எதிர்பார்க்க முடியவில்லை. சிலவேளைகளில் இழப்பையும் இவர்கள் சுமக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இப்படிப் போர் முடிந்து 10ஆண்டுகளை நெருங்கும் நிலையிலும் குறைகளின் பட்டியல்கள் நீண்டு கொண்டேதான் செல்கின்றன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே அபிவிருத்திகள் நடக்கின்றன என்று தென்னிலங்கை அரசியல்வாதிகள் சொல்கின்றபோதும், மக்களின் பிரச்சினையைத் தீர்க்காத அபிவிருத்திகளா இங்கு இவ்வளவு நாளும் நடந்தது என்று எண்ணத் தோன்றுகிறது.

தலைமை அமைச்சர் ரணில் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள செயலணியாவது, இந்தப் பிரச்சினைகளைத் தொடரவிடாமல் முற்றுப்புள்ளிவைக்க வேண்டும். சொல்வதைவிட அவர்கள் செயலில் காட்டவேண்டும்.

ஆசிரியருக்கான கடிதம்

பேருந்துகளில் வெற்றிலை மெல்லத் தடை விதிப்பார்களா?

நயினை நாகபூசணி அம்மனைத் தரிசிப்பதற்காக எனது உந்துருளியில் சென்றிருந்தேன். செல்லும்போதும் வீடு திரும்பியபோதும் அந்த வீதித் தடத்தில் பயணித்த பேருந்துகளில் இருந்து என் மீது வெற்றிலைத் துப்பல்கள் விழுந்தன. அம்மனைத் தரிசிக்கச் சென்ற எனக்கு வெற்றிலைத் துப்பலால் அபிசேகம் நிகழ்ந்தமை மனதுக்குச் சங்கடமாக இருந்தது. இந்த இரண்டு சந்தர்ப்பங்களின்போதும் நான் உணர்ந்துகொண்ட விடயம் என்னவெனில், அந்த வீதியால் பல பேருந்துகள் பயணித்துக் கொண்டிருந்தன. தூரதேசங்களில் இருந்து பயணம் செய்கின்ற சக இனத்தவர்களும் அதிகளவில் பயணம் செய்தனர். தூர இடங்களில் இருந்து வருகின்ற அவர்களுடைய பயண வண்டிகளில் இருந்து இந்த வெற்றிலைத் துப்பல்கள் வந்திருக்கவில்லை. அந்த வீதித் தடத்துக்குரிய எம்மவர்களின் பேருந்து வண்டிகளில் இருந்துதான் இந்த வெற்றிலைத் துப்பல்கள் என் மீது விழுந்தன. இரண்டு சந்தர்ப்பங்களிலும் இருவேறு இடங்களில் தரித்து நின்று வெற்றிலைத் துப்பல்களைச் சுத்தம் செய்த போது, நான் மட்டும் இதனால் பாதிக்கப்படவில்லை என்பதை உணர்ந்தேன். இடையில் நின்ற எனக்கு உதவுவதற்கு முற்பட்ட பலரும் கூட அந்த வழிப்போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்து வண்டிகளையும், பயணிகளையும் கடிந்தே சென்றனர். பஸ்களில் புகைத்தல் தடை என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனால், வெற்றிலை மெல்லத் தடை என்று எழுதப்பட்டிருப்பதில்லை. அநேக பயணிகள் வெற்றிலையை மென்று கொண்டுதான் தமது பயணத்தைத் தொடர்கிறார்கள். நடத்துநர்கள் இந்த விடயத்தில் அக்கறை செலுத்துவதாகத் தெரியவில்லை. நடத்துநரும் ஓட்டுநரும்கூட வெற்றிலையை மென்றபடியே தமது பணிகளில் ஈடுபடுவதைக் கூட பேருந்துகளில் காணமுடியும் என்றும் எனக்கு உதவிய சிலர் கூறிச் சென்றனர். யாழ்ப்பாணத்தில் எம்மவர் மத்தியில் இருந்துவரும் மற்றவர்களைச் சங்கடத்துக்கு உள்ளாக்கும் இந்த தகாத பழக்கத்தைப் புகைத்தலுக்குத் தடை விதித்தைப்போல தடைக்குள்ளாக்குவது சிறந்தது என்று கருதுகிறேன்.

ச.இராசேந்திரம், யாழ்ப்பாணம்

வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.





ஜெயலலிதா வாழ்க்கை படத்தில் சமுத்திரக்கனி

மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் வாழ்க்கையைப் படமாக எடுக்க பலரும் ஆர்வம் காட்டி வருகின்றனர். இயக்குநர் ஏ.எல்.விஜய்யும் தற்போது அதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

ஜெயலலிதா வேடத்தில் ஹிந்தி நடிகை வித்யாபாலன் நடிக்க இருப்பதாகத் தகவல் வந்தது. சசிகலா வேடத்தில் சாய் பல்லவியை எதிர்பார்க்கலாம் என்று சில தகவல்களும் வந்தன. ஆனால் இதுபற்றி ஏ.எல்.விஜய் எந்தவிதமான அதிகாரபூர்வ அறிவிப்பும் தெரிவிக்கல்லை.

இதற்கிடையில் இந்தப் படத்தில் முக்கியமான வேடத்தில் நடிக்க நடிகர் சமுத்திரக்கனி ஒப்பந்தம் ஆகி இருக்கிறார். இந்தச் செய்தியை அவரே உறுதிப்படுத்தியும் இருக்கிறார். இதுகுறித்து நடிகர் சமுத்திரக்கனி கூறுகையில், "ஜெயலலிதாவின் வாழ்க்கையைப் படமாக்கும் ஏ.எல்.விஜய், ஒரு முக்கியமான கதாபாத்திரத்தில் நடிக்க என்னிடம் கேட்டார். நானும் சம்மதம் தெரிவித்துவிட்டேன்" என்றார்.

பொறுமை

பொறுமை வேகத்தைக் குறைப்பதன் மூலம் முன்னேற் றத்தை கொண்டுவருகின்றது. பொறுமை எம்மை குளிர்ச்சியாகவும் அமைதியாகவும் வைத்திருக்கின்றது.

பொறுமையானது ஒரு மரத்தன் ஓட்டப்பந்தைய வீரர் போன்று நம்முடைய வேகத்தைக்கட்டுப்படுத்தி. நிதானத்துடன் எம்முடைய சக்தியை கடைசி வரை தக்க வைத்துக்கொள்வதற்கான அவசியத்தை நாம் புரிந்துகொள்வதற்குஉதவிசெய்கின்றது. இயற்கையாகவேபொறுமையைக்கொண்டுவருவதால், நாம்மேற்கொள்கின்றஅனைத்துகாரியங்களிலும் நாம் வெற்றியடைவதை நாம் காண்கின்றோம்.



இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

மேடம்: உறவினரிடம் கருத்துவேறுபாடு உருவாகலாம். தொழில் வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

இடபம்: அன்பால் அனைவரையும் அரவணைப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் தாராள அளவில் பணவரவு கிடைக்கும். பணக்கடனில் ஒருபகுதி அடைபடும்.

மிதுனம்: எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். தொழிலில் இடையூறுகளை சரிசெய்ய முயல்வீர்கள். இலாபம் சுமாராக இருக்கும்.

கடகம்: அன்றாடப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு உயரும்.

சிங்கம்: இயன்ற அளவில் பிறருக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

கன்னி: நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். மனைவி விரும்பிய ஆடம்பர பொருள் வாங்கித் தருவீர்கள்.

துலாம்: சூழ்நிலை அறிந்து பேசுவது நல்லது. தொழிலில் உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். ஆரோக்கியம் மேம்படும். அரச வகையில் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும்.

விருச்சிகம்: நண்பர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். லாபம் சுமாராக இருக்கும்.

தனுசு: நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

மகரம்: வழக்கத்திற்கு மாறாக பணிச்சுமை அதிகரிக்கும். நண்பரின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும்.

கும்பம்: கடந்த கால உழைப்பின் பயனைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நவீன மாற்றங்களைச் செய்வீர்கள். வருமானம் திருப்தியளிக்கும்.

மீனம்: பேச்சில் நிதானம் கடைபிடிப்பது நல்லது. தொழிலில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற்ற கால அவகாசம் தேவைப்படும். லாபம் சுமார். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

சுடோக்கு

எண் விளையாட்டு

	5		3	1				
	4				8			
					4		2	7
		6	7			9	4	
		7	6	2			5	1
					5	7	1	6
6			8	4	7	2		
	7	3						9

நேற்றைய விடை

6	2	9	1	3	4	5	7	8
8	5	1	7	9	6	3	2	4
7	4	3	8	2	5	9	1	6
1	8	2	3	4	7	6	9	5
3	6	4	9	5	1	2	8	7
9	7	5	6	8	2	4	3	1
5	9	8	4	7	3	1	6	2
4	3	6	2	1	8	7	5	9
2	1	7	5	6	9	8	4	3

விரலில் வைக்கப்படும் ஒற்றை மைப்புள்ளி, நம் முகத்தில் குத்தப்படும் கரும்புள்ளி களுக்கான முன்னோட்டம்!

பணம் படுத்தும்பாடு!

நான் உன்னுடன் இருந்தால் நீ செல்வந்தன்.

நான் உன்னை விட்டுப் பிரிந்தால் நீ ஏழை

என்னை மற்றவரிடம் கொடுத்தால் நீ கொடையாளி

என்னை மற்றவரிடமிருந்து பெற்றால் நீ கடனாளி

என்னை செலவு செய்தால் நீ ஊதாரி

என்னைச் சேமித்து வைத்தால் நீ கஞ்சன்

என்மேல் அதிக பற்றுடன் வாழ்ந்தால் நீ பேராசைக்காரன்

என்மேல் பற்றற்று வாழ்ந்தால் நீ சந்நியாசி

உன் தேவைக்கு நீ என்னை படைத்தாய்.
இன்று உனது தேவை நானாக மட்டும் தான் இருக்கிறேன்.



மரணஅறிவித்தல்



A.S.அகஸ்ரின்

(ஓய்வு பெற்ற ஆசிரியர் - யா/புனித பத்திரிசியார் கல்லூரி)

தோற்றம் - 22.08.1926 மறைவு - 26.01.2019

புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் அடைக்கல அன்னைப் பங்கை வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரனிப்பிள்ளை சுவாம்பிள்ளை அகஸ்ரின் 26.01.2019 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாம்பிள்ளை கத்தரின் தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான யோசவ் அன்றூ றோஸ் மாகிறற் தம்பதிகளின் மருமகனும் இயூஜின் கருணாவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கபிரியேல்பிள்ளை, அருட் சகோதரி அன்ரனீனா(A.C), எலிசபெத் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளையின் மைத்துனரும் சுறேஷ்(ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி), சியாமா ஆகியோரின் பாசமிகு தந்தையும் றஜிதா(ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி), வெஸ்லி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்கச் சடங்குத் திருப்பலி யாழ் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் புனித பத்திரிசியார் கல்லூரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு புனித மரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

7, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 22900) (14,17)

விற்பனைக்குண்டு

- மின்சாரத்தில் இயங்கும் வெதுப்பகம் (OVEN) நான்கு.
- SPRIL MIXER (மா சேர்க்கும் இயந்திரம்) இரண்டு.
- SAMSUNG FRIDGE 270LTR
- மற்றும் வெதுப்பக உபபொருள்கள் பல விதமானவை மேற்குறித்த அனைத்தும் ஆஸ்திரேலியாவில் இருந்து தருவிக்கப்பட்டன.

(CS/22897)(11,17)

076 195 8322

மரணஅறிவித்தல்

திருமதி வியாகேஸ்வரி நடராஜா(மணி)

யாழ் நல்லூரைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வியாகேஸ்வரி நடராஜா 22.01.2019 செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு .திருமதி இராயப்பாபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நடராஜா (Insurance Consultant) இன் அன்பு மனைவியும் ரமேஸ் நிரஞ்சன்(Australia), சுதர்சன்(Norway), துஷ்யந்தி(London) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம், வர்ணகுலசிங்கம், பரமேஸ்வரி, இராஜேந்திரம் மற்றும் சிவசிதம்பரம், ராஜேஸ்வரி, புவனேஸ்வரி, லீலாலோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கவோல், பிரசாந்தி, நாகராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் அக் ஷாயினி, அபிதாயினி, ஆஷாயினி, ஆதிஸ், அன்யா, உதய், அபய் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2019) திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: லீலா - 021 222 4431

சந்திரா - 021 222 2011

(CS 22435) (14,17)

நாகபூஷணி திருமண சேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும்.

257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 9306 / 077 138 7596

நாஹா மருத்துவ நிலையம்

நாடி சாஸ்திரத்தின் படி மர்மநோய்களைக் கண்டறிதல் கை, கால், செயலிழந்து வரும் வாதம், ஆஸ்மாவின் தீவிரபாதிப்பு பெண்ணியல்நோய்கள் - சிறப்பு சிகிச்சை

077 321 2740

வங்கிழமன்லேன் சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி (ஜெகபதி வீடு) மானிப்பாய்.

காணி விற்பனைக்குண்டு

கோப்பாய் இராஜவீதியில் சுற்றுமதிலுடன் கூடிய 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

077 142 0917

காணி விற்பனைக்கு

யாழ்நகரில் கடைத்தொகுதிகளுக்கு அண்மையில் கொட்டடிச் சந்தியில் கடைகள், களஞ்சியம் கட்டக்கூடிய 1 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

077 941 6766

(ca 22895) (13,17)

உதயன்

விளம்பரதொடர்புகளுக்கு

021 493 1111

advt@uthayan.com

முதலாம் ஆண்டு நினைவுகளில்...

தோற்றம் 04 . 11 . 1934

மறைவு 08 . 02 . 2018

சிதம்பரப்பிள்ளை நல்லம்மா

(பிறப்பு - சுழிபுரம், வளர்ப்பு - மருதன்குளம், வாழ்வு - சேமமடு படிவம் 1 இறப்பின் இறுதியில் கல்மடு படிவம் -2)

" அம்மா எனும் அரும் தொடை வள்ளலாய் திகழ்ந்த...
எங்கள் குடும்பத்தின் அன்புத் தெய்வமே...
உங்கள் பிரிவு எங்கள் இதயத்தை கனக்க
எங்கு சென்றீர்கள் வருடம் ஒன்றாகியும்
நல்லம்மா எனும் உங்கள் திருநாமம்
எங்கள் எல்லோருக்கும் அரும் மருந்து
அம்மா உங்கள் ஆத்ம சாந்திக்காய்
பிரார்த்திக்கின்றோம் சாந்தி சாந்தி....!!

இன்று (28.01.2019) எமது இல்லத்தில் இடம்பெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும் :

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

077 231 8394

(CS 00463) (13,17)

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 29.12.2018 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

திருமதி மாணிக்கம் கிருஷ்ணபிள்ளை

மலர்வு 22.04.1944 உதிர்வு 29.12.2018

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.01.2019) திங்கட்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து அதனைத்தொடர்ந்து நண்பகல் 12.30 மணியளவில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செல்வாபுரம், கரணவாய்.

குடும்பத்தினர்.

மணிவிழா நாயகியைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வி அருந்தவநாயகி பொன்னுத்துரை (SLTS - I)

(உப அதிபர் – யா/அளவெட்டி வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை)

சேவை விவரம்

யா/அளவெட்டி சீனன் கலட்டி ஞானோதய வித்தியாலயம் - 23.03.1990 - 29.02.1996
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி. திருகோணமலை - 01.03.1996 - 26.07.1998
தி/ பாலம் போட்டாறு சித்திவிநாயகர் வித்தியாலயம் தம்பலகாமம் - 27.07.1998 - 31.12.2005
யா/ அளவெட்டி வடக்கு அ.மி.த.க. பாடசாலை - 01.01.2006 - 27.01.2019

அளவைக் கூடம் பெற்றெடுத்த அருந்தவ நாயகியே! – நின் அகவை அறுபது நிறைவு நாளில் அளப்பரிய சேவை நல்கி முப்பது வருட கல்வி சேவைதனை – புரிந்தீர் செப்புறு நல்வாழ்வு பெற்று இனிது வளம் பெருக வாழ்வீர்! நாயகியே! வாழி! வாழி!

வாழ்த்துவோர்:- அதிபர், ஆசிரியர்கள்.
யா/அளவெட்டி வடக்கு அ.மி.த.க.பாடசாலை.

கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 21.11.1928 இறப்பு 26.01.2019

கௌரவ கல்வி இராஜாங்க அமைச்சர்
விஜயகலா மகேஸ்வரன்
அவர்களின் அன்புத் தந்தை
பரமு மார்க்கண்டு

நேற்று முன்தினம் 26.01.2019 அன்று இறைபதம் அடைந்துள்ளார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பாடசாலை சமூகம்
யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலி.

கண்ணீர் அஞ்சலி



மலர்வு 21.11.1928 உதிர்வு 26.01.2019

தேசிய சேமிப்பு வங்கி சாவகச்சேரி கிளையில் வங்கி உத்தியோகத்தர்
செல்வி சரஸ்வதி மார்க்கண்டு
அவர்களின் பாசமிகு தந்தை

பரமு மார்க்கண்டு

26.01.2019 அன்று இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

(CS 12850) (04.17)

முகாமையாளர்
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.
தேசிய சேமிப்பு வங்கி, சாவகச்சேரி.

மரண அறிவித்தல்

கந்தையா தில்லையம்பலம்

(வேலாயுதம் ஆசாரியார், ஸ்தாபகர் - தில்லையம்பலம் மரத்தொழிலகம்)



காளிகோவிலடி, தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தில்லையம்பலம் கடந்த (26.01.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பார்வதி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லமுத்து தம்பதிகளின் மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் யசோதா, நிரூபன் (UK), சுயாதா, வினோதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, பரமேஸ்வரி, மனோன்மணி ஆகியோரின் சகோதரனும் பாலேந்திரன், பாஸ்கரன், தவராசா (பிரான்ஸ்), நீரஜா (UK) ஆகியோரின் அன்புமாமனாரும் சங்கீதா, கீர்த்தனன், கீர்தனா, கோகுலகிருஷ்ணன், யதுஷன், கபின்சன், நிதுனியா, நிதுஷ், நிதின், அஸ்வின், சச்சின், பூர்த்தி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2019) திங்கட் கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. ஒரு மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளிகோவிலடி, தாவடி வடக்கு. **தகவல்: குடும்பத்தினர்.**

(CS 23673/15/17)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 10 . 03 . 1961 இறப்பு 07 . 02 . 2018

அமரர்
V.N கந்தசாமி சண்முகநாதன்
(உரிமையாளர் San Traders,Sun Stores - பசறை)

நீதி: அபரபட்ச அட்டமி – 28.01.2019

" எங்கள் வாழ்வில் ஒளி தந்த அன்பான அப்பாவே புன்னகை பூத்த முகம் எங்கள் நெஞ்சங்களில் குடியிருக்க கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகி போனாலும் எம் முன்னே நீங்கள் எந்நாளும் உயிர் வாழ்கின்றீர்கள் "

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

136/4, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
என்றும் நினைவில் குடும்பத்தினர்.

076 542 8206

(CS 22845)(04.17)

ES Printers

357, Kasthuriyar Road, Jaffna.
021 492 7471 / 021 492 7472

கிளை அலுவலகம்:-
New Market, 1st Floor, Chavakachcheri
021 492 7432
esprintersjaffna@gmail.com

31 ஆம் நாள் நினைவஞ்சலி



உதிப்பு 19 . 01 . 1938 உதிர்வு 29 . 12 . 2018

அமரர் மருதமுத்து சிவசுப்பிரமணியம்

நேற்றுவரை நெஞ்சோடு வீசிய காற்று
நேரிலிருந்து எம்மையெல்லாம் நேசித்த ஜீவன்
தேற்ற வழியின்றித் தேம்பியழ தூரப் பறந்ததெங்கே
நனைகிறதெம் விழிமடல்கள்
தீராத்துயர் தீரத் திரும்பி வரமாட்டீரோ!

கடந்த 29.12.2018 அன்று இறைபதமடைந்த எம் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (28.01.2019) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வீரபத்திரர் கோயிலடி, கச்சாய் வீதி, சாவகச்சேரி. **குடும்பத்தினர்.**

(CS 23673/15/17)

பாதுகாப்புச் செயலரை உடன் பதவி நீக்கவும்!

மைத்திரிக்குப் பல தரப்பினரும் அழுத்தம்

கொழும்பு, ஜன. 28

இலங்கையின் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னான்டோவைப் பதவி நீக்க வேண்டும் என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இராணுவத்தில் உள்ள அனைவரும் போர் வீரர்கள் அல்ல என்றும், இராணுவத்தில் உள்ள ஒருவர் குற்றம் செய்தால் அவர் குற்றவாளி தான் என்றும் நாலந்தா கல்லூரியில் நடந்த நிகழ்வில் பாதுகாப்புச் செயலர் ஹேம சிறி பெர்னான்டோ கூறியிருந்தார்.

விருதுகளைப் பெற்றவர்கள்தான் போர் வீரர்கள் என்றும் குறிப்பிட்ட அவர், அடுத்த இரண்டு வாரங்களில் இராணுவத்தினர் 11 பேருக்கு எதிராக நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு சுமத்தப்படும் என்றும் அதற்குப் பின்னர் புலம்பெயர் தமிழர்களால் வாய் திறக்க முடியாது எனவும் தெரிவித்திருந்தார்.

அவரது இந்தக் கருத்துக்கு முன்னாள் படை அதிகாரிகள், கடும்போக்கு சிங்கள அரசியல் வாதிகள் மத்தியில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளன.

இதுதொடர்பாக மைத்திரிபால சிறிசேனவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச பேசியுள்ளார். இதுகுறித்து அவர் தகவல் வெளியிடுகையில், 'ஆயுதப்படையினரை விமர்சிக் கும் வகையில் பாதுகாப்புச் செயலர் உரையாற்றினார் என்று தகவல் கிடைத் ததும், மைத்திரிபால சிறிசேனவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினேன். இது மைத்திரியின் கருத்தைப் பிரதிபலிப்பதாகத் தோன்றுகிறது என்று நான் அவரிடம் கூறினேன்.

அதற்கு அவர், பாதுகாப்புச் செயலர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு அவரது சொந்த இடத்தில் இருக்கிறார் என்றும், இந்த செய்தி சரியானதாக இருக்காது என்றும் கூறினார். அடுத்த நாள், மைத்திரி என்னைத் தொலைபேசியில் அழைத்தார். பாதுகாப்புச் செயலர் அப்படிக் கூறியிருக்கிறார் என்பது உண்மை தான் என்று தெரிவித்தார். பாதுகாப்புச் செயலரை அழைத்து, இது குறித்து அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது என்று கூறுமாறு மைத்திரியிடம் கூறினேன். இராணுவத்தினர் மீது குற்றச்சாட்டு இருந்தால் அவர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்யுமாறு புலம்பெயர்ந்தோருக்கு அழைப்பு விட பாதுகாப்புச் செயலருக்கு அதிகாரம் இல்லை. அத்தகையவர்கள் எமக்குத் தேவையில்லை. அவரது கருத்தை வன்மையாக கண்டிக்கிறோம். பாதுகாப்புச் செயலர் பதவிக்கு அவர் பொருத்தமானவர் அல்ல" என்றும் தெரிவித்தார்.

அதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில உள்ளிட்டவர்களும், முன்னாள் படை அதிகாரிகளும் ஹேமசிறி பெர்னான்டோவின் கருத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். அவரைப் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (த)

மரண அறிவித்தல்கள்



சுப்பிரமணியம் குலேந்திரன்

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் மயிலிட்டி தெற்கு, கட்டுவனை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் குலேந்திரன் கடந்த (26.01.2019) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லம்மாவின் (கமலம்) கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - முத்தம்மா தம்பதிகளின் மகனும் இராசேந்திரம் (கனடா), வரதராசா (ஜேர்மன்), சந்திரா (திருநெல்வேலி), காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் சகிலா (கலா - லண்டன்) சதீசன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகுமார், சுகன்யா ஆகியோரின் மாமனாரும் ஆகாஸ், அபிஷா, சாய் அபினேஷ், ஷரிஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் தவமணி, நாகம்மா, தருமராசா, வேலாயுதம், கந்தசாமி, ஜெயராஜா, தவராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.01.2019) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

08, ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். 077 829 0351

தகவல்: குடும்பத்தினர்.

செல்லத்துரை கணேசமூர்த்தி



யாழ். காரைநகர் பல காட்டைப் பிறப்பிடமாகவும், பண்டாரவளையை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை கணேசமூர்த்தி 25.01.2019 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான செல்லத்துரை - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - பாக்கியம் தம்பதிகளின் மருமகனும், சிவஞானத்தின் பாசமிகு கணவரும், மயூரன் (பண்டாரவளை), மகிதினி (ஆஸ்திரேலியா), மதனரூபன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சசிகலா, சதிஷன் (ஆஸ்திரேலியா), சொர்ணஜோதி ஆகியோரின் அன்பு மாமனாரும், யனோத், யாமினி, மாதுளன், அங்கணி, அங்கஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சுரேந்திரன் மற்றும் இராஜேந்திரன், ஞானேந்திரன், ரவிந்திரன், நாகேஸ்வரி, பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2019) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பண்டாரவளை மாநகரசபை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/22893)(1.17)

தகவல்: குடும்பத்தினர்.

சிவஞானம் - +945722 23206, +94 779 677 362

90 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தாயின் மடியில்
08 . 11 . 1996

ஆண்டவன் அடியில்
31 . 10 . 2018

அமரர் அழகராசா புவனநிதர்சன் (புவி)

கடந்த 31.10.2018 அன்று அகாலமரணமடைந்த எமது குடும்பக் குல விளக்கு அமரர் அழகராசா புவனநிதர்சன் அவர்களின் மரணச்செய்தி கேட்டு உடன் ஓடி வந்தோருக்கும் உள்நாடுகளிலும், வெளிநாடுகளிலும் இருந்து முகநூல், தொலைபேசி, குறுந்தகவல்கள், மின்னஞ்சல், துண்டுப் பிரசுரம் வழங்கியோருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், மாணவர் சமூகத்தினர் அனைவருக்கும் பதாகை வாயிலாக மலர் வளையம், மலர் மாலையிட்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், சுன்னாகம் இலங்கை வங்கி ஊழியர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை வழங்கியோருக்கும் மேலும் பாராளுமன்ற உறுப்பினர் கஜதீபன் மற்றும் நினைவுப்பேருரை ஆற்றிய அனைவருக்கும், இறுதி அஞ்சலியில் கலந்து சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு சிவபதப் பேறு குறித்த அந்தியேட்டி நிகழ்வுகள் இன்று (28.01.2019) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், பிற்பகல் ஒரு மணிக்கு அன்னாரது இல்லத்திலும் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

ஊரெழு வடக்கு, சுன்னாகம்.

(cs/22837) (13.17)

குடும்பத்தினர்

மரண அறிவித்தல்

ஞானப்பிரகாசம் இம்மானுவேல் (சொற்கேளான்)

பாசையூரைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் இம்மானுவேல் (சொற்கேளான்) 25.01.2019 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்துள்ளார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.01.2019) திங்கட்கிழமை பிற்பகல் 3மணியளவில் அவரது இல்லத்திலிருந்து பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மனைவி.

(CS/22899)(1.17)

இசபெல்லா (இராசகிளி)

077 217 3386, 076 6511675

கண்ணீர் அஞ்சலி



கௌரவ
கல்வி இராஜாங்க அமைச்சர்
விஜயகலா மகேஸ்வரன்
அவர்களின் பாசமிகு தந்தை

பரமு மார்க்கண்டு

அவர்கள் நேற்று முன்தினம் 26.01.2019 அன்று இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கல்லூரிச் சமூகம்
யா/ சோமஸ்கந்தாக் கல்லூரி ,புத்தூர்
யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி
யா/கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி
யா/அச்சுவேலி ஆரம்ப பாடசாலை

கண்ணீர் அஞ்சலி

வடமராட்சி
வலயக்கல்விப்பணிப்பாளர்
திரு.யோ.ரவீந்திரன்
அவர்களின் பாசமிகு தந்தை

தில்லையர் யோகசாமி

அவர்கள் நேற்று (27.01.2019) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

யா/நெல்லியடி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) சமூகம்

உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.சிதம்பரநாதன் இளந்திரையன்
MED (1st Class)
MA (2nd upper)

திருமதி மதியராணி செந்தூரன்
B.F.A
P.G.D.E

Congratulations

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 34 ஆவது பட்டமளிப்பு விழாவில் (22.01.2019) எமது பாடசாலையிலிருந்து முதுகல்வியியல்மானி பட்டப்பின் கல்விடிப்ளோமா பட்டங்களினைப் பெற்றுக்கொண்ட எமது ஆசிரியர்களை உளமார பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கச்சாய் அ.த.க. பாடசாலை கொடிகாமம்.

(cs 00540) (13.17)

எம் கணித ஆசானுக்கு எம் கண்ணீர் அஞ்சலி



A.S. அகஸ்ரின்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்
யா/புனித பத்திரிசியார் கல்லூரி)

அவர்கள் 26.01.2019 அன்று இறைவனடி சேர்ந்த எம் கணித ஆசானின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

96ஆவது A/L பிரிவு பழைய மாணவர்கள் சார்பாக
X. ஜெயமாறன் விஜயதெய்வேந்திரன்
யா/புனித பத்திரிசியார் கல்லூரி

மரண அறிவித்தல்

தில்லையர் யோகசாமி

(ஓய்வுநிலை அதிபர் - யா/உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி, சமாதான நீதவான்)



தோற்றம் 26.10.1935 மறைவு 27.01.2019

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையார் யோகசாமி (ஓய்வு நிலை அதிபர் - யா/உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி, சமாதான நீதவான்) நேற்று (27.01.2019) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையர் - மயிலி தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்ற கோபால் - தங்கம் தம்பதிகளின் மருமகனும் தங்கராணியின் பாசமிகு கணவரும் ரவிந்திரன் (வலயக் கல்வி பணிப்பாளர் - வடமராட்சி), பாபு (சுவிஸ்), ரதி (கனடா), கோபு (சுவிஸ்), ராகுலன், ராதா (ஆசிரியை - யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஜெயராணி (ஆசிரியை - யா/ உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி), நலினி (சுவிஸ்), குகதாசன் (கனடா), சிவனேஸ்வரி (சுவிஸ்), மங்களஜெயா, ரவிந்திரன் (பிரதி அதிபர் - யா/ தொண்டமனாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயம்) ஆகியோரின் மாமனாரும் ராகவேந்திரன், ராகவர்ஷிதன், பாரத், நிலானி, பிரியந், பிரியங்கா, பிரவண்யா, பிரவீன், மாதுளா, மதுமிதா, மகிழினி, கயல்நீலவன், கயல்த்தேவன், கயல்வீணா, திவ்யாஞ்சன், ஸ்வப்ரதாரா, ஹர்ஷப்ரதா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2019) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"யோகஸ்தான்"
வல்வெட்டி, வல்வெட்டித்துறை.

தகவல்: குடும்பத்தினர்.
யோ.ரவீந்திரன் (மகன்) 0777 222280,
நா.ரவீந்திரன் (மருமகன்) 0777 239 690.

வேண்டாம் "லேட்" செல்லுங்கள் "நோர்த் கேட்"



இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணம் செல்ல தவறுவதில்லை. வெளி நாட்டுக்கு புலம்பெயர்ந்துள்ள நமது தமிழர்கள் யாழ்ப்பாணம் வருவதும் அங்கு தமது குடும்ப சுப நிகழ்வுகளை நடத்துவதும் வழமை.

அப்படியான தரப்பினருக்காக தனது ஹொட்டேல் சேவையை நவீனமயப்படுத்தி கிட்டத்தட்ட கொழும்பில் இருப்பதை போல ஒரு உணர்வை ஏற்படுத்தி சேவைகளை வழங்கி வருகிறது ஜெட்விங் ஹொட்டேல் குழுமத்தின் ஜெட்விங் நோர்த் கேட் ஹொட்டேல்.

44 சொகுசு அறைகளுடன், நீச்சல் தடாகம், உடற்பயிற்சிக் கூடம், திருமண மண்டபம் உள்பட வசதிகளைக் கொண்டுள்ள ஜெட்விங் நோர்த் கேட் ஹொட்டேல் இலங்கை கலை கலாசார விழுமியங்களுடன் தனது சேவையை யாழ்ப்பாணத்தில் ஆற்றி வருகிறது.

சிறப்பு விருந்தினர்களுக்கான 4 சிறப்பு வசதிகள் கொண்ட அறைகள், குடும்பங்கள் தங்குவதற்கான விசாலமான நான்கு அறைகள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு அனைத்து சிறப்பு உணவுகளையும் பெறும் வசதி இங்கு இருப்பது' சிறப்பு அம்சமாகும்.

'யாழ்ப்பாணத்தில் சிறப்பு வைபவங்கள் குறிப்பாக திருமணம் மற்றும் சுபநிகழ்வுகளை நடத்த வேண்டுமாயின் எம்மிடம் தொடர்பு கொண்டால் நாங்கள் மண்டப அலங்கரிப்பு, மேளதாளங்கள் உணவு மற்றும் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தருவோம். வீட்டுக்காரர்கள் வந்து நிகழ்வுகளை நடத்த வேண்டியது மட்டும் தான். மண்டபத்தில் 400 பேர் ஒரேயடியாக இருக்கலாம். மேசைகள் இடும் பட்சத்தில் 250 பேர் முதல் 300 பேர் வரை அமரலாம். தேவைப்படின் பிரதான உணவகத்தையும் எடுக்க முடியும். சிறந்த சேவை ஒன்றே எமது தேவை. மக்களின் திருப்தி ஒன்று தான் எமக்கும் திருப்தி' என்று தெரிவிக்கிறார் ஜெட்விங் கேட் பொதுமுகாமையாளர் கிறிஸ்தோபர் பொன்னுத்துரை. யாழ்ப்பாணம் தொடருந்து நிலையத்துக்கு எதிராக அமைந்துள்ளதால் கொழும்பில் இருந்து தொடருந்தில் வருவோர் இறங்கியகையோடு ஹோட்டலுக்குள் செல்ல முடியும் என்பதற்கு மேல், சுற்றுலா இடங்களுக்கும் இலகுவாகச் செல்லக் கூடிய இடத்தில் நோர்த் கேட் ஹோட்டல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சேவைக்கு அப்பால் யாழ்ப்பாண இளையோர் பலருக்கு வேலைவாய்ப்பையும் வழங்கியுள்ள ஜெட்விங் நிறுவனத்தின் இரண்டு சொகுசு ஹோட்டல்கள் யாழ்ப்பாணத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் முன்னாள் கணித ஆசிரியரும் கல்லூரியின் பிரதி அதிபர் திரு.R.C. சுரேஸ் அகஸ்ரின் அவர்களின் பாசமிகு தந்தையுமாகிய

A.S. அகஸ்ரின்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புனித பத்திரிசியார் கல்லூரிக் குடும்பம்.

மரண அறிவித்தல்

திருமதி அரியமணி கதிர்த்தம்பி

1 ஆம் வட்டாரம் மண்ட தீவைப் பிறப்பிடமாகவும் இல.63 முதலி கோவில் வீதி கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அரியமணி கதிர்த்தம்பி நேற்று (27.01.2019) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.63 முதலி கோவில் வீதி
கொக்குவில் மேற்கு, கொக்குவில்

தகவல்:
குடும்பத்தினர்.

ஆரம்பக் கல்வியில் பெற்றோரின் பங்களிப்பும் ஆசிரியரின் பங்களிப்பும்

திருமதி பவானி டேவிட்

ஆரம்பக் கல்வியே ஒரு பிள்ளைக்கு அடி அத்திபாரமாகும். பிள்ளை விருத்தியில் ஒரு முக்கிய பருவமாகும். பிள்ளைகளின் அறிவு, திறன், மனப்பாங்குகள் கட்டியெழுப்பப்படும் களமாகும். இந்தப் பருவத்தில் பிள்ளைகளின் பலதரப்பட்ட வளர்ச்சிக்குச் சாதகமான சூழலை ஏற்படுத்தி அவர்களுக்கு உற்சாகமளிப்பதோடு தகுந்த முறையில் சரியாக அவர்களை வழிப்படுத்த வேண்டும். இந்தச் சூழலை ஏற்படுத்தவதற்கு வீடும் பாடசாலையும் பொருத்தமான களமாக அமைய வேண்டும்.

பிள்ளைகளின் சுதந்திரப் போக்கை பெற்றோர் உறுதிசெய்ய வேண்டும்

கேள்விகள் பிள்ளைகளின் சொத்து. தேடி ஆராய்வதில் அவர்கள் விஞ்ஞானிகள். ஆடல் பாடல்களில் அவர்களுக்குப் பெரு விருப்பு, பொருள்களைக் கையாள்வதில் ஒரு துடிப்பு. இவற்றுக்கு அனுமதியும் சந்தர்ப்பமும் வழங்குவது பெற்றோரின் கடமையாகும். இதன் மூலமே பிள்ளைகளின் ஆக்கத்திறன் சிருஷ்டிக்கப்படுகின்றது. வாழ்வு விளையாட்டென்பதே குழந்தையின் கருத்து. அதுவே கல்வி. இதனைப் பெற்றோரும் கல்விச் சமூகமும் உணர வேண்டும்.

பிள்ளை வளரும் ஆரம்பக் கூடம் அவர்களின் வீடாகும். குழந்தைகளுக்கு வீடே சொர்க்கம். பெற்றோர் உற்றாரின் உறவு, உள்ளத்துக்கு இதமான அன்பு, மனம் நிறைந்த காப்பு என்பவற்றைப் பிள்ளைகள் பெற்று வீட்டில் களிப்படைகின்றார்கள். இல்லத்தை அன்புப் பண்ணையாகவும் குழந்தைகளை அன்புப் பண்ணையிலே வளரும் அன்புப் பயிர்களாகவும் ஆக்கிடும் பொறுப்புடையவர்கள் பெற்றோர் ஆவர். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' இந்தக் கூற்றுக்கமைய பிள்ளை முதலில் காணும் தெய்வம் தனது தாயும் தந்தையுமே. பிறப்பிலிருந்து ஐந்துவரை தனது வீட்டிலே கல்வி கற்கின்றது. பிள்ளைகள் இளமையில் பழகும் பழக்வழக்கங்களே பச்சைமரத்து ஆணிபோல் பதிந்து வாழ்வோடு கலந்து நிலைத்து விடுகின்றன. சுகவாழ்வை வழங்கும் நிலைக்களமாகப் பெற்றோர், ஆசிரியர் விளங்குகின்றனர். இவர்களைப் பிள்ளைகள் என்றும் மறப்பதில்லை. வாழ் நாள்களில் நினைவுபடுத்திக் கொண்டிருப்பார்கள்.

கருவே அத்திபாரம்

குழந்தை ஒன்றின் சகல வளர்ச்சிகளும் தாயின் கருவிலேயே ஆரம்பமாகின்றன. குழந்தையைச் சுமக்கும்போதே நல்ல சிந்தனைகளை விதைக்கவும் நல்ல எண்ணங்களை எண்ணவும் நல்லவைகளைச் செய்யவும் ஆர்வம் காட்ட வேண்டும். நல்ல அறிவுள்ள நூல்களை வாசிக்கவும் முத்தமிழை ரசிக்கவும் வேண்டும். நல்ல போசாக்குள்ள உணவை உட்கொள்வது மிக முக்கியம். இதன் மூலமே ஆரோக்கியமுள்ள குழந்தையைப் பெற்றெடுக்க முடியும்.

பிள்ளை பிறந்த பின்பு அவனை அல்லது அவளைச் சரியாக வளர்ப்பதில் பெற்றோர் உத்வேகத்துடன் தொழிற்பட்டால் நல்ல அறிவுள்ளவனாக வளர்த்துவிட முடியும். சிறார்கள் அம்பு போன்றவர்கள். அந்த அம்பை இலக்கை நோக்கி வழிநடத்தவது பெற்றோர் ஆசிரியரின் கடமையாகும்.

வீட்டில் பிள்ளை தனது அயற்சூழல் மூலமும் தொடர்பாடலை ஏற்படுத்திக் கொள்கின்றது. அனுபவங்கள் ஊடாக மகிழ்ச்சியை அனுபவிக்கின்றது. இந்தப் பருவத்தில் பெற்றோரின் அன்பு, கவனிப்பு, காப்பு, அரவணைப்பு என்பவற்றைப் பிள்ளைகள் எதிர்பார்ப்பார்கள். "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையில். அவன் நல்லவன் ஆவதும் தீயவன் ஆவதும் அன்றை வளர்ப்பினிலே" இதற்கமைய ஒரு குழந்தையின் உணர்வும் தாழ்வும் தாயின் கையிலேயே உள்ளது. ஒரு தாய் பாலூட்டிச் சீராட்டி உணவூட்டி வளர்க்கும்போது நல்ல சிந்தனைகளையும் நல்ல எண்ணங்களையும் சிறார்களுக்கு ஊட்டி வளர்க்க வேண்டும். குடும்பத்தில் பிள்ளை தாயாருடன் கூடிய நேரத்தைச் செலவிடுகின்றது. தாயானவள் நல்ல எண்ணக் கருவை பிள்ளைகளுக்குக் குடும்பச் சூழல் தொடர்பாடல் மூலம் உட்புகுத்த வேண்டும். குடும்பச் சூழலே பிள்ளையின் கோயிலாகும்.

தந்தையின் வகிபங்கும் இன்றியமையாத ஒன்று

'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' இதற்கமைய தந்தையின் அறிவுரை, கண்டிப்பு பிள்ளைக்குக் கட்டாயம் கிடைக்க வேண்டும். பெற்றோர் பிள்ளைகளிடத்தேயான உறவு வலுப்பெற வேண்டும். அன்பு, ஆதரவு வளர வேண்டும். கல்வியில் மட்டுமல்ல பிள்ளைகளை ஆன்மிகத்திலும் ஆழ்ந்தெழச் செய்வதிலும் பெற்றோர் அக்கறை எடுக்க வேண்டும். குடும்ப அலகு எந்த எவுக்குப் பலமாக ஆன்மிக விடயங்களிலும் ஏனைய வாழ்வுக்கான அடிப்படைக் காரியங்களிலும் செயற்படுகின்றதோ அந்தளவுக்கு ஒவ்வொரு பிள்ளையினதும் எண்ணங்கள், நம்பிக்கைகள் சார்ந்த உணர்வுகள் ஆழமாக வேரூன்றிச் செழிப்படைகின்றன.

தமது பிள்ளைகளின் கல்வியில் வெற்றியடைய ஆசிரியர்களுடன் நல்ல தொடர்பாடல் மூலம் இடைத் தொடர்பைப் பேணிவர வேண்டும். பிள்ளைகளின் பலம் பலவீனங்களை அவர்களிடம் அறிந்து வெற்றிநடை போட வேண்டும். ஆரம்பக் கல்வியில் பெற்றோர்களின் பங்களிப்பு எவ்வளவு முக்கியத்தவம் வாய்ந்ததோ அதேபோல் ஆசிரியரின் பங்களிப்பும் முக்கியமாகும். மாணவர்கள் பட்டாம்பூச்சிகள் போன்றவர்கள் பாடசாலை ஒரு நந்தவனம் போன்றது. அந்த நந்தவனத்தில் அவர்கள் சுவையான தேனைச் சுவைத்து மகிழ வேண்டும். இந்தச் சுவையான தேனை ஆசிரியர்கள்தான் அவர்களுக்கு வழங்க வேண்டும். தவறும் பட்சத்தில் அந்தப் பட்டாம்பூச்சிகள் நந்தவனத்தை விருப்பத்துடன் நாடமாட்டார்கள்.

விளையாட்டு முறைக் கல்வி மிகச் சிறந்த அணுகுமுறை

வீட்டை விட்டுப் பாடசாலை வரும் சிறார்களுக்கு ஆசிரியர்கள் தான் பெற்றோரின் பாத்திரமேற்று அன்பாகவும் ஆதரவாகவும் அணைக்க வேண்டும். மாணவர்கள் ஆசிரியரை நம்ப வேண்டும். இந்த நம்பிக்கையை ஆசிரியர் உருவாக்கிக் கொள்ள வேண்டும். வீட்டில் ஆடிப்பாடி மகிழ்ந்த குழந்தையின் விளையாட்டு விருப்புணர்ச்சிகள் துண்டிக்கப்படாமல் தூண்டப்பட வேண்டும். விளையாட்டு முறைக் கல்வி மூலம் போதனைகளும் சாதனைகளும் இடம்பெற வேண்டும். உடல்உள வளர்ச்சியோடு சமூக உணர்வும் அனுபவமும் கட்டியெழுப்பப்பட வேண்டும். பிள்ளைகளின் அறிவு திறன் மனப்பாங்கை நல்ல முறையில் வளர்க்க ஆசிரியர் முயற்சிக்க வேண்டும்.

கல்விக்கூடம் வறண்ட பாலைவனமாகக் காட்சிதரின் அதன் வெம்மை தாக்கவே பிள்ளைகள் அங்கிருந்து தப்பியோடத் தயாராகின்றனர். சிற்பி எவ்வாறு கல்லைச் செதுக்கி மெருகூட்டிச் சிறந்த அழகான சிற்பத்தை வடிக்கின்றானோ ஆசிரியனும் அவ்வாறுதான். பிள்ளையின் உடல் உள சமூக சமய கைப்பணி வளர்ச்சியை உருவாக்கும் சிற்பியாகின்றான்.

பிள்ளையின் ஆளுமை தானாக வளர்கின்றது. ஆசிரியன் பிள்ளைகளிடம் தான் கற்பவன் போல் மாறி நின்று வீட்டுக்குப் புறம்பான அனுபவத்தைப் பெற நாடிவரும் பிள்ளைகளின் மனதறிந்து ஒழுங்கு, பொறுப்பு, அழகுக் கவர்ச்சி, எண்ணோடெழுத்து எது என்பதை அவர்களைக் கொண்டு இனங்காண வைத்தல் ஆசிரியரின் பணியாகின்றது. இதன்மூலம் மாணவர்கள் தன்னம்பிக்கையும் மனத்திருப்தியும் அடைகின்றார்கள்.

சிறுவர் உளவியலின் மேன்மையை அறிந்து உணர்ந்து உயர் சிந்தனையுடன் ஆசிரியர் கற்பிக்க வேண்டும். அடிக்கடி கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும். இதன் மூலம் மாணவரது அபிவிருத்தியையும் அடைவையும் உயர்மட்டத்தில் வைத்திருக்க முடியும். வகுப்பறைச் சூழலை மிகக் கவர்ச்சிகரமாக்க முயற்சிக்க வேண்டும். சிறார்களுக்கு வகுப்பறையில் தண்டனை மற்றும் தேவையற்ற கட்டுப்பாடுகளை நீக்கி எல்லா மாணவர்களின் தேவைகளைத் தேடி அறியும் ஓர் ஆர்வலராக ஆசிரியர் காணப்பட வேண்டும்.

தவிர்க்கப்பட முடியாத வகுப்பறைச் சூழ்நிலை

வகுப்பறையில் மாணவர்களது செயற்பாடுகள் ஆக்கபூர்வமாக அமையுமெனில் அங்கு வெற்றியோடு கூடிய சூழ் நிலை காணப்படும். புத்துயிர்ப்பான புதிய புதிய உத்திகளை மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் நடைமுறைப்படுத்தி வந்தால் மாணவர்கள் ஆர்வத்தோடு கற்றலில் ஈடுபடுவார்கள். பாலர் கல்வி, இளமையிற் கல்வி சிறப்பானது. பிஞ்சு உள்ளங்களின் நிலை உணர்ந்து விருப்பமறிந்து அவர்களைச் சரியான இலக்கை நோக்கி வழிப்படுத்த வேண்டும்.

சிறார்களின் உள்ளங்கள் கள்ளங்கபடமற்ற வெள்ளை உள்ளங்கள். அதில் கறைகள் ஏற்படாதவாறு பேணுவது ஆசிரியரின் பெரும் பொறுப்பு. அநாகரீகமான சொற்பிரயோகங்களைத் தவிர்த்து அன்பான வார்த்தைகளைப் பிரயோகிக்க வேண்டும். பிள்ளைகள் செழிப்பான பயிர்கள். அங்கு வளரும் களைப் பிடுங்கி எறிபவராக ஆசிரியர் செயலாற்ற வேண்டும்.

மாணவர்கள் பாடசாலையில் இருக்கும் நேரங்களில் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் பொறுப்பு ஆசிரியருடையது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மாணவர்கள் பாடசாலைக்கு வர முன்னரே ஆசிரியர் அங்கு சென்றுவிட வேண்டும்.

வகுப்பறை சார்ந்த கற்பித்தலில் ஆசிரியர் எல்லா மாணவர்களையும் சமனாக மதிக்க வேண்டும். கல்வி சார்ந்த முயற்சியில் ஊக்குவிப்புக்கள் வழங்கி உற்சாகமூட்ட வேண்டும். கல்வி வளர்ச்சியில் பெற்றோருடன் சிறந்த தொடர்பாடலைப் பேணி உச்ச ஒத்துழைப்பைப் பெற்று உன்னத நிலையில் செயலாற்ற வேண்டும. பிள்ளைநேயப் பாடசாலையாக மாற்ற வேண்டும். கல்விக் களம் பிள்ளைகளுக்கு உடல் உள வளர்ச்சிக்குத் தீனிபோடுகின்றன. அதைச் சுவைக்கும் எதிர்காலச் செல்வங்கள் பாடசாலை மேல் பற்றுக் கொள்கிறார்கள். வகுப்பறை குழவிப் பூங்காவாகவும் அழகுறும் காட்சிக்கூடமாகவும் மாறி தாய்மொழிக் கல்வியையூட்டும் தாயாக ஆசிரியர்கள் பிள்ளைகளால் உணரப்படுகின்றார்கள்.

கல்வியின் அத்திபாரம் ஆரம்பக் கல்வியேயாகும். அது பலமானதாகவும் உறுதியானதாகவும் கட்டியெழுப்பப்பட வேண்டும். இதற்குப் பெற்றோரும் ஆசிரியரும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம். ஆரம்பக் கல்வி வளர்ச்சிக்கு இவை இரண்டும் ஆணிவேராக அமைகின்றது. 'ஆரம்பப் பள்ளியிலே ஆனந்தமாய்ச் சென்றேன்' என்ற கனவுகளைச் சுமந்து கொண்டு அடுத்த கட்டம் நகல வழிசமைப்போம். மெய்யுணர்வோடு செயலாற்றி வெற்றியை ஈட்டுவோம்.

கட்டுரையாளர்: ஆசிரியர்
பாசையூர் சென்.அன்ரனிஸ்
றோ.க.ம.வி.

பளைப் பிரதேச எல்லேத் தொடரில் புலோலி கிழக்கு அதிசயம் மகுடம்

யாழ்ப்பாணம், ஜன. 28

பளை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்கள் பிரிவு எல்லே தொடரில் புலோலி கிழக்கு அதிசயம் அணி கிண்ணம் வென்றது.

பளை பொதுவிளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் புலோலி கிழக்கு அதிசயம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புதிய இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இளந்தளிர் அணி 40 பந்துகளில் 2 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக தேனுஷா 2 ஓட்டங்களைப் பெற்றார்.

3 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அதிசயம் விளையாட்டுக் கழக அணி 6 பந்துகளில் 3 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. அதிகபட்சமாக வனிதா 2 ஓட்டங்களையும், பிரியா ஓர் ஓட்டத்தையும் பெற்றனர்.

(ம-23)



வென்றது நாவலர் அணி

யாழ்ப்பாணம், ஜன. 28

நவாலி தென்றல் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சுதுமலை நாவலர் அணி வெற்றிபெற்றது. தென்றல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து காந்திஜி விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்டநேர முடிவில் 10:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சுதுமலை நாவலர் அணி வெற்றிபெற்றது. (ம-23)

காளியம்பாள், சித்திவிநாயகர் ஆட்டம் சமநிலையில் முடிவு

யாழ்ப்பாணம், ஜன. 28

நவாலி தென்றல் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியில் நடத்திய தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்று சமநிலையில் முடிந்தது.

தென்றல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சித்திவிநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்டநேர முடிவில் இரண்டு அணிகளும் தலா 4 புள்ளிகளைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலை கண்டது. (ம-23)

டிலாசல் அபாரம்

யாழ்ப்பாணம், ஜன. 28

மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கரப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் பாலை குழி டிலாசல் அணி வெற்றி பெற்றது.

ஆண்டான்குளம் பாடசாலை மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதி ஆட்டத்தில் பாலைக்குழி டிலாசல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விடத்தல்தீவு மேற்கு பிரென்ட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 3 செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. 2:0 என்ற கோல் கணக்கில் டிலாசல் அணி வெற்றிபெற்றது. (ம-23)

தோமஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன. 28

மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கரப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் ஆண்டான்குளம் சென். தோமஸ் அணி வெற்றிபெற்றது.

ஆண்டான்குளம் பாடசாலை மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆண்கள் பிரிவு இறுதி ஆட்டத்தில் ஆண்டான்குளம் சென். தோமஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற செற் கணக்கில் தோமஸ் சம்பியனானது. (ம-23)

அதிசயம் வி. கழகம் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஜன. 28

பளை பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் புலோலி கிழக்கு அதிசயம் அணி கிண்ணம் வென்றது.

பளை பொதுவிளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் புலோலி கிழக்கு அதிசயம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புதிய இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி மோதியது. 26:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அதிசயம் அணி வெற்றிபெற்றது. (ம-23)

ஸ்கந்தா முன்னிலை

சுன்னாகம், ஜன. 28

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தால் நடத்தப்படும் 19 வயதுக்குட்பட்டோருக்கான துடுப்பாட்டத் தொடரில் அண்மையில் இடம்பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு எதிரான ஆட்டத்தில் முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றது சுன்னாகம் ஸ்கந்தவரோதய.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். இந்துக் கல்லூரி அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா 9 இலக்குகளை இழந்து 304 ஓட்டங்களைப் பெற்றது. சோபிதன் ஆட்டமிழக்காது 105 ஓட்டங்களைப் பெற்றார். அணித் தலைவர் அஜந்தன் 50 ஓட்டங்களையும், கலிஸ்ரன் 41 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பதிலுக்குத் தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இந்துக் கல்லூரி அணி 185 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. மிலுக்சன் 47 ஓட்டங்களையும், ஜங்கரன் 38 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். அதிகபட்சமாக சோபிதன் 5 இலக்குகளை வீழ்த்தினார். பிரசன் 4 இலக்குகளைச் சாய்த்தார். 119 ஓட்டங்களால் முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்ற ஸ்கந்தா இரண்டாவது இன்னிங்ஸ்க்காக யாழ். இந்துவை துடுப்பெடுத்தாடப் பணித்தது. இரண்டாவது இன்னிங்ஸில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி 186 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக கோமைந்தன் 47 ஓட்டங்களையும், தனுசன் 39 ஓட்டங்களையும், ஜங்கரன் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஸ்கந்தா சார்பில் பிரசன் 5 இலக்குகளையும் தனுஜன் மற்றும் டான்சன் முறையே 3, 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

68 ஓட்டங்களைத் தமது வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா 5 இலக்குகளை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றபோது நாள் முடிவுக்கு வந்தது. நூலிழையில் ஸ்கந்தாவின் வெற்றி நழுவியது. ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. எனினும் ஸ்கந்தா முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றமையால் புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்றது. (ம)

யாழ்ப்பாணம் அளவெட்டி மத்தி விளையாட்டு கழகத்தின் கரப்பந்தாட்ட மைதானத்துக்கு வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் பொன்னம்பலம் ஆதவனினால் மின் விளக்குகள் கழக நிர்வாகத்திடம் கடந்த திங்கட்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. (ஜ-159)

இங்கிலாந்தின் முகத்தில் கரிபூசியது மே.இ.தீவுகள்

இங்கிலாந்துக்கு எதிரான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தில் அபார வெற்றிபெற்றது மேற்கிந்தியத் தீவுகள் அணி. இந்தத் தொடரை இங்கிலாந்து அணி 3:0 என்ற அடிப்படையில் கைப்பற்றும் என்று விமர்சனங்கள் குவிந்திருந்த நிலையில் முதலாவது ஆட்டத்தில் வெற்றிபெற்று இங்கிலாந்தின் முகத்தில் கரி பூசியது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

பிரிஜ்ரவுன் மைதானத்தில் கடந்த 23ஆம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 289 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ஹெட்மயர் 81 ஓட்டங்களையும், கோப் 57 ஓட்டங்களையும், சேஸ் 54 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அன்டர்சன் 5 இலக்குகளையும், ஸ்ரோக்ஸ் 4 இலக்குகளையும், மொயின் அலி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணி 77 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ஜெனிங்ஸ் 17 ஓட்டங்களையும், கரன் 14 ஓட்டங்களையும், ரசிட் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் றோச் 5 இலக்குகளையும், கோல்டர், ஜோசப் இருவரும் தலா 2 இலக்குகளையும், கபிரியேல் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.



இரண்டாவது இன்னிங்ஸ்க்காகத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 6 இலக்குகளை இழந்து 415 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக கோல்டர் 202 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காதிருந்தார். டவ்ரிச் 116 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் மொயின் அலி 3 இலக்குகளையும், ஸ்ரோக்ஸ் 2 இலக்குகளையும், கரன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

628 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 246 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. இதையடுத்து 381 ஓட்டங்களால் வெற்றிபெற்றது மேற்கிந்தியத் தீவுகள் அணி. பந்துவீச்சில் சேஸ் 8 இலக்குகளையும், கபிரியேல், ஜோசப் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். இரட்டைச் சதம் விளாசிய கோல்டர் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம)



இங்கிலாந்து அணியின் மேட்டுக்குடிப் போக்கை தகர்த்தெறிந்த ஆட்டம்

மேற்கிந்திய தீவுகள் அணி வீழ்ந்துவிட்ட அணிதான், ஆனால் ஒரு காலத்தில் இங்கிலாந்தை சொல்லி சொல்லி உதைத்த அணி மேற்கிந்தியத் தீவுகள். வீழ்ச்சிய டைந்தோரை கேலி, கிண்டல் செய்யும் அநாகரிகமான ஒரு மேட்டுக்குடிப் போக்கு இங்கிலாந்து கிரிக்கெட் கலாசாரத்திலேயே உள்ள ஒன்று. இதைத்தான் காலனிய, நிற மேட்டிமை, வெள்ளை மனோபாவம் என்று நாம் கடுமையாகக் கண்டிக்கிறோம்.

2014ஆம் ஆண்டில் ஹோல்டரிடம் தலைமைத்துவத்தைக் கொடுத்தபோது அவருக்கு வயது 23. அனைவரும் இவரை விமர்சித்தனர். மைக்கேல் ஹோல்டிங் உட்பட பலரும் அவரைக் கேலி செய்தனர். பாய்காட், இங்கிலாந்தின் கொழுப்பெடுத்த பத்திரிகைகள், வர்ணனையாளர்கள், முன்னாள் வீரர்கள் என்று பலரும் கேலி மேல் கேலி செய்து வந்தனர்.

இத்தனைக்கும் இங்கிலாந்து ஒருமுறை 438 ஓட்டங்களை இலக்காக நிர்ணயித்தபோது மேற்கிந்தியத் தீவு அணி 7 இலக்குகளை இழந்து 350 ஓட்டங்களைப் பெற்று சமன் செய்தது. அப்போது தன் சதத்தின் மூலம் கோல்டர் இங்கிலாந்தின் வெற்றிக்கனவை முறியடித்ததும் நினைவு கூரத்தக்கது. பின்னர் இங்கிலாந்து சென்று ஷேய் ஹோப், பிராத்வெய்ட் அபார சதத்தின் மூலம் டெஸ்ட் வெற்றியை ஈட்டியது.

ஆனால் இங்கிலாந்தின் வாய்க்கொழுப்பு அடங்கவில்லை, இங்குதான் ஆஸ்திரேலியாவுக்கும், இங்கிலாந்துக்கும் உள்ள வித்தியாசம். வீழ்ந்தோரை ஆஸ்திரேலியா ஊக்குவிக்கும் கேலி செய்யாது. ஆனால் இங்கிலாந்து வீழ்ந்தோரை மேலும் நசுக்கும், கேலி செய்யும், இழிவுபடுத்தும் படுமோசமான எண்ணப் போக்குக் கொண்டது.

இந்த நிலையில் 4 ஆண்டுகளுக்கு முன்பாக இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் தலைவர் கொலின் கிரேவ்ஸ், மேற்கிந்தியத் தீவுகள் அணியை தன் பதவியின் மரியாதையை மதிக்காமலும் கூட 'மிகச் சாமானியமான அணி, சாதாரணமான அணி' என்று வர்ணித்தார். இந்தக் கருத்து ஓய்வறையிலும் தொங்க விடப்பட்டது. இன்னொரு அணியை அவமானப்படுத்துவது அவர்கள் அணிக்கு உத்வேகமூட்டும் செயலாகப் பார்க்கப்பட்டது. ஆனால் மேற்கிந்தியத் தீவுகள் அணியை பார்படாஸ் டெஸ்ட்டை அப்போது வென்று தொடரைச் சமன் செய்தது. பீட்டர் மூர்ஸ் தன் பயிற்சியாளர் பதவியை இழந்தார்.

ஜெப் பாய்காட், கடந்த செவ்வாயன்று தி டெலிகிராப் பத்திரிகையில், 'மிகச் சாதாரணமான, சராசரி கிரிக்கெட் வீரர்கள், கடந்த அணிகளின் நிழல், இங்கிலாந்திலிருந்து வெஸ்ட் இண்டீஸ் செல்லும் கிரிக்கெட் ரசிகர்கள் அருமையான கடற்கரைகள், இசைக்குழுக்கள், மதுபானங்கள், என்று விடுமுறையில் என்ன கிடைக்குமோ அதெல்லாம் அனுபவிக்கலாம், ஆனால் கிரிக்கெட் கிடைக்காது' என்று கிண்டலடித்திருந்தார்.

2 ஆண்டுகளுக்கு முன்பாக எட்ஜ்பாஸ்டனில் ஹோல்டர் தலைமை மேற்கிந்தியத் தீவுகள் அணியை இங்கிலாந்து ஊதியது, உடனே பாய்காட் மிக மோசமான அணி என்று வசைபாடினார். ஆனால் அடுத்த ஹெடிங்லே டெஸ்ட் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வென்று முகத்தில் கரி பூசியது.

இத்தகைய பின்னணியில் பார்பேடோஸ் டெஸ்ட் போட்டியில் இப்போது இங்கிலாந்தை ஊதித்தள்ளியுள்ளது. இங்கிலாந்தின் மேட்டுக்குடித்தனமான வெள்ளை நிற, இன மேட்டிமை புருவந்தூக்கி கருத்துகளையும் கேலிப்பார்வைகளையும் இழிவுபடுத்தல்களையும் கோல்டரின் இரட்டைச் சதம் உடைத்தெறிந்துள்ளது.





இந்தியா – நியூசிலாந்து மூன்றாவது ஆட்டமின்று

இந்தியா இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் மூன்றாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இந்திய அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதல் இரண்டு ஆட்டங்கள் முடிவடைந்த நிலையில் அவை இரண்டிலும் இந்திய அணி வெற்றிபெற்றுள்ளது. மூன்றாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்திலும் இந்திய அணி வெற்றிபெற்றால் அந்த அணி கிண்ணம் வெல்வதை உறுதிப்படுத்தும். சொந்த மண்ணில் கிண்ணத்தைப் பறிகொடுக்காமல் இருப்பதற்காக இன்று நடைபெறும் ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடி நியூசிலாந்துக்கு உள்ளது. (ம)

பெப்ரவரி மத்தியில் பூப்பந்துத் தொடர்

யாழ்ப்பாணம், ஜன. 28

ஈஸ்ட் ஈகிள் பிமார்சஸ் கழகம் யாழ்ப்பாணம் மாவட்ட பூப்பந்தாட்டச் சங்கத்துடன் இணைந்து நடத்தத் திட்டமிட்ட பூப்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் 15ஆம் திகதிமுதல் இடம்பெறவுள்ளது.

அரியாலை சரஸ்வதி பூப்பந்தாட்டத் திடலில் இந்தத் தொடரின் ஆட்டங்கள் இடம் பெறவுள்ளன. 15, 17, 20 வயதுப்பிரிவு இருபாலாருக்குமான திறந்த பிரிவு, 40 வயதுக்கு மேற்பட்ட இருபாலாருக்குமான திறந்த பிரிவு என்றவாறாக தொடரின் ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. பதிவுசெய்யவுள்ள கழகங்கள் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-23)

விளையாட்டு போட்டிகளுக்கு விண்ணப்பிக்குக

யாழ்ப்பாணம், ஜன. 28

அரியாலையின் 100ஆவது சுதேசிய விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியில் கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கபடி, தாச்சி, கயிறிழுத்தல், உள்ளிட்ட போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இந்தத் தொடரில் கலந்துகொள்ளவுள்ள கழகங்கள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-23)

ஆஸித் தொடரில் ஜோகோவிக் சம்பியன்
இலகுவாக வீழ்த்தப்பட்டார் ரபேல் நடால்

பன்னாட்டு அந்தஸ்து பெற்ற பகிரங்கத் தொடர்களில் ஒன்றான ஆஸ்திரேலியத் தொடரில் கிண்ணம் வென்றார் சேர்பிய வீரர் நொவக் ஜோகோவிக்.

ஆண்டின் முதலாவது பன்னாட்டு அந்தஸ்து பெற்ற பகிரங்கத் தொடரான ஆஸ்திரேலியத் தொடர் நேற்று நிறைவுக்கு வந்தது.

நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் ஸ்பெய்ன் வீரர் நடாலை எதிர்த்து சேர்பிய வீரர் ஜோகோவிக் மோதினார்.

ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் மூன்று செற்களையும் முறையே 6:3, 6:2, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி நேர்செற் கணக்கில் கிண்ணம் வென்றார் ஜோகோவிக்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் ஜோகோவிக் உள்ளார். அவர் ஆஸ்திரேலியத் தொடரில் கிண்ணம் வெல்லும் நம்பிக்கையை ஏற்கனவே வெளிப்படுத்தியிருந்தார். இதன்படி அவர் இந்தத் தொடரில் கிண்ணம் வென்றுள்ளார்.

இந்த வெற்றியின் மூலம் அடுத்த சில மாதங்களுக்கு தரப்படுத்தலில் தனது முதலிடத்தை உறுதிப்படுத்தினார் ஜோகோவிக். (ம)

சாய்னா சம்பியன்

இந்தோனேசியா மாஸ்டர்ஸ் ரெனனிஸ் தொடரில் கிண்ணம் வென்றார் இந்திய வீராங்கனை சாய்னா நேவால்.

நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் சாய்னாவைஎதிர்த்து ஸ்பெய்ன் வீராங்கனை மரின் மோதினார். முதலாவது செற்றில் 10:03 என்று முன்னிலையில் மரின் இருந்த வேளையில் அவருக்குக்காலில்காயம் ஏற்பட்டது. இதையடுத்து அவர் ஆட்டத்தில் இருந்து விலக சாய்னா சம்பியன் என்று அறிவிக்கப் பட்டார். (ம)

A/L Physics Class
பௌதீகவியல் பாடம்
(Personal Class)
தனிப்பட்ட முறையில்
கற்பிக்கப்படும்.
076 369 9696

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
O/L, A/L எழுதியோர், இளைஞர் யுவதிகள், தொழில்புரிவோருக்கான
3 மாத உரையாடல் மூலமான ஆங்கிலப்பயிற்சிநெறி.
ஆங்கிலத்தில் ஓரெழுத்துத்தெரியாதவர்களும் மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம்பேசமுடியுமென நிரூபிக்கப்பட்ட பாடநெறி
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 02.02.2019 சனிக்கிழமை
1. காலை : 08-10 3.மதியம் : 01-03 (இடமில்லை)
2. காலை : 10-12 4.மாலை : 03-05
வாரநாள் (செவ்வாய், வியாழன்) பயிற்சி ஆரம்பம் 05.02.2019
பிரிவு I : 8.30 - 10.30
31.01.2019 வியாழனன்வரை முன்பதிவுகளை மேற்கொள்ளமுடியும்!
SAAMSON Experts in English Training
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்.
077 621 4567 222 4282

நீர்ஸ்கா நினைவலைகள்
7 ஆம் ஆண்டு 21 ஆம் ஆண்டு

இரத்தினம் நடராசா
(Retd - Adminstrative Officer
Education Department - Jaffna)
04.09.1927 மலர்வு 22.04.1935
28.01.2011 உதிர்வு 28.01.1997

திருமதி நாகேஸ்வரி நடராசா

எல்லாம் வல்ல ஞானவைரவர் சுவாமியின் ஆசியுடனும்
சந்திரசேகர பிள்ளையாரின் ஆசியுடனும்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அன்புத் தம்பி
இரத்தினம் சண்முகராஜா குடும்பம்
பரிஸ், பிரான்ஸ்.

அன்பு மகள்
ஜயந்தி - யோகராஜா குடும்பம்
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
(CS 22373)(4.17)

ராசி அதிர்ஷ்டம்
திகதி 27.01.2019 | வெற்றி வாரம் 2444 | வர்ணம் ஊதா
கும்பம்
வெற்றி இலக்கங்கள் 08 10 18 43
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 8, 610, 170 /=
2019.01.29 ம் திகதி செவ்வாய்க் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது தனித அனுப்பவும் 1919

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 913
சீட்டிழுப்பு திகதி 2019.01.26 சனிக்கிழமை
L 24 37 53 58
தொ.பே: 0112 333 545/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
சிவப்பு நிற டிக்கட்டுகள் 2019.01.27ம் திகதி ஞாயிறுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

கோடிபதி கனிதா
கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 399
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.01.27
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 111,180,863/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள் M 27 38 67 71
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
அல்லது தனித அனுப்பவும் - 0114 824 824, 0112 333 778

அது கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 508
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.01.27
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 57,346,475/-
வெற்றி இலக்கங்கள் 25 36 37 50
ஆங்கில எழுத்து H
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
அல்லது தனித அனுப்பவும் - 0114 824 824, 0112 333 778

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.